வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu வார மலர்

Email : eelanaduweekly@gmail.com மலர் : 07 04.01.2026 ஞாயிற்றுக்கிழமை இதழ் : 04 பக்கங்கள் : 16

மாருதி Money Exchange (Pvt) Ltd.
MARUTHI MONEY EXCHANGE
இல.390. ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433 076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram. money transfer — மணிகிறாம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

## இலங்கை உள்ளிட்ட நாடுகளில் தொடரும் ஊடக அடக்குமுறை!

### விவாதிக்க சார்க் பத்திரிகையாளர் மாநாடு இன்று இந்தியாவில் ஆரம்பம்

கொழும்பு, ஜன. 04

பத்திரிகையாளர்கள் துறையின் ஆசிய பிராந்தியத்தில் மிகவும் பிரபலமான பத்திரிகையாளர் மன்றமான சார்க் பத்திரிகையாளர் மன்றத்தின் வருடாந்த சர்வதேச மாநாடு இன்று இந்தியாவில் ஆரம்பமாகவுள்ளது.

இலங்கை உள்ளிட்ட நாடுகளில் இடம்பெறும் ஊடக அடக்குமுறைகள் மற்றும் கருத்துச் சுதந்திர மீறல்கள் குறித்தும் சார்க் பத்திரிகையாளர்கள் மன்றம், விரிவாக கலந்துரையாடவுள்ளது.

2026 சார்க் பத்திரிகையாளர் மன்ற மாநாட்டில், பிராந்தியத்தில் பத்திரிகைச் சுதந்திரத்துக்கு எதிரான தடைகள், ஊடகங்களுக்கும், ஊடகப் பணியாளர்களுக்கும் எதிரான அச்சுறுத்தல்கள் குறித்து விவாதிக்கப்படவுள்ளன.

சார்க் பத்திரிகையாளர் மன்றமானது, ஆசிய பிராந்தியத்தில் பெருமளவான உறுப்பினர்களைக் கொண்ட பிரபலமான பத்திரிகையாளர் மன்றாக உள்ளது.

இதனூடாக ஆசிய பிராந்தியத்தில் மாத்திரமின்றி, சர்வதேச ரீதியாகவும் ஊடகத்துறைக்கு ஏற்படும் சவால்கள் குறித்தும் தொடர்ந்தும் கவனம் செலுத்தி வருகிறது. 15

### திஸ்ஸ விகாரைக்கு எதிராக

# தையிட்டியில் நேற்று பெரும் போராட்டம்!

### பெருமளவான மக்கள் பங்கேற்பு

யாழ்ப்பாணம், ஜன. 04

தையிட்டியில் தனியார் காணிகளில் அமைக்கப்பட்டுள்ள திஸ்ஸ விகாரை முன்பாக நேற்று காலை முதல் மாபெரும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டத்தில் காணி உரிமையாளர்கள், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள், யாழ். பல்கலைக்கழக மாணவர்கள், பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் உள்ளிட்ட தமிழ்த் தேசியக் 15



# அரசமைப்பு பேரவையிலிருந்து சிறிதரனை விலகப் பணிப்புரை!

### தமிழரசு அரசியல் குழு கூட்டத்தில் வலியுறுத்து

வவுனியா, ஜன. 04

அரசியலமைப்பு சபையில் இருந்து பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் இராஜினாமா செய்ய வேண்டும் என்று பணிப்புரை வழங்குவதென இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் அரசியல் குழு தீர்மானித்துள்ளதாக கட்சியின் பதில் பொதுச் செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

இலங்கை தமிழரசுக் கட்சியின் அரசியல் குழுக்கூட்டம் வவுனியா குருமன்காட்டில் அமைந்துள்ள தாயகம் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்றது. 15

## இராணுவ சிற்றுண்டிச்சாலையில் நேற்று புத்தர் சிலை ஒன்று மீட்பு!

யாழ்ப்பாணம், ஜன. 04

தையிட்டி விகாரையில் பிரதிஷ்டை செய்யும் நோக்குடன் கொண்டுவரப்பட்ட புத்தர் சிலை இராணுவத்தினரின் சிற்றுண்டிச்சாலையில் இருந்து மீட்கப்பட்டுள்ளது.

தையிட்டி விகாரையில் நேற்று சனிக்கிழமை பௌர்ணமி தினத்தை முன்னிட்டு புதிதாக புத்தர் சிலை ஒன்றினை நிறுவும் நோக்குடன் சிகிரியா பகுதியில் இருந்து புத்தர் சிலை ஒன்று கொண்டு வர முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன.

அதற்குத் தமிழ்த் தரப்பினர் மத்தியில் கடும் 15

## வடக்கு மாகாணத்தில் அமையவுள்ள 3 மிகப்பெரிய முதலீட்டு வலயங்கள்!

### ஆளுநர் தலைமையில் நேற்று ஆராய்வு

யாழ்ப்பாணம், ஜன. 03

வடக்கு மாகாணத்தில் அமையவுள்ள மூன்று மிகப்பெரிய முதலீட்டு வலயங்கள் மற்றும் அவற்றில் உருவாகவுள்ள முதலீட்டு வாய்ப்புகள் தொடர்பில் ஆளுநர் நா.வேதநாயகன் தலைமையில் கலந்துரையாடல் நடைபெற்றது.

இம்முதலீட்டு வலயங்களுக்கு சாத்தியவள ஆய்வு அறிக்கை இம்மாத இறுதிக்குள் இலங்கை முதலீட்டுச் சபைக்கு சமர்ப்பிக்கப்படவுள்ளது.

கலந்துரையாடலில், அவற்றில் எந்த வகை கைத்தொழில்கள் மற்றும் முதலீடுகள் ஊக்குவிக்கப்படும், மற்றும் உள்ளூர் மக்களையும் அரசியல் பிரதிநிதிகளையும் கலந்துரையாடலில் இணைக்க ஏற்பாடுகள் செய்யப்படுமென முடிவு செய்யப்பட்டது.

மக்களின் வேலைவாய்ப்புகள் மற்றும் பொருளாதார நன்மைகளை அதிகரிக்க, மாகாண 15



## குறைந்த வாழ்க்கைத் தரம் கொண்ட நாடுகளில் இலங்கைக்கு 4ஆம் இடம்!

கொழும்பு, ஜன. 04

சமீபத்தில் வெளியிடப்பட்ட சர்வதேச ஆய்வு அடிப்படையில், 2025-ஆம் ஆண்டில் மிகக் குறைந்த வாழ்க்கைத்தரம் கொண்ட நாடுகளின் பட்டியலில் இலங்கை நான்காவது இடத்தைப் பிடித்துள்ளது.

நைஜீரியா, வெனிசுலா மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகளைத் தொடர்ந்து இலங்கை இந்தப் பின்னடைவைச் சந்தித்துள்ளது.

இலங்கையின் இந்த நிலைக்குப் பின்னால் பல முக்கிய காரணங்கள் உள்ளன.

2022-இல் ஏற்பட்ட கடுமையான 15

## ரணில் - சஜித் இணைவு சாத்தியற்றது!

கொழும்பு, ஜன. 04

ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து பயணிப்பதற்கு சஜித் பிரேமதாஸ முன்வரமாட்டார். ஏனெனில் சஜித் தனி வழி பயணத்தை விரும்புபவர் என்று முன்னாள் இராஜாங்க அமைச்சர் அஜித் மன்னப்பெரும தெரிவித்தார்

கடந்த பொதுத்தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியின் பட்டியலிலேயே அஜித் மன்னப்பெரும வேட்புமனு செய்தார்.

எனினும், கடைசி நேரத்தில் தேர்தலில் 15



## கல்வி சீர்திருத்தமா? கலாசாரச் சீரழிவா?

### அரசை சாடுகிறார் சஜித்

கொழும்பு, ஜன. 04

கல்வி சீர்திருத்தம் என்ற பெயரில் முறைசாரா நடவடிக்கையை ஊக்குவித்து, இந்நாட்டின் இலவசக் கல்வியை சீரழிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றம் சுமத்தியுள்ளார்.

நேற்று கரம்பேத்தர அபயராஜராமய விகாரை யில் நடைபெற்ற மத நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

சி.டபிள்யூ. டபிள்யூ.கன்னங்கராவினால் அறிமுகப்படுத்தப்பட்ட இலவசக் கல்வி முறைமை, நவீன உலகிற்கு ஏற்ப மாற்றமடைய வேண்டும் என்பதைத் தாம் ஏற்றுக்கொள்வதாக அவர் குறிப்பிட்டார்.

செயற்கை நுண்ணறிவு உள்ளிட்ட தொழில்நுட்ப புரட்சிகள் வேகமாக இடம்பெற்று வரும் நிலையில், நாமும் அதற்கேற்ப மாறாவிட்டால் பல தசாப்தங்கள் பின்னோக்கி தள்ளப்படுவோம் என அவர் எச்சரித்தார்.

கல்வியில் நவீன தொழில்நுட்பங்களான ரோபோடிக்ஸ் மற்றும் செயற்கை நுண்ணறிவு இணைக்கப்பட வேண்டும்.

அதேவேளை, எமது நாட்டின் கலாசாரம், பண்பாடு மற்றும் விழுமியங்கள் பாதுகாக்கப்பட வேண்டும்.

குறிப்பாக, வரலாறு ஒரு கட்டாய பாடமாக இருக்க வேண்டும் என அவர் வலியுறுத்தினார்.


நவீனமயமாக்கல் என்ற பெயரில் கல்வி முறைக்குள் முறைசாரா விடயங்களைப் புகுத்துவதை 15

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விடுவிப்பு குறித்து

# தையிட்டி விகாராதிபதியுடன் யாழ். அரச அதிபர் சந்திப்பு



யாழ்ப்பாணம், ஜன. 04

காணி விடுவிப்பு குறித்து தையிட்டி விகாராதிபதியுடன் யாழ். அரச அதிபர் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

தையிட்டி திஸ்ஸ விகாரை அமைந்துள்ள காணி உரிமையாளர்களுடன் யாழ்ப்பாணம் மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் கடந்த டிசெம்பர் மாதம் 31ஆம் திகதி கலந்துரையாடலில் ஈடுபட்டதற்கு அமைய திஸ்ஸ விகாரை அமைந்துள்ள காணியின் மட்டுப்பாடான அளவில் எல்லையிட்டு, அதனைத் தவிர்த்து ஏனைய காணிகளை கட்டம் கட்டமாக விடுவிப்பது தொடர்பில் விகாராதிபதியுடன் அரசாங்க அதிபர் சந்தித்து தொடர் நடவடிக்கை எடுப்பது என கூட்டத்தில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

இந்தத் தீர்மானத்துக்கமைய நேற்று முன்தினம் யாழ். அரசாங்க அதிபர், திஸ்ஸ விகாராதிபதியுடன் சந்தித்து கலந்துரையாடினார்.

இதன்போது, கொழும்பில் உயர்மட்ட கலந்துரையாடல் நடக்கவுள்ளதாகவும் இந்தக் கலந்துரையாடலின் பின்னர் இது தொடர்பில் பொருத்தமான மேலதிக நடவடிக்கை எடுக்க முடியும் என்று விகாராதிபதி கூறினார்.

விகாராதிபதியுடன் கலந்துரையாடிய பின்னர் திரும்பும் வழியில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்களுடனும் அரசாங்க அதிபர் கலந்துரையாடினார். (எ)

# மன்னார் நீதிமன்றம் முன் துப்பாக்கி சூடு: சந்தேக நபருக்கு 90 நாட்கள் தடுப்புகாவல்

## சி. ஐ. டியினருக்கு நீதிமன்றம் அனுமதி

மன்னார், ஜன. 04

கடந்த வருடம் மன்னார் நீதிமன்றத்துக்கு முன் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்துடன் தொடர்புடையதாக கருதப்படும் பிரதான சந்தேக நபரை நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மன்னார் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்திய போது அவரை சி. ஐ. டியினர் 90 நாட்கள் தடுத்துவைத்து விசாரணை நடத்த அனுமதி கோரிய நிலையில் அதற்கு மன்னார் நீதிவான் அனுமதி வழங்கியுள்ளார்.

இது தொடர்பில் சட்டத்தரணி எஸ். டினேசன் தெரிவிக்கையில்,

மன்னார் நீதிமன்றத்துக்கு முன் கடந்த வருடம் ஜனவரி மாதம் 16ஆம் திகதி இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்துடன் தொடர்புடையதாக கருதப்படும் பிரதான சந்தேக நபர் மன்னார் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பி - 9125 என்ற வழக்கில் முற்படுத்தப்பட்டு, குறித்த சந்தேக நபர் மன்னார் பொலிஸாரால் முருங்கன் பொலிஸ் நிலையத்தில் இரண்டு நாட்கள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டார்.

இந்த நிலையில், ஏற்கனவே அடம்பன் பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தின் பின்னணியில் குறித்த நபருக்கும் தொடர்பு இருப்பதாக சந்தேகத்தின் அடிப்படையில் ஏற்கனவே குறித்த வழக்கை குற்ற விசாரணைப் பிரிவினர் கையாண்டு வந்தனர்.

இதனடிப்படையில் அடம்பன் பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவம் தொடர்பில் வழக்கில் குறித்த சந்தேக நபரை பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் முற்படுத்தப்பட்டு, ஏற்கனவே 72 மணித்தியாலங்கள் கொழும்பில் உள்ள சி.ஐ.டி அலுவலகத்தில் தடுத்து வைத்து விசாரணைகளுக்கு உட்படுத்தி, குறித்த 72 மணித்தியாலங்கள் வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணியுடன் நிறைவடையும் சந்தர்ப்பத்தில், நேற்று முன்தினம் சி.ஐ.டியினர் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர்.

மேலும், குற்ற விசாரணைப் பிரிவினர் (சி.ஐ.டி ) மேலதிக விசாரணைகளை மேற்கொள்ள விருப்பதால் குறித்த சந்தேக நபரை மேலும் 90 நாட்கள் தடுத்து வைத்து விசாரணைகளை மேற்கொள்ள நீதிமன்றில் அனுமதி கோரியிருந்தனர்.

பயங்கரவாத தடுப்புச் சட்டம் பிரிவு 9இன் கீழ் சந்தேக நபர் ஒருவரை 90 நாட்கள் தடுத்து வைத்து விசாரணை செய்ய வேண்டும் என்றால் பாதுகாப்பு அமைச்சின் அனுமதியின் பேரில் தடுத்து வைத்து விசாரணைகளை மேற்கொள்ள முடியும்.

ஆனால், சி.ஐ.டியினருக்கு நேற்று முன்தினம் பிற்பகல் ஒரு மணிக்கு முன்னர் பாதுகாப்பு அமைச்சிடம் இருந்து அனுமதி கிடைக்காத நிலையில் குறித்த அனுமதிக்கு ஆட்சேபனை தெரிவிக்கப்பட்ட நிலையில், சந்தேக நபரை எதிர்வரும் 12ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க மன்னார் நீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்த நிலையில், பாதுகாப்பு அமைச்சரான ஜனாதிபதியிடமிருந்து தடுத்து வைத்து விசாரிப்பதற்கான அனுமதி கிடைக்கப்பெற்ற நிலையில் சி.ஐ.டியினர் நகர்தல் பத்திரம் மூலம் குறித்த வழக்கை மீண்டும் விசாரணைக்கு அழைத்த நிலையில், குறித்த சந்தேக நபரை 90 நாட்கள் சி.ஐ.டியினர் தடுத்து வைத்து விசாரணைகளை மேற்கொள்ள நீதிமன்றம் அனுமதி வழங்கியது- என்று சட்டத்தரணி டினேசன் தெரிவித்தார். (எ)

# வாடகை மோட்டார் சைக்கிள் விற்பனை - மோசடி அம்பலம்!

கொழும்பு, ஜன. 04

வாடகை அடிப்படையில் மோட்டார் சைக்கிள்களை பெற்று, அவற்றை சட்டவிரோதமாக விற்பனை செய்து மோசடியில் ஈடுபட்ட நபர் ஒருவரை பலாங்கொடை பொலிஸார் நேற்றுக்காலை இரத்தினபுரி, சன்னஸ்கம பிரதேசத்தில் வைத்து கைது செய்தனர்.

மோட்டார் சைக்கிள்களை வாடகைக்கு வழங்குபவர்களிடமிருந்து குறித்த சந்தேகநபர் சில மாதங்களுக்கு எனத் தெரிவித்தே மோட்டார் சைக்கிள்களை பெற்றுள்ளார். அந்தக் காரணத்தைக் கூறி அவற்றின் பதிவுப் புத்தகங்களையும் உரிமையாளர்களிடமிருந்து கேட்டுப் பெற்றுக்கொண்டு சென்றுள்ளார் என்று ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இரத்தினபுரி, பலாங்கொடை உள்ளிட்ட பல பிரதேசங்களில் வாகனங்களை வாடகைக்கு விடும் நபர்களிடமிருந்து சந்தேகநபர் இவ்வாறு மோட்டார் சைக்கிள்களை பெற்றுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இவர் கைது செய்யப்படும் போது, விற்பனை செய்வதற்காக கொண்டு வரப்பட்ட 6 மோட்டார் சைக்கிள்களை பறிமுதல் செய்ய முடிந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர் பலாங்கொடை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளார். (எ)

# இலத்திரனியல் உபகரணம், தங்கத்துடன் ஒருவர் கைது!

கொழும்பு, ஜன. 04

இராணுவப் புலனாய்வுத் தகவலின் அடிப்படையில், சட்டவிரோதமாக நாட்டுக்கு கொண்டுவரப்பட்ட தங்கப் பொருட்கள் மற்றும் இலத்திரனியல் உபகரணங்களுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

டுபாயிலிருந்து வந்த வெல்லம்பிட்டி பகுதியைச் சேர்ந்த ஒருவரே விமான நிலைய பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சட்டவிரோதமாக தங்கம், அதி நவீன தொலைபேசிகள் மற்றும் கணினி உபகரணங்களை அவர் எடுத்து சென்றமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர் மேலதிக விசாரணைகளுக்காக சுங்க திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (எ)

# 2025 இல் பொருளாதார ரீதியில் இலங்கை ஓரளவு முன்னேற்றம்

## சுற்றுலா பயணிகள் வருகையில் சாதனை

கொழும்பு, ஜன. 04

"டித்வா" புயலால் கடும் தாக்கம் ஏற்பட்ட போதிலும் பொருளாதார நெருக்கடிக்குப் பின்னர் கடந்த 2025 ஆம் ஆண்டில் இலங்கை ஒட்டுமொத்தமாக குறிப்பிடத்தக்க பொருளாதார நிலையை அடைந்துள்ளது.

பிரதான பொருளாதாரக் குறிகாட்டிகளில் 2025 ஆம் ஆண்டில் அடைந்த பொருளாதார நிலைகள் வருமாறு:

சர்வதேச நாணய நிதியத்தின் உதவியுடன், பொருளாதார நெருக்கடிக்குப் பின்னர் மீண் டும் நாட்டைப் பொருளாதார ரீதியாகக் கட்டியெழுப்பும் நோக்கத்துடனேயே இலங்கை 2025 ஆம் ஆண்டை வரவேற்றது.

இதற்கமைய, நாட்டின் வருமானத்தில் முக்கிய பங்கை வகிக்கும் வரி வருமானம் கடந்த ஆண்டில் சாதனை அளவிலான வருமானமாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

93 வருடங்களுக்கு பின்னர், உள்நாட்டு இறைவரித் திணைக்களம் வரலாற்றில் அதிகூடிய வருமானமாக 2, 203 பில்லியன் ரூபாய் வருமானத்தை 2025 ஆம் ஆண்டில் ஈட்டியுள்ளது.

இது ஆண்டின் இலக்கு வருமானத்தை விட 33 பில்லியன் ரூபாய் மேலதிக வருமானம் என்பதுடன், 2024 ஆம் ஆண்டோடு ஒப்பிடுகையில் இது 15 சதவீத வளர்ச்சியாகும் என உள்நாட்டு இறைவரித் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் தரவுகளின்படி வரி வருமானம், வரி சாராத வருமானம் மற்றும் மானியங்களுடன் 2025 ஆம் ஆண்டின் முதல் 11 மாதங்களில் ஈட்டப்பட்டுள்ள மொத்த அரச வருமானம் 4,961. 8 பில்லியன் ரூபாயாகும்.

இது 2024 ஆம் ஆண்டின் முதல் 11 மாதங்களுடன் ஒப்பிடுகையில் 35 சதவீத வளர்ச்சியாகும்.

2024 ஆம் ஆண்டின் முதல் 11 மாதங்களில் 928 பில்லியன் ரூபாயாகக் காணப்பட்ட ஆரம்ப கணக்கு மீதி 2025 ஆம் ஆண்டின் முதல் 11 மாதங்களில் 1,942 பில்லியன் ரூபாயாக அதிகரித்துள்ளது என்று மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இதற்கிடையில், 2025 ஆம் ஆண்டின் முதல் 11 மாதங்களில் 12. 4 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன. 19. 3 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

இதற்கமைய, இந்தக் காலப் பகுதியில் வர்த்தகப் பற்றாக் குறையாக 6. 9 பில்லியன் அமெரிக்க டொலர் பதிவாகியுள்ளது.

வெளிநாட்டு பணியாளர்களின் பணவனுப்பலாக 2025 ஆம் ஆண்டின் முதல் 11 மாதங்களில் 7,197.1 மில்லியன் அமெரிக்க டொலர் கிடைக்கப்பெற்றுள்ளது. இது கடந்த ஆண்டின் இந்தக் காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 21சதவீத வளர்ச்சியாகும்.

சீன மக்கள் வங்கியுடனான வெளிநாட்டு நாணயப் பரிமாற்ற வசதி உட்பட, 2025 நவம்பர் மாத இறுதியில் நாட்டின் மொத்த உத்தியோகபூர்வ கையிருப்பு 6 பில்லியன் அமெரிக்க டொலராக பதிவாகியுள்ளது.

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை வெளியிட்டுள்ள அறிக்கையின்படி, 2025 ஆம் ஆண்டு டிசெம்பர் 29 ஆம் திகதி வரை 23 இலட்சத்து 44 ஆயிரத்து 978 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

இதற்கமைய, வரலாற்றில் அதிகூடிய சுற்றுலாப் பயணிகள் வருகை தந்த வருடமாக 2025 ஆம் ஆண்டு பதிவாகியுள்ளது.

அத்துடன், 2025 ஆம் ஆண்டின் முதல் 11 மாதங்களில் சுற்றுலாத் துறை வருமானமாக 2,910.6 மில்லியன் அமெரிக்க டொலர் ஈட்டப்பட்டுள்ளது என்று மத்திய வங்கி அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

உள்நாட்டு, வெளிநாட்டு முதலீட்டாளர்கள் மத்தியில் நாட்டின் முதலீடு குறித்த நம்பிக்கையை வெளிப்படுத்தும் வலுவான சுட்டியாக கருதப்படும் கொழும்பு பங்குச் சந்தையும் 2025 ஆம் ஆண்டில் புதிய சாதனைகளை படைத்துள்ளது.

அனைத்து பங்கு விலைச் சுட்டெண் வரலாற்றில் அதிக பட்சமாக 23,659.7 என்ற புள்ளிகளை 2025 ஆம் ஆண்டில் பதிவு செய்ததோடு, சந்தை புரள்வு முதன்முறையாக 1. 2 ரில்லியன் ரூபாய் எல்லையைக் கடந்துள்ளது.

மேலும், வரலாற்றில் முதன்முறையாக சந்தை மூலதனமாக்கல் 8 ரில்லியன் ரூபாய் எல்லையைக் கடந்ததும் 2025 ஆம் ஆண்டிலாகும்.

2025 ஆம் ஆண்டில் சந்தைப் பரிவர்த்தனைகளில் வெளிநாட்டு முதலீட்டாளர்களின் பங்களிப்பு 6.2 சதவீதமாக காணப்படுகிறது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரணில் - சஜித் அரசியல் கூட்டணி அநுர அரசாங்கத்துக்கு சவாலல்ல

## பிரதி அமைச்சர் மகிந்த ஜயசிங்க தெரிவிப்பு



கொழும்பு, ஜன. 04

ரணில் - சஜித் அரசியல் கூட்டணி அநுர அரசாங்கத்துக்கு ஒரு சவாலல்ல, இவர்களின் வங்குரோத்து அரசியல் நிலைமையை நாட்டு மக்கள் விளங்கிக் கொள்ள வேண்டும். பிணைமுறி மோசடியாளர்களுடன் எக்காரணிகளுக்காகவும் ஒன்றிணைய போவதில்லை என்று சஜித் பிரேமதாஸ தனது தந்தையின் உருவச்சிலைக்கு முன்பாக இருந்து சத்தியமளித்ததை மறந்துவிட்டார் என்று தொழில் பிரதி அமைச்சர் மகிந்த ஜயசிங்க தெரிவித்தார்.

கம்பஹாவில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற மக்கள் சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

“கடந்த ஆண்டு நாடு என்ற ரீதியில் எவ்வாறான நெருக்கடிகளை எதிர்கொண்டோம் என்பதை நாட்டு மக்கள் அறிவார்கள். நெருக்கடிகளுக்கு தீர்வு காண்பதற்கு அரசாங்கத்துக்கு ஒத்துழைப்பு வழங்கத் தயார் என்று எதிர்க்கட்சியினர் அரசியல் மேடைகளில் குறிப்பிடுகிறார்கள். ஆனால், எதிர்க்கட்சியினர் எந்தவிதத்திலும் அரசாங்கத்துக்கு ஒத்துழைப்பு வழங்கவில்லை.

அரசாங்கத்தை எவ்வழியில் நெருக்கடிக்குள்ளாக்கலாம் என்றே எதிர்க்கட்சியினர் பேச்சுவார்த்தையில் ஈடுபடுகிறார்கள். ஐக்கிய தேசிய கட்சியும் ஐக்கிய மக்கள் சக்தியும் மீண்டும் ஒன்றிணைய போவதாக குறிப்பிட்டுக் கொள்கிறார்கள்.

ரணில் - சஜித் அரசியல் கூட்டணி எமக்கு எந்தவிதத்திலும் சவாலாக அமையாது.

எதிர்க்கட்சிகளின் அரசியல் கூட்டணி ஒன்று தோற்றம் பெற்றால் அங்கு தலைமைத்துவத்துக்கு முரண்பாடு ஏற்படும். ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க எந்த அரசியல் கூட்டணி அமைத்தாலும் அதன் தலைமைத்துவம் தனக்கே வேண்டும் என்றே ரணில் விக்கிரமசிங்க கருதுவார்.

அரசாங்கம் என்ற ரீதியில் சிறந்த முறையில் செயல்படுகிறோம். மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிக்கு அமைய செயல்படுவோம். அனர்த்தத்தால் ஏற்பட்ட நெருக்கடியிலிருந்து வெகுவிரைவில் மீண்டெழுவோம்”- என்றார்.(எ)

# ஔவையாரின் நினைவுதினம் வவுனியாவில் அனுஷ்டிப்பு

வவுனியா, ஜன. 04

ஔவையாரின் நினைவு தினம் வவுனியா- சின்னப்புதுக்குளம் பகுதியில் அமைந்துள்ள ஔவையாரின் சிலையடியில் நேற்றுக்காலை அனுஷ்டிக்கப்பட்டது.

இதன்போது, ஔவையாரின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டு மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, மாணவர்கள் மற்றும் அறிஞர்களால் நினைவுப் பேருரைகளும் ஆற்றப்பட்டன.

வவுனியா மாநகர சபையின் ஏற்பாட்டில் தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் சந்திரகுமார் கண்ணன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் முன்னாள் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், சமூக ஆர்வலர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (எ-10)



# “அதிகாரிகளை சிக்க வைத்துவிட்டு தப்பிக்கப் பார்க்கிறது அரசாங்கம்”

கொழும்பு, ஜன. 04

தற்போதைய அரசாங்கம் ஏதேனும் நல்ல விடயங்கள் நடந்தால் அதனை தனது கணக்கில் சேர்த்துக்கொள்கிறது. ஆனால், தவறுகள் மற்றும் குறைபாடுகள் ஏற்படும்போது அதனை அரச அதிகாரிகள் மீது சுமத்திவிட்டு அமைதியாக இருக்கிறது- இவ்வாறு முன்னாள் இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர குற்றஞ்சாட்டியுள்ளார்.

சிறீலங்கா பொதுஜன பெரமுன கட்சி தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

6ஆம் தர ஆங்கில மொழிப் பாடக் கையேட்டில் ஏற்பட்ட பாரிய தவறுகள் தொடர்பில் கருத்து வெளியிட்ட அவர், இந்த விவகாரத்துக்கு கல்வி அமைச்சரே முழுமையாக பொறுப்பேற்க வேண்டும் என வலியுறுத்தினார்.

தவறுகள் வெளிச்சத்துக்கு வந்ததுடன் அதிகாரிகளைத் தற்காலிகமாக பதவி விலகுமாறு கோருவதும் விசாரணைகளை சி.ஐ.டி. வசம் ஒப்படைப்பதும் அரசாங்கம் தனது பொறுப்பை தட்டிக்கழிக்கும் செயலாகும். வினாத்தாள் ஒன்றை கூட சரியாக அச்சிடத் தெரியாத ஓர் அரசாங்கம் எதற்கு என முந்தைய காலங்களில் கேள்வி எழுப்பியவர்கள், இன்று இவ்வளவு பெரிய தவறுக்கு கல்வி அமைச்சரை ஏன் பாதுகாக்கிறார்கள் என்றும் அவர் கேள்வி எழுப்பினார். (எ)

# வட, கிழக்கு மாகாணங்களில் மீண்டும் மழை அதிகரிக்கும்

கொழும்பு, ஜன. 04

இலங்கைக்கு கிழக்காக ஒரு கீழ் வளிமண்டலத் தளம்பல் நிலை உருவாகி வருவதால் வடக்கு, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களில் மழை நிலைமை எதிர்வரும் நாட்களில் அதிகரிக்க கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

கிழக்கு, மத்திய, வடமத்திய மற்றும் ஊவா மாகாணங்களிலும் அம்பாந்தோட்டை மாவட்டத்திலும் அவ்வப்போது மழை பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுவதாக அந்த திணைக்களம் வெளியிட்டுள்ள வானிலை முன்னறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களிலும் மாத்தளை, நுவரெலியா மற்றும் பொலநறுவை மாவட்டங்களிலும் சில இடங்களில் 75 மில்லி மீற்றருக்கும் அதிகமான ஓரளவு பலத்த மழை பெய்யக்கூடும்.

வடக்கு மாகாணத்தில் பல தடவைகள் மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

நாட்டின் ஏனைய பிரதேசங்களில் பல இடங்களில் பிற்பகல் 02.00 மணிக்குப் பின்னர் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

மத்திய மலைநாட்டின் கிழக்கு சரிவுகளிலும் வடக்கு, வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் திருகோணமலை, அம்பாந்தோட்டை மற்றும் மொனராகலை மாவட்டங்களிலும் அவ்வப்போது மணிக்கு 30 - 40 கிலோ மீற்றர் வேகத்தில் மிதமான பலத்த காற்று வீசக்கூடும்.

சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் சில இடங்களில் அதிகாலை வேளையில் பனிமூட்டமான நிலை காணப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப்பிரதேசங்களில் தற்காலிகமாக வீசக் கூடிய பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கங்களால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு வளிமண்டலவியல் திணைக்களம், பொது மக்களை அறிவுறுத்தியுள்ளது. (எ)

# பாதாள உலக கும்பலை சேர்ந்த அவிஷ்க ஹேஷனின் சகா கைது

கொழும்பு, ஜன. 04

பாதாள உலக கும்பலைச் சேர்ந்தவரும் போதைப்பொருள் கடத்தல்காரருமான அவிஷ்க ஹேஷன் என்பவரின் சகா கல்கிஸ்ஸை பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கல்கிஸ்ஸை பொலிஸ் குற்றப் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவரிடமிருந்து மின்னணு தராசு ஒன்றும் சுமார் 08 இலட்சம் ரூபாய் பெறுமதியான ஐஸ் போதைப்பொருளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

கல்கிஸ்ஸை பொலிஸ் குற்றப் புலனாய்வு பிரிவின் பொறுப்பதிகாரி கமகே நிலந்தவுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில், சந்தேக நபர் களுபோவில மருத்துவமனை வீதியில் வைத்து நேற்றுக்காலை கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் தெஹிவளை, களுபோவில பகுதியைச் சேர்ந்த 28 வயதுடையவர் என தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கல்கிஸ்ஸை பொலிஸ் குற்றப் புலனாய்வு பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# தீ விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு வெளிவிவகார அமைச்சர் அனுதாபம்

கொழும்பு, ஜன. 04

சுவிட்சர்லாந்தின் கிரான்ஸ்-மொன்டானாவில் ஏற்பட்ட பாரிய தீ விபத்தில் சிக்கி பலர் உயிரிழந்த சம்பவத்துக்கு தனது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதாக வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

இந்தத் துயரச் சம்பவத்தில் தமது அன்புக்குரியவர்களை இழந்த குடும்பங்களுக்கு, இலங்கை அரசாங்கம் மற்றும் மக்கள் சார்பாக எனது ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். அத்துடன், இதனால் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

விபத்தில் காயமடைந்தவர்கள் மனவலிமையுடன் விரைவில் குணமடைய வேண்டுமென வேண்டுகிறேன்.

இந்தத் தருணத்தில், சுவிட்சர்லாந்து அரசாங்கத்துடனும் அந்த நாட்டு மக்களுடனும் இலங்கை கொண்டுள்ள ஒற்றுமையையும் ஆதரவையும் நான் மீண்டும் உறுதிப்படுத்துகின்றேன் - இவ்வாறு அந்த பதிவில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ)

# நகர அபிவிருத்தி அதிகார சபையின் திட்டங்கள் குறித்து கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜன. 04

நகர அபிவிருத்தி அதிகார சபையின் திட்டங்கள் தொடர்பான முன்னாய்த்த கலந்துரையாடல் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நேற்று முன்தினம் அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நடைபெற்றது.

நகர அபிவிருத்தி அதிகார சபையால் 2026 ஆம் ஆண்டு 200 மில்லியன் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படவுள்ள திட்டங்கள் தொடர்பில் பங்குதாரர்களுடனான கலந்துரையாடலை மேற்கொள்ளல் மற்றும் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நகர அபிவிருத்தி அதிகார சபையால் மேற்கொள்ளப்படவுள்ள திட்டங்கள் குறித்து ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைய உள்ளூராட்சி சபை பிரதிநிதிகளுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துதல் தொடர்பில் எடுக்க வேண்டிய நடவடிக்கைகளின் முன்னாய்த்த கலந்துரையாடலாக இது அமைந்தது.

இந்தக் கலந்துரையாடலில் நகர அபிவிருத்தி அதிகார சபையின் வடமாகாண பணிப்பாளர் டி. பி. எஸ். கே. திஸநாயக்க, பிரதிப் பணிப்பாளர் திருமதி கவிதா ஜீவகன், உதவிப் பணிப்பாளர் திருமதி எஸ். தாரணி, மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் இ. சுரேந்திரநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# 3 ஆண்டுகளில் 2,500 கிலோ போதைப்பொருள் அழிப்பு!

## பொலிஸ் ஊடக பேச்சாளர் தகவல்



கொழும்பு, ஜன. 04

2024 ஆம் ஆண்டு முதல் இதுவரையான காலப்பகுதியில் பொலிஸார் மற்றும் முப்படையினர் இணைந்து முன்னெடுத்து வரும் சோதனை நடவடிக்கைகளின் போது கைப்பற்றப்பட்ட சுமார் 2,500 கிலோ கிராமுக்கும் அதிகளவான போதைப்பொருட்கள் நீதிமன்ற நடவடிக்கைகளின் பின்னர் அழிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் எவ். யு. வுட்லர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

“இலங்கைக்கும் அதன் பொதுமக்களுக்கும் பெரும் அச்சுறுத்தலாக விளங்கும் போதைப்பொருள் கடத்தல்காரர்களைச் சட்டத்தின் முன்னிறுத்த பொலிஸார், முப்படைகள் மற்றும் விசேட அதிரடிப்படையினர் இணைந்து பாரிய சுற்றிவளைப்புகளை முன்னெடுத்து வருகின்றனர். இந்தச் சோதனைகளின் போது பொலிஸ் பொறுப்பில் எடுக்கப்பட்ட பெருமளவிலான போதைப்பொருட்களை அழிப்பதற்கு முறையான பொறிமுறை ஒன்று பின்பற்றப்பட்டு வருகிறது.

இதற்கமைய கடந்த 2024 ஆம் ஆண்டு முதல் 2026 ஆம் ஆண்டு இதுவரையான காலப் பகுதியில் முன்னெடுக்கப்பட்ட சோதனைகளின் மூலம் கைப்பற்றப்பட்ட சுமார் 2,556 கிலோ 164 கிராம் போதைப்பொருட்கள் முழுமையாக அழிக்கப்பட்டுள்ளன. அத்தோடு, 2024 ஆம் ஆண்டில் 1,894 கிலோ 512 கிராம் போதைப்பொருட்களும் 2025 ஆம் ஆண்டில் 494 கிலோ 498 கிராம் ஹெரோயின் போதைப்பொருளும் அழிக்கப்பட்டன.

2026 ஆம் ஆண்டின் ஆரம்பகட்ட நடவடிக்கையாக நேற்று முன்தினம் வனாத்தவில்லு பகுதியில் அமைந்துள்ள உயர் வெப்பநிலையைக் கொண்ட நவீன தகன உலைகளில் வைத்து 170 கிலோ 86 கிராம் ஹெரோயின் மற்றும் 306 கிராம் அபின் போதைப் பொருள் என்பன எரியூட்டப்பட்டன. இந்த அழிப்பு நடவடிக்கைகள் அனைத்தும் நீதிமன்றம், அரச இரசாயன பகுப்பாய்வு திணைக்களம் ஆகியவற்றின் நேரடி கண்காணிப்பில் நடைபெற்றன.”- என்றார்.(எ)

# மாகாண சபை தேர்தலை பிற்போடுவதற்கு முயற்சி

## பொதுஜன பெரமுன குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன. 04

மாகாண சபை தேர்தலை இந்த ஆண்டு நடத்துவதாக அரசாங்கம் குறிப்பிடுகிறது. தேர்தலுக்கு நாங்கள் தயாராகவே உள்ளோம். இருப் பினும், மாகாண சபை தேர்தலை தொடர்ந்து பிற்போடுவதற்கு அர சாங்கம் பல்வேறு முயற்சிகளை மேற்கொள்கிறது என்று சிறீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கட்சி உறுப்பினர்களுடனான சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

“அரசமைப்பின் பிரகாரம் உரிய காலத்தில் நடத்தப்பட வேண்டிய மாகாண சபை தேர்தல் காலவரையறையின்றி பிற்போடப்பட்டுள்ள மைக்கு நல்லாட்சி அரசாங்கத்தின் அரச தலைவர்களும் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தலைமையிலான மக்கள் விடுதலை முன்ன ணியும் மற்றும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பும் எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தரப்பினரும் பொறுப்புக் கூற வேண்டும்.

நல்லாட்சி அரசாங்கத்தின் காலப்பகுதியில் எமது அரசியல் எழுச்சி மற்றும் செல்வாக்கை கண்டு அச்சமடைந்தே மாகாண சபை தேர்தல் சட்டத்தில் திட்டமிட்ட வகையில் நெருக்கடி ஏற்படுத் தப்பட்டு எந்தத் தேர்தல் முறைமையின் கீழ் தேர்தலை நடத்துவது என்ற சிக்கல் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

ராஜபக்ஷக்கள் வெற்றியோ அல்லது தோல்வியோ உரிய காலத்தில் தேர்தலை நடத்தினர். இதனை எவராலும் மறுக்க முடியாது. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் படு தோல்வியடைவோம் என்று நன்கு அறிந்தே முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மாகாண சபை தேர்தலை நடத்தினார்.

இந்த ஆண்டு மாகாண சபை தேர்தலை நடத்துவதாக அரசாங்கம் குறிப்பிடுகிறது. தேர்தலை விரைவாக நடத்த வேண்டும் என்பதை நாங்கள் வலியுறுத்துகிறோம். தேர்தலுக்கு நாங்களும் தயாராக இருக்கிறோம். இருப்பினும், அரசாங்கம் மாகாண சபை தேர்தலை பிற்போடுவதற்கு பல்வேறு வழிமுறைகளில் முயற்சிக்கிறது”- என்றார்.

(எ)

# பொலிஸாரை கண்டு தலைமறைவாகும் பழக்கம் எங்களுக்கு ஒருபோதும் இல்லை

## நாமல் ராஜபக்ஷ சொல்கிறார்

கொழும்பு, ஜன. 04

இரண்டரை இலட்சம் ரூபாய்க்காக ஐந்து பொலிஸ் குழுவை அமைத்து தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டிய அவசியம் இல்லை. பொலிஸாரை கண்டு தலைமறைவாகும் பழக்கம் எமக்கு ஒருபோதும் இல்லை. வரச்சொன்னால் செல்வோம்.- இவ்வாறு சிறீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நிதி மோசடி குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவின் மகன் விவகாரம் தொடர்பில் வெள்ளிக்கிழமை வெலிசர நீதிமன்றத்துக்கு சென்றதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

“சட்டத்தை தமக்கு ஏற்றால் போல் பயன்படுத்த அரசாங்கம் முயற்சிக்கிறது. நீதிமன்றம் மீது எமக்கு உறுதியான நம்பிக்கை உள்ளது. இரண்டரை இலட்சம் ரூபாய்க்காக ஐந்து பொலிஸ் குழுவை அமைத்து தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டிய அவசியம் இல்லை.

அழைப்பு விடுத்தால் அவர்கள் வருவார்கள். நாங்கள் எக்காலத்திலும் பொலிஸாரை கண்டு ஓடி தலைமறைவாகவில்லை. வரச்சொன்னால் சென்று வாக்குமூலம் வழங்குவோம்.

அரச அதிகாரிகளை நெருக்கடிக்குள்ளாகும் வகையில் தான் அரசாங்கம் செயல்படுகிறது. அரசாங்கத்தின் முறையற்ற செயல்பாடுகள் வெளியாகும் போது அரச அதிகாரிகள் தண்டிக்கப்படுகிறார்கள். இது முற்றிலும் தவறானது”- என்றார். (எ)

# விசேட சுற்றிவளைப்பு: மேலும் 520 பேர் கைது

கொழும்பு, ஜன. 04

பொலிஸாரால் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பில் பலர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இதற்கமைய 28, 623 பேர் பரிசோதிக்கப்பட்டதுடன் சந்தேகத்தின் பேரில் 520 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும், 16 பேர் குற்றங்களுடன் தொடர்புடைய மற்றும் நேரடியாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதேநேரம், பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 219 பேரும் திறந்த பிடியாணைகளுக்கமைய 138 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, மதுபோதையில் வாகனம் செலுத்திய 439 பேரும் கவனக்குறைவாக வாகனம் செலுத்திய 41 பேரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன், பிற போக்குவரத்து குற்றங்களுக்காக 3, 603 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(எ)

# இலங்கையில் தந்தங்களை கொண்ட யானைகள் எண்ணிக்கை அதிகரிப்பு

கொழும்பு, ஜன. 04

2021 முதல் 2024ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலப்பகுதிக்குள் தந்தங்களைக் கொண்ட இளம் யானைகளின் எண்ணிக்கை 9. 2 சத வீதம் அதிகரித்துள்ளது என்று சுற்றாடல் அமைச்சர் தம்மிக பட பெந்தி சுட்டிக்காட்டியுள்ளார்.

2021ஆம் ஆண்டில் தந்தங்களைக் கொண்ட இளம் யானைகள் 8. 4 சதவீதமாக இருந்தாகவும் அது 2024ஆம் ஆண்டில் 17. 6 சதவீதமாக அதிகரித்ததாகவும் அவர் தெரிவித்தார்.

1993ஆம் ஆண்டில் தந்தங்களைக் கொண்ட இளம் யானைகளின் எண்ணிக்கை 11 சதவீதமாக இருந்தது. இது 6. 5 சதவீதமாக அதிகரித் துள்ளது.

2021 ஆம் ஆண்டில் 5,879ஆக இருந்த யானைகளின் எண்ணிக்கை 2024 இல் 7,451ஆக அதிகரித்துள்ளன என்றும் சுற்றாடல் அமைச்சர் மேலும் கூறினார். (எ)

# கொழும்பில் நீர்வெட்டு


கொழும்பு, ஜன. 04

அம்பத்தளையிலிருந்து தெஹிவளை வரையிலான பிரதான நீர் விநியோகக் குழாயில் ஏற்பட்ட திடீர் வெடிப்பு காரணமாக கொழும்பு மற்றும் அதனைச் சுற்றியுள்ள பல பகுதிகளுக்கு நேற்றுச் சனிக்கிழமை நீர்வெட்டு அமுல்படுத்தப்பட்டுள்ளது என்று தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால் அமைப்பு சபை தெரிவித்துள்ளது.

இதன்படி மொறட்டுவை, ராவதவத்த, சொய்சா - புர, இரத்மலானை, கல்கிஸ்ஸை, தெஹிவளை, வெள்ளவத்தை, பாமன்கடை, முல்லேரியா மற்றும் கொலன்னாவை ஆகிய பகுதிகளுக்கு நீர்வெட்டு அமுல் படுத்தப்பட்டுள்ளது.

மேலும், பத்தரமுல்லை பகுதிக்கு குறைந்த அழுத்தத்தின் கீழ் நீர் விநியோகிக்கப்படவுள்ளது. (எ)

# விளையாட்டு திணைக்களத்தின் புதிய பணிப்பாளராக அச்சுதன்



கொழும்பு, ஜன. 04

விளையாட்டு மேம்பாட்டு திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமாக நியமிக்கப்பட்ட எஸ். அச்சுதன், உத்தியோகபூர்வமாக தனது கடமைகளை பொறுப்பேற்றுக்கொண்டார்.

இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் சுனில் குமார கமகேவிடம் எஸ். அச்சுதன் தனது நியமனக் கடிதத்தை பெற்றுக்கொண்டார்.

நியமனத்தை தொடர்ந்து, விளையாட்டு மேம்பாட்டுத் திணைக்கள அதிகாரிகளுடனான தனது முதலாவது உத்தியோகபூர்வ சந்திப்பை அமைச்சின் வளாகத்தில் அமைந்துள்ள மண்டபத்தில் அவர் நடத்தினார்.

இதன்போது, நாட்டின் விளையாட்டுத்துறையின் எதிர்கால மேம்பாட்டுத் திட்டங்கள் குறித்து எஸ். அச்சுதன், அதிகாரிகளுக்கு தெளிவுபடுத்தினார்.(எ)

# நீர்கொழும்பில் 224 கிலோ பீடி இலைகள் கைப்பற்றல்

கொழும்பு, ஜன. 04

சட்டவிரோதமாக நாட்டுக்கு கொண்டுவரப்பட்ட 224 கிலோ கிராமுக்கும் அதிகமான பீடி இலைகள் நீர்கொழும்பு களப்பில் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

நீர்கொழும்பு களப்பு பகுதி [illegible] விசேட தேடுதல் நடவடிக்கையின் போது, பீடி இலைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

கடற்படை கப்பலான கௌனி நடத்திய விசேட தேடுதல் நடவடிக்கையின் போது, களப்பில் கைவிடப்பட்டிருந்த ஆறு சந்தேகத்துக்கிடமான பொதிகள் சோதனைக்குட் படுத்தப்பட்டன.

அந்த பொதிகளுக்குள் 224 கிலோ கிராமுக்கும் அதிகமான பீடி இலைகள் காணப்பட்டன.

குறித்த பீடி இலைகள் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக கட்டுநாயக்க சுங்க அலுவலகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
04.01.2026 ஞாயிற்றுக்கிழமை
விசுவாவசு வருடம், மார்கழி 20

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
– யோகர் சுவாமிகள்.

**E-mail: eelanaduweekly@gmail.com**

# வெனிசுவேலாவின் கதை உணர்த்துவது

தென்னமெரிக்க நாடான வெனிசுவேலாவின் ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோ மற்றும் அவருடைய மனைவியையும் கைது செய்து அங்கிருந்து வெளியேற்றியிருப்பதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்திருக்கின்றார். இந்த விடயம்தான், இன்றைய நிலையில் உலகளவில் முக்கிய செய்தியாக நோக்கப்படுகின்றது. கடந்த ஆண்டு இறுதிப்பகுதியில் அமெரிக்க வெளியக உளவுத்துறையான சி.ஐ.ஏ வெனிசுவேலாவில் இரகசிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான ஒப்புதலை ட்ரம்ப் வழங்கியிருந்தார்.

அதனைத் தொடர்ந்து வெனிசுவேலாவிற்கு சொந்தமான படகுகள் மீது தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. வெனிசுவேலாவின் ஜனாதிபதி அமெரிக்காவிற்கு எதிராக போதைவஸ்து யுத்தத்தை மேற்கொள்வதாக அமெரிக்க நிர்வாகம் குற்றம்சாட்டிவந்த நிலையிலேயே வெனிசுவேலாவில் இராணுவத் தலையீடுகளை மேற்கொண்டு ஆட்சிமாற்றமொன்றை ஏற்படுத்துவது தொடர்பில் ட்ரம்ப் நிர்வாகம் கரிசனை கொண்டது.

வெனிசுவேலா ஜனாதிபதியும், அமெரிக்காவை தொடர்ந்தும் உதாசீனம் செய்யும் வகையிலேயே செயற்பட்டு வந்தார். இந்த நிலையில் கடந்த ஆண்டு, வெனிசுவேலா ஜனாதிபதியை ஒரு சர்வதேச பயங்கரவாதியாக அமெரிக்கா பட்டியிலிட்டது. அமெரிக்காவின் நெருக்குதல்களிலிருந்து தப்பும் நோக்கில் சீனாவை அரவணைக்கும் முயற்சியில் வெனிசுவேலா ஜனாதிபதி ஈடுபட்டார். சீன ஜனாதிபதி சி.ஜின்பிங்கின் தனது விசேட பிரதிநிதி ஒருவரையும் வெனிசுவேலாவிற்கு அனுப்பியிருந்தார்.

குறித்த பிரதிநிதியை சந்தித்தாக அறிவித்த சில மணித்தியாலங்களில்தான் வெனிசுவேலா ஜனாதிபதி அமெரிக்க படையினரால் அகற்றப்பட்டதாக ட்ரம்ப் அறிவித்திருந்தார். இந்த அறிவிப்பை தொடர்ந்து வெனிசுவேலா மக்கள் தங்களுடைய நாடுகளுக்குள் வரலாம் என்னும் கணிப்பின் அடிப்படையில் அதனை தடுக்கும் நோக்கில், ஏனைய தென்னமெரிக்க நாடுகள் எல்லைப் புறங்களில் தங்களுடைய இராணுவத்தினரை நிறுத்தியிருக்கின்றன.

வெனிசுவேலாவின் மீது அமெரிக்கா எவ்வாறான காரணங்களுக்காக தாக்குதலை மேற்கொண்டது என்பது ஒரு புறமிருக்க, ஒரு பலமான நாடு அதன் நலன்களுக்காக எந்த எல்லைக்கும் செல்லும் என்பதை இந்த சம்பவத்தின் மூலம் இலகுவாக புரிந்துகொள்ள முடியும். பலம்பொருந்திய ஒவ்வொருவருக்கும் ஒரு இறுதி வழியண்டு ஆனால் பலவீனர்களுக்கு ஒரு வழியில்லை, அவர்கள் பல வழிகளில்தான் சிந்திக்க வேண்டும்.

ஈழத் தமிழர் மக்களுக்கு நீதி கிடைக்கும் என்னும் நம்பிக்கை ஊட்டிக்கொண்டிருக்கும் தமிழ்க் கட்சிகளும் கருத்துருவாக்கிகள் என்போரும் உலகை உற்றுப்பார்க்கப் பழகவேண்டும். 2009இல் விடுதலைப் புலிகள் இயக்கம் உலக அரசியல் நடைமுறைகளை புரிந்து கொள்ளத் தவறியதன் காரணமாக ராஜபக்ஷ தலைமையிலான இலங்கை அரசால் அழிக்கப் பட்டனர். ஐக்கிய நாடுகள் சபையில் அங்கத்துவம் வகிக்கும் ஒரு நாட்டின் மீதே தாக்குதலைத் தொடுத்து, நாட்டின் ஜனாதிபதியை கைது செய்திருப்பதாக கூறும்போது, பல நாடுகளால் சர்வதேச பயங்கரவாத அமைப்பாக தடைசெய்யப்பட்டிருந்த விடுதலைப் புலிகள் போன்ற அமைப்பு ஒன்றின் அழிவானது, அவர்களைப் பொறுத்தவரை ஒரு செய்தியாகக் கூட இருந்திருக்காது அல்லவா.

இங்கு விடயம் ஒருவர் ஆயுத பலத்தோடு இருக்கின்றாரா, மக்கள் ஆதரவோடு இருக்கின்றாரா என்பதெல்லாம் உலக சக்திகளின் நலன்களுக்கு முன்னால் ஒன்றுமில்லை. அவர்களுடைய நலன்களுக்கு தேவை என்றால் பயங்கரவாதி புனிதனாவான், இல்லையென்றால் புனிதனும் பயங்கரவாதி ஆவான். ஆக்குதல் அழித்தல் அனைத்தும் அவர்களுடைய நலன்களுக்கான நிறுவையில்தான் இருக்கின்றது.

# இந்திய மீனவர்களுக்கு விளக்கமறியல்

*யாழ்ப்பாணம், ஜன. 04*

காரைநகர் கடற்பரப்பில் கைது செய்யப்பட்ட 9 இந்திய மீனவர்கள், எதிர்வரும் 7 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இலங்கை கடற்பரப்பிற்குள் அத்துமீறி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில், 2 நாட்டு படகுடன், 9 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டனர்.

நேற்று முன் தினம் மீனவர்களை கைது செய்த கடற்படையினர், விசாரணைகளின் பின்னர், யாழ்ப்பாண நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர். அதன் பின்னர், அதிகாரிகள், யாழ்ப்பாணம் ஊர்காவற்றுறை நீதவான் வாசஸ்தலத்தில் நேற்று முற்படுத்திய போது, 9 மீனவர்களையும், எதிர்வரும் 7 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு, நீதவான் உத்தரவிட்டார். (அ)

## கோர விபத்தில் சிக்கி 15 வயது சிறுவன் பலி!

*கொழும்பு, ஜன. 04*

கேகாலையில் பின்தெனிய பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கொட்டியாகும்புர - அருக்கம்மன வீதியில் அன்னாசிகல பகுதியில் இடம்பெற்ற கோர விபத்தில் சிக்கி 15 வயது சிறு வன் ஒருவர் உயிரிழந்தார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த விபத்து நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

கொட்டியாகும்புர நோக்கி பயணித்த இலங்கை போக்கு வரத்து சபைக்கு சொந்தமான பஸ் ஒன்று எதிர்த்திசையில் பயணித்த மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் இந்த விபத்து இடம் பெற்றுள்ளது என்று பொலிஸ் விசாரணை யில் தெரியவந்துள்ளது.

விபத்தில் மோட்டார் சைக்கிளின் சாரதியும் 15 வயது சிறுவனும் காயமடைந்த நிலையில் கரவனெல்ல மருத்து வனையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் சிறுவன் உயிரிழந் தார்.

உயிரிழந்தவர் அருக்கம்மன பகுதியைச் சேர்ந்த 15 வயதுடைய சிறுவன் ஆவார்.

விபத்து தொடர்பில் பஸ் சாரதி பின்தெனிய பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

## கொடூரமாக தாக்கப்பட்டு 14 வயது சிறுவன் கொலை!

*கொழும்பு, ஜன. 04*

கேகாலையில் நூரிய பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகு தியில் உள்ள வீடொன்றுக்கு அருகில் கொடூரமாக தாக்கப் பட்டு சிறுவன் ஒருவர் கொலை செய்யப்பட்டார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. இந்தச் சம்பவம் வெள்ளிக்கிழமை இரவு இடம் பெற்றுள்ளது. இனந்தெரியாத நபர்கள் சிலர் சிறுவன் ஒருவனை கொடூரமாக தாக்குவதாக பிரதே சவாசிகள் சிலர் நூரிய பொலிஸாருக்கு தகவல் வழங்கினர். தகவலையடுத்து பொலிஸார் சம்பவ இடத் துக்கு சென்று பார்த்த போது சிறுவன் உயிரிழந்த நிலையில் தரையில் விழுந்து கிடந்தார்.

உயிரிழந்த சிறுவன் நூரியவத்த பகுதியைச் சேர்ந்த 14 வயதுடையவர் என பொலிஸ் விசாரணையில் தெரியவந்து ள்ளது. சிறுவனின் சடலம் அவிசாவளை மருத்துவமனையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை நூரிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

## பெண் செயலாளரை தாக்கிய தவிசாளருக்கு விளக்கமறியல்

*கொழும்பு, ஜன. 04*

களுத்துறை மாவட்டம் மத்துகம பிரதேச சபையின் பெண் செயலாளரை தாக்கி காயப்படுத்திய குற்றச்சாட்டில் கைதான மத்துகம பிரதேச சபை தவிசாளர் கசுன் முணசிங்கவை எதிர்வரும் 8ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மத்துகம நீதிவான் நீதிமன்றம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை உத்தரவிட்டுள்ளது.

மத்துகம பிரதேச சபை தவிசாளர் தனது அலுவலகத்துக்கு வந்து தன்னுடன் தகரா றில் ஈடுபட்டு தன்னை தாக்கி காயப்படுத் தினார் என்று செயலாளர் மத்துகம பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

தாக்குதலில் காயமடைந்த செயலாளர் மத்துகம வெத்தேவ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதனையடுத்து மத்துகம பிரதேச சபை தவிசாளர் பொலிஸாரால் கைது செய்யப்ப ட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார். இந்த நிலையில், எதிர்வரும் 8 ஆம் திகதி வரை அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டார். (எ)

## 2025இல் அதிகளவு மருந்து தயாரிப்பு


*கொழும்பு, ஜன. 04*

2025 ஆம் ஆண்டில் அரச மருந்துத் தயாரிப்பு நிறுவனம் இதுவரை இல்லாத அளவில் அதிக மருந்துத் தயாரிப்பை பதிவு செய்துள்ளதாக சுகாதார மற்றும் ஊடக அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டில் மொத்தமாக 3,625 மில்லியன் மாத்திரைகள் மற்றும் கெப்ஸ்யூல்கள் தயாரிக்கப்பட்டுள்ளதாக அமைச்சு குறிப் பிட்டுள்ளது.

மருத்துவ உபகரணங்கள் பிரிவின் மூலம் வழங்கப்பட்ட அனைத்து மருந்து வேண்டுகோள்களும் எந்தவித பற்றாக் குறையும் இன்றி நிறைவேற்றப்ப ட்டுள்ளதாகவு தெரிவிக்கப்பட் டுள்ளது. 2025 ஆம் ஆண்டில் அரச மருந்துத் தயாரிப்பு நிறுவனத்தின் மொத்த வருமானம் 27.06 பில்லியன் ரூபாவாக பதி வாகியுள்ளதாக சுகாதார மற்றும் ஊடக அமைச்சு தெரிவித்துள்ளது. (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கையின் அர்த்தம் பொறுப்புணர்வு!


பவித்ரா நந்தகுமார்

நம் அனைவருக்கும் எண்ணற்ற அனுபவங்களை தந்த ஆண்டாக 2025 நிச்சயம் இருந்திருக்கும். ஒரு சிலருக்கு ஆகச் சிறந்த அனுபவங்களையும், சிலருக்கு மிகக் கடுமையான பாடங்களையும், இன்னும் சிலருக்கு வேகமாக கடந்து போன ஆண்டாகவும், பலருக்கு எந்த மாற்றமும் இன்றி வெகு சாதாரணமாக கழிந்த ஆண்டாகக் கூட இருந்திருக்கும். ஆனாலும், ஒரு புது ஆண்டு தொடங்க இருக்கிறது எனும்போது எல்லோருக்குள்ளும் புதுப்புது நம்பிக்கைகள், எதிர்பார்ப்புகள் ஏற்படத்தான் செய்கின்றன. நம் வாழ்வில் ஒவ்வொரு தொடக்கத்திற்கு முன்பும் சில தீர்மானங்களை கட்டமைக்க மனம் உறுதி ஏற்கும்.

ஒரு புதிய சுழற்சி வாழ்வில் தொடங்கப்பட்டால் நமக்குள்ளும் பல வைராக்கியங்கள் உருவாகும். அதைத் தீவிரமாகக் கடைபிடித்துச் செயல்படுத்துவதில் இருக்கிறது அவரவர் வெற்றி. பொதுவாகவே புத்தாண்டுக்கு பலரும் பல சபதங்களை ஏற்பது வழக்கம். இருப்பினும், பலருக்கு அது இரண்டொரு மாதங்களிலேயே நீர்த்துப் போய்விடுவதும் உண்டு.

புத்தாண்டு பிறந்தாலே பெருவாரியானவர்களுக்கு நாள்குறிப்பை பார்த்ததும் பெரிய உற்சாகம் ஏற்படும். ஜனவரி, பிப்ரவரியில் அடை மழைபோல் பக்கங்கள் எல்லாம் நிரம்பியிருக்க, மார்ச், ஏப்ரல், மே மாதங்களில் மாதம் மும்மாரி பொழிந்ததுபோல் அங்கொன்றும் இங்கொன்றும் இருக்கும். பின்னர் ஜூன், ஜூலை, ஆகஸ்டில் சிறு தூறலாகிப் போய் செப்டம்பர், அக்டோபரில் வறட்சிக் காலமாகி நவம்பர், டிசம்பரில் "கிணற்றையே காணோம்" கதையாக நாள்குறிப்பையே எங்காவது தொலைத்திருப்போம். இது பலரது வாழ்விலும் நடந்திருக்கும் நகைச்சுவைதான்.

ஆனாலும், புத்தாண்டு என்றதும் எடுக்கப்பட்ட சபதங்கள் காலப்போக்கில் கரைந்து போனாலும் புதுப்புது முன்னெடுப்புகள் ஒவ்வொருவருக்கும் அவசியம்தான். அதுதான் நம் வாழ்வை சலிப்பிலிருந்து உற்சாகம் நோக்கி மடைமாற்றும். உடற்பயிற்சி செய்ய, மருத்துவப் பரிசோதனை மேற்கொள்ள, தவறான பழக்கங்களை நிறுத்த, புத்தகங்கள் வாசிக்க, சுற்றுலா செல்ல, புது மொழி கற்க, புதுக் கலை பழக, நேர்மறையாக இருக்க, குடும்பத்துடன் நேரம் செலவிட, புதிய படிப்பில் சேர என ஒவ்வொருவரும் விதவிதமான சபதம் ஏற்றிருப்பார்கள். ஆனால், நாம் அனைவருமே கைக்கொள்ள வேண்டிய மனநிலை ஒன்று இருக்கிறத் அது பொறுப்புணர்வு.



அண்மையில் வெளிநாடுவாழ் இந்தியர் ஒருவரின் காணொலியைக் கண்டேன். இந்தியர்களை வெறுக்கும் மனநிலை ஏன் பிற நாட்டினரிடம் அதிகரிக்கிறது என்று சில காரணங்களை அடுக்கினார். பொது இடங்களில் குப்பை கொட்டுவதை வெகு இயல்பாக இந்தியர்கள் மேற்கொள்கின்றனர். சாப்பிட்டுவிட்டு, அந்த மிச்சம் மீதிகளை போகிற போக்கில் தூக்கி வீசுகிறார்கள். அதற்கென்று தூய்மைப் பணியாளர்கள் இருக்கிறார்கள் அல்லவா... அவர்கள் செய்யட்டுமே என்ற மோசமான மனநிலை. அதோடு வாயில் பாக்கு போட்டுக் கொண்டு ஏதேனும் இடம் தேடி துப்பாமல் ஆங்காங்கே கண்ணில் படும் சுவரில் எல்லாம் துப்புகிறார்கள். இதனால், அந்தச் சுவற்றை சிரத்தை எடுத்து வண்ணம் பூசி பார்வைக்கு அருமையாக மாற்றியவரின் உழைப்பு மீது துளியும் அனுதாபம் இல்லை.

பொது கழிப்பறையைப் பயன்படுத்திய பிறகு, அதை தனக்குப்பின் பயன்படுத்த வரும் மற்றொரு பயனாளருக்கு சுத்தமாக விட்டுச் செல்லும் நற்செயல் இல்லை. யார் எப்படிப் போனால் என்ன? தன் சௌகரியம்தான் முக்கியம் எனும் தன்னலம் தாங்கிய குணநலனுடனே எப்போதும் வலம் வருகிறார்கள். மேலும், வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களுக்கோ சுற்றுலாத் தலங்களுக்கோ செல்லும்போது பிறர் உழைப்பின் மீதான குறைந்தபட்ச மரியாதையுடன் நடந்து கொள்வதில்லை. தனக்குப் பின்வரும் தலைமுறையும் இவற்றையெல்லாம் காண வேண்டும் என்ற எந்த பொறுப்புணர்வுமின்றி செயல்படுகின்றனர். இதுபோன்ற காரணங்களால்தான் இந்தியர்கள் பின்னடைவுகளைச் சந்திக்கிறார்கள் என்று நீண்டது அந்தக் காணொலி.

காணொலியைப் பார்த்த மாத்திரத்தில் பெருமூச்சு தான் வந்தது. தகவல் தொழில்நுட்ப வசதிகள் பெருகிப் போய் முன்னேற்றப் பாதையில் நாடு சென்று கொண்டிருந்தாலும் தனி மனிதனுக்கு பொறுப்புணர்வு இல்லை என்றால் முற்றிலும் கோணல் ஆகிவிடும். சாலை என்பது அனைவருக்கும் பொது. ஆனால், தனக்கு வீட்டில் வண்டி நிறுத்த இடமில்லை என்று சொல்லி சாலையின் இரண்டு அடியை வீட்டு வராண்டாவுடன் இணைத்துக் கட்டும் பொறுப்பற்ற தன்மை சிலருக்கு எங்கிருந்து வருகிறது? கேட்டால் இது அரசு இடம் உங்களுக்கு என்ன வந்தது என விட்டேத்தியான பதில் வருகிறது. தெருவில் வசிக்கும் எல்லோரும் இப்படிக் கிளம்பி விட்டால் என்ன ஆகும்?

எவ்வளவோ கல்வி அறிவு பெற்றும்கூட பேருந்துகளில் பயணிக்கும்போது அருகில் யார் வருகிறார்கள், போகிறார்கள் என காணாது யார் மீதும் அக்கறையின்றி ஜன்னல் வழியே துப்புவது எத்தனை மோசமான செயல்? தனக்கு நேர்ந்தால் அநீதி என்பதும் பிறருக்கு நேர்ந்தால் எனக்கும் அதற்கும் தொடர்பில்லை என ஒதுங்கிக் கொள்வதும் என ஒவ்வாத பழக்கங்களில் பலர் ஊறிப் போய் கிடக்கிறார்கள்.

எங்கள் பகுதியில் தூய்மைப் பணியாளர்கள் தினமும் காலையில் வீடு வீடாக வந்து குப்பைகளை எடுத்துச் செல்கிறார்கள். சில ஆண்டுகளுக்கு முன்பே மக்கும் குப்பை, மக்காத குப்பை என தனித்தனியாக இரு கூடைகளில் பிரித்துத் தர வேண்டும் என வீடுதோறும் சொல்லிச் சென்றார்கள். மூன்று ஆண்டுகள் கடந்தும் இன்னும் சில வீடுகளில் குப்பைகளை மொத்தமாக அப்படியே தான் கொடுக்கிறார்கள். தூய்மைப் பணியாளர்கள் குப்பைக் கூடையில் கைவிட்டு பிரித்து எடுத்து போட்டுச்

(14ஆம் பக்கம் பார்க்க)

## இந்தவார ராசிபலன் 04.01.2026 - 10.01.2026

ஞாயிற்றுக்கிழமை
விசுவாசவசு வருடம் - மார்கழி 20
நல்ல நேரம்: 7.31 - 09.00 ராகு காலம் : 4.30 - 06.00 திதி :திதித்துவயம்

### மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

நிதி வசதி நன்றாக இருக்கும் குருவின் பார்வையால் குடும்ப உறவுகள் நன்றாக இருக்கும். சந்தோஷம் அனுபவிக்கக்கூடிய வாய்ப்புகள் உண்டு. தொழிலிலும் வணிகத்திலும் உத்தியோகத்திலும் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். முக்கிய பிரமுகர் ஒருவர் உதவி உங்களுக்கு கிடைத்து உங்கள் விருப்பம் நிறைவேறும். திட்டமிட்டு செலவு செய்யவும். தேவையற்ற பயணங்கள் ஏற்படலாம். பிறர் விஷயங்களில் ஈடுபடும் போது சற்று கவனத்துடன் ஈடுபடுங்கள்.

### ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

எதிர்பாராத ஏதோ ஒரு விஷயம் உங்களுக்கு மகிழ்ச்சியை தரும். எல்ஐசி, இன்சூரன்ஸ் விஷயங்களால் ஆதாயம் உண்டு. ராசிநாதன் சுக்கிரன் எட்டில் அமர்ந்தது சில மறைமுகமான உதவிகளையும் ஏற்றங்களையும் செய்யும் அமைப்பு. லாபாதிபதி குரு இரண்டாம் இடத்தில் அமர்ந்திருப்பது நல்ல அமைப்பு. தனகாரகனையும், பஞ்சமாதிபதியையும் பார்ப்பதால் நுட்பமான சில காரியங்களைச் செய்வீர்கள். தகவல் தொழில்நுட்பம், பத்திரிகைத் துறையில் எதிர்பார்த்த உயர்வு உண்டு. எட்டாம் இடத்தைப் பார்க்கிறார்.

### மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

குருவும் புதனும் பரிவர்த்தனை யோகத்தில் இருக்கிறார்கள் அதனால், கணவன் மனைவி கருத்து வேறுபாடுகள் மறைந்து இணக்கம் ஏற்படும். மூன்றாம் இடத்தில் கேது அமர்ந்து தைரியத்தையும் உற்சாகமான மனநிலையையும் தருவார் எதிலும் தெளிவோடு சிந்தித்து முடிவு செய்வீர்கள் எப்படி இருந்தாலும் பார்த்துக் கொள்ளலாம் என்று துணிவுடன் காரியத்தில் இறங்க வெற்றி நிச்சயம். செலவுகள் அதிகரித்தாலும் அவை மகிழ்ச்சியான சுபச் செலவுகளாகவே அமையும்.

### கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

இரண்டு ராஜ கிரகங்கள் சூரியனும் செவ்வாயும் ஆறாம் இடத்தில் அமர்ந்திருக்க, நினைத்த காரியங்களைச் செய்யும் நேர்மறை ஆற்றல் அதிகரிக்கும். குரு 12-ல் இருந்தாலும் அவருடைய பார்வை சூரியனுக்கும் செவ்வாய்க்கும் கிடைக்கிறது. அஷ்டமத்தில் இருந்து சனி விலகும் நேரம் என்பதால் அஷ்டமச் சனியின் தீமைகள் இருக்காது. வேலைவாய்ப்பு தேடுபவர்களுக்கு நல்லதொரு வேலை கிடைக்கும் வாய்ப்பு உண்டு.

### சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

ஐந்தாம் இடம் சூரியனுக்கு கோச்சார ரீதியாக நல்ல இடம் அல்ல என்று சொன்னாலும் கூட, அவர் ராசிநாதன் அல்லவா! ராசிநாதன் திரிகோணத்தில் இருப்பது நிச்சயமாக நற்பலன்களைச் செய்யும். அவரோடு சுக பாக்கிய அதிபதி செவ்வாயும் இணைந்து இருப்பது அருமையான அமைப்பு. எந்த வாய்ப்பையும் சாதகமாக்கிக் கொள்ளும் திறமையைத் தூண்டும் அமைப்பு. சுய சிந்தனை, தெய்வத்தின் அனுகிரகம் உதவி புரியும்.

### கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

ஆறாம் இடத்து ராகு அற்புதமான ஆற்றலைத் தரும். புதிய திட்டங்களை தீட்ட வைக்கும். தொழில் ஸ்தானத்தில் குரு அமர்ந்தாலும் அவர் சுக ஸ்தானத்தையும் ராகுவையும் பார்ப்பதால் லட்சுமி யோகம் உண்டு. நிதி வசதி அதிகரிக்கும். இருக்கும் தொழில் சீராக நடைபெறும். ஓரளவு லாபம் உண்டு. அதிகம் ஆசைப்படாமல் இருந்தால் எந்தச் சங்கடத்தில் மாட்டிக் கொள்ள மாட்டீர்கள். ராசிநாதன் சுகஸ்தானத்தில் இருப்பதால் சுகங்களுக்கு குறைவு இருக்காது வீட்டில் மகிழ்ச்சியும் உண்டு. சிலருக்கு ஊதிய உயர்வு வேலை மாற்றத்தால் ஏற்படும்.

### துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

மூன்றாம் இடம் எனும் உபஜய ஸ்தானம் வலுவடைந்திருக்கிறது. முக்கியமான ராஜ கிரகங்களான செவ்வாய், சூரியன், சுக்கிரன் மூன்றாம் இடத்தில் இருப்பதால் சிந்தனையில் கூர்மை உண்டு. செயல்களில் துணிச்சல் உண்டு. வெற்றிக்கான அதிகபட்ச வாய்ப்புகள் உண்டு. மேலும், மூன்றாம் இடம் குருவின் பார்வையாலும் பலம் பெறுகிறது. அரசாங்க அனுகூலங்கள் உண்டு. போட்டித் தேர்வுகளில் வெற்றி கிடைக்கும்.

### விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

தன, குடும்ப ஸ்தானம் வலுப்பெறுகிறது. குடும்ப ஸ்தானத்திற்கு குரு பார்வை கிடைப்பதால் விரயங்கள் குறையும். இரண்டாம் இடத்தில் சுக்கிரன் அமர்ந்திருப்பதாலும், அவரை குரு பார்ப்பதாலும், பொருளாதாரம் சம்பந்தப்பட்ட விஷயங்களில் குறைவு இருக்காது. கொடுக்கல் வாங்கல்கள் சுலபமாகவே இருக்கும். எப்பொழுதோ போட்ட முதலீடு நீங்கள் எதிர்பார்த்த லாபத்தைத் தரும். தொழில் வணிகம் சீராக நடைபெறும்.

### தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

உப ஜய ஸ்தானமான மூன்றாம் இடத்தில் ராகு அமர, அந்த ராகு பகவானை குரு ஒன்பதாம் பார்வையாகப் பார்ப்பது என்ற அமைப்பில் வீரியஸ்தானம் பலம் பெறுகிறது. வேலை கிடைக்காதவர்களுக்கு வேலை கிடைத்து விடும். எந்தப் பிரச்னைகளையும் நெஞ்சுரத்தோடு எதிர்கொள்ளும் ஆற்றல் கிடைக்கும். லாபாதிபதி சுக்கிரன் ராசியில் செவ்வாயோடு இணைத்து குருவின் பார்வையில் சுக்கிர மங்கல யோகத்தைப் பெறுவது நல்ல அமைப்பு.

### மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

விரயாதிபதி குரு ஆறில் அமர்ந்தது ராஜ யோகம்தான். நம்மிடம் பகை கொண்டவர்கள் கூட சமாதானமாகப் போய்விடுவார்கள். ஆரோக்கியத்தில் முன்னேற்றம் ஏற்படும். கடன்கள் குறையும். காரணம் குரு ஆறில் இருந்தபடியே தன ஸ்தானத்தைப் பார்க்கிறார். 12ல் சுக்கிரன் அமர்வது யோகம் தான். குருவின் பார்வை தொழில் ஸ்தானத்தில் விழுவதால் தொழில்கள் சிரமம் இன்றி நடக்கும். லாபத்தில் குறைவு இருக்காது.

### கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

ராசியில் அமர்ந்த ராசிநாதன் மெல்ல மெல்ல ராசியை விட்டு விலகி, தன குடும்ப ஸ்தானத்தில் நுழையப் போகிறார். தன குடும்ப நாதன் குரு ஐந்தாம் இடத்தில் அமர்ந்து ராசியில் உள்ள ராகுவைப் பார்த்து ராசி தோஷத்தை நீக்குகின்றார். லாப ஸ்தானத்தில் முக்கியமான கிரகங்கள் வலிமையாக இருக்கின்றன. ஐந்தாம் இடத்தையும் பார்க்கின்றன. பூர்வ புண்ணிய ஸ்தானம் பலமடைந்து இருக்கிறது. எனவே தொட்ட காரியங்கள் வெற்றி பெறும். மனதில் நிம்மதி இருக்கும். ஆற்றலோடு காரியத்தைச் செய்வீர்கள்.

### மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

குருவின் பார்வையால் கர்ம ஸ்தானம் பலம் பெறுகிறது. உங்கள் வேலை உத்தியோகச் சிறப்பு அங்கீகரிக்கப்படும். அரசியலில் உள்ளவர்களுக்கு புதிய பதவிகள் வந்து சேரும் பத்தில் சூரியன் இருப்பதும் செவ்வாயோடு இணைந்து இருப்பதும் குரு பார்ப்பதும் இத்தகைய அம்சங்களை பெற்றுத் தரும். தாய் தந்தையரின் உதவி கிடைக்கும். நண்பர்கள் உதவுவார்கள். திருத்தல தரிசனம் உண்டு. தேவையற்ற செலவுகளை செய்ய வேண்டி இருக்கும். கொஞ்சம் கவனம் இருந்தால் தப்பிக்கலாம். மருத்துவச் செலவுகள் ஏற்படும் அமைப்பும் உண்டு. விட்டுக் கொடுத்துச் செல்லவும். சிறு பிரச்னைகள் வரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமாளிக்கமுடியாத சவால்களுடன் புத்தாண்டிற்குள் பிரவேசித்திருக்கும் இலங்கை!



♦ வீரகத்தி தனபாலசிங்கம்

இயற்கை அனர்த்தத்தின் விளைவான அழிபாடுகளில் இருந்து நாட்டை மீளக்கட்டியெழுப்பு வதில் பாரிய சவால்களுக்கு முகங்கொடுக்க வேண்டியி ருக்கும் இடர்மிகுந்த சூழ்நிலைக்கு மத்தியில் இலங்கை மக்கள் புதிய வருடத்திற்குள் பிரவேசித்திருக்கிறார்கள்.

இலங்கை அதன் வரலாற்றில் முன்னென்றுமே கண்டிராத படுமோசமான 2022 பொருளாதார வீழ்ச்சிக்கு பிறகு பொருளாதாரத்தை நிலையுறுதிப்படுத்துவதற்கு முன்னெடுக்கப்பட்டு வந்த மறுசீரமைப்பு நடவடிக்கைகளில் ஏற்பட்டுவந்த ஒப்பீட்டு அளவிலான முன்னேற்றத்தை 'டித்வா' சூறாவளி மறுதலையாக்கியிருக்கிறது.

மக்களின் மாபெரும் எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் அதிகாரத்துக்கு வந்த ஜனாதிபதி அநுரா குமார திசநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அதன் பதவிக்காலத்தின் முதல் வருடத்தைக் கடந்து வந்திருக்கும் நிலையில், இயற்கை அனர்த்தத்தின் விளைவாக சமாளிக்க முடியாத கடமைப் பொறுப்புக்கு முகம் கொடுக்க வேண்டியிருக்கிறது.

முன்னெச்சரிக்கைகள் விடுக்கப்பட்டிருந்த போதிலும், சூறாவளியின் பாதிப்புக்களை முன்கூட்டியே தணிப்பதற்கு அவசியமான நடவடிக்கைகளை எடுக்கத் தவறியதையும் அனர்த்தத்துக்கு பின்னரான நிவாரண உதவிப் பணிகளிலும் புனரமைப்பு நடவடிக்கைகளிலும் காணப்படும் குறைபாடுகளையும் கண்டனம் செய்து கொண்டிருக்கும் எதிரணிக் கட்சிகள், தேசிய மக்கள் சக்தியின் தலைவர்களுக்கு ஆட்சி முறையில் அனுபவமும் தகுதியும் இல்லை என்று ஏற்கெனவே முன்வைத்து வந்த விமர்சனத்தை மேலும் தீவிரப்படுத்தியிருக்கின்றன.

பரந்தளவிலான கலந்தாலோசனையின் அடிப்படையிலான தீர்வுகளை வேண்டி நிற்கும் அரசியல், பொருளாதார நெருக்கடிகளாக இருந்தாலென்ன, இயற்கையின் சீற்றம் ஏற்படுத்தும் பேரழிவாக இருந்தாலென்ன தேசிய அனர்த்தங்களின்போது சகல தரப்புகளையும் அரவணைக்கும் அணுகுமுறை மூலமாக நாட்டையும் மக்களையும் மீட்டெடுக்க வேண்டும் என்ற பொறுப்புணர்ச்சியுடன் அரசியல் சக்திகள் செயற்பட முன்வராத சாபக்கேடான கலாசாரம் ஒன்று இலங்கையில் ஆழமாக வேரூன்றிவிட்டது.

2024 ஆகஸ்டில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கைதுசெய்யப்பட்ட வேளையில் ஒன்றிணைந்து செயற்பட வேண்டிய தேவை குறித்து எதிரணி அரசியல்வாதிகள் அக்கறை காட்டிய போதிலும், அதற்கான முயற்சிகளை முன்னெடுப்பதற்கு நம்பகத்தன்மை கொண்ட காரணங்களை அவர்களினால் முன்வைக்க முடியவில்லை. அதேபோன்றே சூறாவளியின் விளைவான நெருக்கடியையும் அரசாங்கத்துக்கு எதிராக மக்களை திருப்புவதற்கு




பயன்படுத்தக்கூடிய சந்தர்ப்பமாக நம்பியதில் அவர்கள் மீண்டும் தவறிழைத்துவிட்டனர்.

அதேவேளை, சகல தரப்புகளையும் ஈடுபடுத்தி அழிபாடுகளில் இருந்து மக்களை மீட்டெடுப்பதற்கான பணிகளை முன்னெடுப்பதில் அரசாங்கமும் அக்கறை காட்டவில்லை. நாட்டை மீளக்கட்டியெழுப்புவதற்கான பணிகளை முன்னெடுப்பதற்கு நியமிக்கப்பட்டிருக்கும் ஜனாதிபதி செயலணி, அரசாங்கத்தின் அணுகுமுறையில் உள்ள பாரதூரமான குறைபாட்டை தெளிவாக அம்பலப்படுத்துகிறது. அந்த செயலணியில் அரசாங்கத் தரப்பைச் சாராத சகல உறுப்பினர்களுமே அனர்த்த முகாமைத்துவத்தில் அல்லது பாதிக்கப்பட்ட மக்களின் தேவைகளை கையாளுவதில் அனுபவத்தை அல்லது நிபுணத்துவத்தை கொண்டவர்கள் என்று அறியப்படவில்லை என்ற விமர்சனம் சிவில் சமூக அமைப்புகளிடம் இருந்து வந்திருக்கிறது.

ஒரு இடதுசாரிக் கூட்டணியாக இருக்கின்ற போதிலும் கூட, தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் சிவில் சமூக அமைப்புக்களுடன் ஊடாட்டங்களைச் செய்வதில் மிகுந்த எச்சரிக்கையுடனேயே நடந்துகொள்கிறது. பல்வேறு விமர்சனங்களுக்கு பின்னர்தான் ஜனாதிபதி செயலணியில் குறைந்தபட்சம் சிவில் சமூகத்தைச் சேர்ந்த ஒரு பிரதிநிதியையாவது சேர்த்துக்கொள்வதற்கு அரசாங்கம் முன்வந்திருப்பதாக தெரியவருகிறது.

கொள்கைகளை வகுக்கும் செயன்முறைகளில் பரந்தளவிலான தரப்புகளின் பங்கேற்பை குறிப்பாக, சிறுபான்மைச் சமூகங்களை திட்டமிட்ட முறையில் புறக்கணித்த கடந்தகால அணுகுமுறைகளின் விளைவாக நாடு அனுபவித்த அவலங்களில் இருந்து தேசிய மக்கள் சக்தி எந்த பாடத்தையும் கற்றுக் கொள்ள முயற்சிக்கவில்லை.



**ஏற்கெனவே பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு சர்வதேச சமூகத்தை நம்பியிருக்கும் இலங்கை, இயற்கையின் சீற்றத்தின் அழிபாடுகளில் இருந்து மீட்சிபெறுவதற்கும் வெளிநாட்டு உதவிகளிலேயே தங்கியிருக்க வேண்டியிருப்பதால் வல்லாதிக்க நாடுகளின் புவிசார் அரசியல் நலன்களுக்குள் சிக்கிக் கொள்வதை தவிர்க்க முடியாமல் போகலாம்.**

ஆனால், சர்வதேச சமூகத்தைக் கையாளுவதில் முன்னைய அரசாங்கங்கள் கடைப்பிடித்த அணுகுமுறைகளின் விளைவாக தோன்றியதைப் போன்ற நெருக்கடிகள் தங்களுக்கு வராமல் இருப்பதை உறுதி செய்வதில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் மிகுந்த விவேகத்துடன் செயற்பட்டுவருகிறது. அமெரிக்கா மற்றும் மேற்குலக வல்லாதிக்க நாடுகளுடனும் ஆசியாவின் பெரிய நாடுகளுடனுமான உறவுகளில் ஒரு சமநிலையை அவர்கள் பேணுகிறார்கள். இந்தியா, சீனா, ஜப்பான் மற்றும் பாகிஸ்தான் போன்ற நாடுகள் சூறாவளியின் பாதிப்புக்களில் இருந்து மக்களை மீட்பதற்கு மேற்கொண்ட நடவடிக்கைகளும் மேற்குலக நாடுகளிடமிருந்து இருந்து கிடைத்த எதிர்பார்த்திராத வகையிலான பேரளவு உதவிகளும் இதற்கு சான்று.

குறிப்பாக, இந்தியாவுடனும் சீனாவுடனும் உறவுகளை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் மிகவும் சாதுரியமாகக் கையாளுகிறது. சீனக் கம்யூனிஸ்ட் கட்சியுடன் ஜனதா விமுக்தி பெரமுனவுக்கு ( ஜே.வி.பி.) நீண்டகாலமாக இருந்து வரும் நெருக்கமான அரசியல் தொடர்புகளையும் அதன் கடந்தகால இந்திய விரோத நிலைப்பாட்டையும் அடிப்படையாகக் கொண்டு நோக்கும்போது அதன் தலைமையிலான ஆட்சியில் புதுடில்லிக்கு எரிச்சலை ஏற்படுத்தக்கூடிய விதத்தில் பெய்ஜிங்குடனான உறவுகள் அமையும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், சகல எதிர்பார்ப்புக்களையும் பொய்யாக்கி ஜனாதிபதி திசநாயக்கவின் அரசாங்கம் இந்தியாவுடன் மிகவும் நெருக்கமான உறவுகளைப் பேணுகிறது. ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் ஆட்சிக் காலத்தில் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் நிலவிய உறவுகளை அன்றைய வெளியுறவு அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் 'மாற்றியமைக்கமுடியாத அளவுக்கு மகோன்னதமானவை' என்று வர்ணித்தார். ஆனால், இன்று திசநாயக்கவின் ஆட்சியில் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை எவ்வாறு வர்ணிப்பது என்றே தெரியவில்லை.

இலங்கைக்கு மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்கும் மீட்புப் பணிகளில் ஈடுபடுவதற்கும் வல்லாதிக்க நாடுகள் முண்டியடித்துக்கொண்டு ஓடிவந்ததை இந்து சமுத்திரத்தில் புவிசார் நலன்களின் மறைமுகமான ' காட்சிப்படுத்தல்' என்று கூறமுடியும். அனர்த்த நிவாரண உதவிகளை வழங்குவது ஒரு நல்லெண்ணச் செயற்பாடு மாத்திரமல்ல, இராஜதந்திர நகர்வுமாகும். நிவாரண உதவிகளை வழங்குவதற்கு கிடைத்த வாய்ப்பை வல்லாதிக்க நாடுகள் கொழும்புடன் உறவுகளை வலுப்படுத்திக் கொள்வதற்கான சந்தர்ப்பமாகப் பயன்படுத்திக் கொண்டன.

இலங்கையில் அனர்த்தங்கள் நிகழ்கின்ற வேளைகளில் எல்லாம் முதலில் உதவிக்கு விரைகின்ற நாடான இந்தியா இந்த தடவை கடற்படையின் விமானந்தாங்கி கப்பல்கள் சகிதம் அதிவிசேடமான அக்கறையை வெளிப்படுத்தியதை காணக்கூடியதாக இருந்தது. வெளியுறவு அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் பிரதமர் நரேந்திர மோடியின் விசேட தூதுவராக கொழும்புக்கு வந்து இலங்கையை மீளக்கட்டியெழுப்புவதற்கான உதவித்திட்டத்தை அறிவித்தார்.

அவர் ஊடாக மோடி ஜனாதிபதி திசநாயக்கவுக்கு கொடுத்தனுப்பிய கடிதத்தில் 'இலங்கையின் பக்கத்தில் இந்தியா எப்போதும் நிற்கும்' என்று குறிப்பிட்டிருந்தார். ஜெய்சங்கரின் விஜயத்தின்போது அறிக்கை ஒன்றை வெளியிட்ட திசநாயக்க 'இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவுகளில் இது ஒரு புதிய யுகம்' என்று வர்ணித்திருந்தார்.

ஜெய்சங்கர் புதுடில்லி திரும்பிய உடனடியாக சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் 20 வது மத்திய குழுவின் உறுப்



பினர் வாங் ஜூன்ஷெங் தலைமையிலான உயர்மட்டத் தூதுக்குழு ஒன்று இலங்கை அரசாங்கத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தியது. ஒட்டுமொத்தமாக நோக்கும்போது கேந்திரமுக்கியத்துவ போட்டிக்குரிய ஒரு பிராந்தியத்தில் தங்களது செல்வாக்கை மீளஉறுதிப்படுத்திக் கொள்வதற்கு இந்த சந்தர்ப்பத்தை வல்லாதிக்க நாடுகள் பயன்படுத்திக் கொண்டன.

இலங்கையை போன்று காலநிலை மாற்றத்தின் விளைவான இயற்கை அனர்த்தங்களினால் அடிக்கடி பாதிக்கப்படும் ஆபத்தைக்கொண்ட நாடுகள், சகல நாடுகளுடனும் நல்லுறவைப் பேணவேண்டிய அவசியம் இருக்கிறது. ஆனால், வெளிநாட்டு உதவிகளில் தங்கியிருக்கும் போக்கு அதிகரிக்கும்போது வல்லாதிக்க நாடுகளின் புவிசார் அரசியல் போட்டாபோட்டியின் மைதானமாக மாறுகின்ற ஆபத்தும் அதிகரிக்கிறது. உதவிகளைப் பெறுகின்ற அதேவேளை, முக்கியமான நாடுகளுடனான உறவுகளில் சமநிலை ஒன்றைப் பேணுவது என்பது மிகவும் சிக்கலான ஒரு காரியமாகும்.

ஏற்கெனவே பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு சர்வதேச சமூகத்தை நம்பியிருக்கும் இலங்கை, இயற்கையின் சீற்றத்தின் அழிபாடுகளில் இருந்து மீட்சிபெறுவதற்கும் வெளிநாட்டு உதவிகளிலேயே தங்கியிருக்க வேண்டியிருப்பதால் வல்லாதிக்க நாடுகளின் புவிசார் அரசியல் நலன்களுக்குள் சிக்கிக் கொள்வதை தவிர்க்க முடியாமல் போகலாம். இதுகாலவரை அந்த நாடுகளுடனான உறவுகளில் பேணிவந்த சமநிலையை தொடர்ந்தும் பேணுவதற்கு தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தினால் இயலுமாக இருக்குமா என்பதற்கு காலம்தான் பதில் சொல்ல வேண்டும்.

இதனிடையே, நாட்டுமக்களுக்கு வழங்கிய வாக்குறுதியின் பிரகாரம் அரசியல் சீர்திருத்தங்களை கொண்டு வருவதில் அரசாங்கத்தினால் போதியளவுக்கு கவனம் செலுத்துவதற்கு அவகாசம் கிடைக்குமா? ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகல தரப்புகளையும் அரவணைக்கும் ஆட்சிமுறையின் ஊடாக நாட்டைக் மீளக்கட்டியெழுப்புதல் !

**இலங்கையை மீளக்கட்டியெழுப்புவதற்கான செயலணியில் பங்கேற்குமாறு சிவில் சமூகத்துக்கு விடுக்கப்பட்ட அழைப்பு முக்கியமான ஒரு தொடக்கமாகும். அது ஒரு திருப்புமுனையாக மாறுமா இல்லையா என்பது நெருக்குதலின் கீழ் சலுகையைக் காட்டும் செயற்பாடாக அன்றி, சகல சமூகங்களையும் அரவணைப்பதை ஆட்சிமுறையின் ஒரு கோட்பாடாக கடைப்பிடிக்க அரசாஙாகம் தயாராக இருக்கிறதா என்பதிலேயே தங்கியிருக்கிறது.**



கலாநிதி ஜெகான் பெரேரா

டித்வா சூறாவளியை அடுத்து உடனடியாக அரசாங்கம் (தேவைகளை மதிப்பீடு செய்வதற்கும் முன்னுரிமைககளை தெரிவுசெய்து வளங்களை ஒதுக்கீடு செய்வதற்கும் நிதியைப் பகிர்ந்தளிப்பதற்குமான மையக்குழுவொன்றுடன் கூடிய) இலங்கையை மீளக்கட்டியெழுப்புவதற்கான ஜனாதிபதி செயலணியை அமைத்தது. ஆனால், பொதுவெளியில் பிரதிபலிப்பு அந்த குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டவர்கள் மீது கவனம் செலுத்தியதாகவே இருந்தது. குழுவின் பதினொரு உறுப்பினர்களுமே ஆண்கள். அத்துடன் அரசாங்கத்தைச் சாராத சகல உறுப்பினர்களுமே சிக்கலான தேசிய அபிவிருத்திச் செயற்திட்டங்கள், அனர்த்த முகாமைத்துவம் பாதிப்புக்குள்ளான மக்கள் பிரிவினரின் தேவைகளைக் கையாளக்கூடிய அனுபவத்தைக் கொண்டர்களாக அறியப்படாத வர்த்தகத்துறைப் பிரமுகர்களாகவே இருக்கிறார்கள்.

அவர்கள் மாபெரிய இலாபங்களைச் சம்பாதிக்கும் இலங்கையின் தனியார்துறையின் உச்சியில் இருக்கும் குழாமைச் சேர்ந்தவர்கள். இந்த செயலணிக் குழுவின் பாத்திரத்தையும் நோக்கத்தையும் மறுபரிசீலனை செய்து நாட்டையும் அதன் பல்வேறு வகைப்பட்ட தேவைகளையும் பெருமளவுக்கு பிரதிநிதித்துவம் செய்யக்கூடியவர்களை உறுப்பினர்களாக நியமித்து மீளமைப்புச் செய்யுமாறு சிவில் சமூகக்குழுக்கள் அரசாங்கத்தை வலியுறுத்திக் கேட்டிருக்கின்றன.

தொடக்கத்தில் நியமிக்கப்பட்ட அதிக வல்லமை கொண்ட வர்த்தகப் பிரமுகர்களினால் கோர்ப்பரேட் நிறுவனங்களிடம் இருந்தும் சர்வதேச உதவி வழங்குநர்களிடம் இருந்தும் நிதியைத் திரட் டுவதற்கு உதவ முடியும். ஆனால், அவர்களை முன்னுரிமைகளைத் தீர் மானித்து உதவிகள் வழங்கப்ப டுவதையும் செலவினங்களையும் மேற்பார்வை செய்வதற்கான தகு தியையும் ஆற்றலையும் கொண்ட வர்கள் என்று கூறமுடியாது. நிதி திரட்டல், நிதிமேற்பார்வை, செல வின முன்னுரிமை ஆகியவற்றை தனித்தனியான பணிகளாகப் பிரிக்க வேண்டியது அவசியமாகும். அவை வேறுபட்ட ஆற்றல்களையும் பரிசீலனைகளையும் வேண்டிநிற்கும் பணிகளாகும்.

அனர்த்தங்களுக்கு பின்னரான மீட்சியைப் பொறுத்தவரை, சகல தரப்பினரையும் உள்ளடக்கியதாக பரந்தளவிலான பிரதிநிதித்துவத்தைக் கொண்ட கட்டமைப்புகள் ஒப்புரவானதும் பயனுறுதியுடையதும் மக்களினால் ஏற்றுக் கொள்ளக்கூடியதுமான விளைவுகளைக் கொண்டுவரக்கூடி யவை என்பதை சர்வதேச அனுபவம் காட்டுகிறது. உதாரணமாக, சிவில் சமூகம் சமுதாயங்களில் வேர்விட்ட அறிவையும் பாதிக்கப்படும் நிலையில் இருக்கின்ற மக்கள் குழுக்களுடன் பணியாற்றிய அனுபவத்தையும் கொண்டுவரக்கூடியவை.

அரசாங்கம் இந்த விமர்சனங்களை கவனத்தில் எடுத்து குறைந்தபட்சம் சிவில் சமூக அமைப்பின் ஒரு பிரதிநிதியையாவது இலங்கையை மீளக்கட்டியெழுப்புவதற்கான குழுவில் இணைந்து கொள்ளுமாறு அழைத்திருப்பது நேர்மறையானதும் முக்கியமானதுமான ஒரு முன்னேற்றமாகும். அரசாங்கத்தின் இந்த தீர்மானத்தை சிவில் சமூகம் அக்கறையுடன் பரிசீலித்து நேர்மறையான முறையில் பதிலளிக்க வேண்டியது அவசியமானதாகும்.

அத்துடன் தனியொரு பிரதிநிதி அல்ல மேலும் கூடுதல் பிரதிநிதிகள் நியமிக்கப்பட வேண்டும் என்றும் சிவில் சமூகம் கோரவேண்டும்.

அத்தகைய கோரிக்கை தேசிய அனர்த்தம் ஒன்றுக்கு பிறகு நாட்டை மீளக்கட்டியெழுப்புவது என்பது அரசினாலும் வர்த்தக சமூகத்தினாலும் மாத்திரம் முன்னெடுக்கக்கூடிய பணி அல்ல விளக்கப்பாட்டை பிரதிபலிக்கும். சிவில் சமூகத்தைச் சேர்த்துக் கொள்வது குறிப்பாக, நிறுவனங்கள் மீதான நம்பிக்கை சஞ்சலமானதாக இருக்கின்ற ஒரு தருணத்தில், வெளிப்படைத் தன்மையையும் மக்களின் நம்பிக்கையையும் வலுப்படுத்தும். ஒரு நியமனம் மாத்திரம் சகல தரப்புகளையும் அரவணைக்கும் ஆட்சிமுறையை உறுதிசெய்து விடப்போவதில்லை என்கிற அதேவேளை, சிவில் சமூகத்தைச் சேர்த்துக்கொள்வது விரிவுபடுத்தி நிறுவனமயப்படுத்தப்பட வேண்டிய தேவையுடைய - பரந்தளவிலான பங்கேற்பு அணுகுமுறையொன்றுக்கு கதவைத் திறந்துவிடும்.

வரலாற்றைத் திரும்பிப் பார்க்கும்போது அரசாங்கத்தின் கொள்கைகளை வகுப்பதில் சகல தரப்புகளையும் சேர்த்துக்கொள்ளாமல் இருந்ததன் விளைவாக நாட்டுக்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டது என்பதை புரிந்துகொள்ள முடியும். சொந்தச் சமூகத்துக்கு அல்லது சொந்த அரசியல் கட்சிக்கு முக்கியத்துவம் கொடுத்துக்கொண்டு மற்றைய சமூகங்களை புறமொதுக்கும் அணுகுமுறை 1948 ஆண்டில் சுதந்திரமடைந்த ஆரம்பத்திலேயே தொடங்கிவிட்டது. மலையக தமிழ்ச் சமூகத்தின் குடியுரிமையைப் பறித்ததன் மூலம் தேசபிதா டி.எஸ். சேனநாயக்க அந்த மக்களை புறமொதுக்கிய அரசாங்கம் ஒன்றுக்கு தலைமை வகித்தார்.

எட்டு வருடங்கள் கழித்து 1956 ஆம் ஆண்டில் ஒக்ஸ்போர்ட் கல்விமான் எஸ் டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்க சிங்களத்தை மாத்திரம் அரசகரும மொழியாக்கியதன் மூலம் அரசாங்கத்தில் இருந்து தமிழ்பேசும் மக்களைப புறமொதுக்கினார். இந்த தீர்மானங்கள் மற்றைய சமூகங்களை அரவணைப்பதை விடுத்து புறமொதுக்கும் அணுகுமுறையை ஆட்சிமுறைக்கான வழமையான ஒரு கருவியாக்கிவிட்டது. அதுவே ஏழு தசாப்தகால அரசியல் முரண்நிலைக்கும் மூன்று தசாப்தகால உள்நாட்டுப் போருக்கும் வழிவகுத்தது.

அரசியல் கட்சி அடிப்படையிலும் நச்சுத்தனமான பகைமையுடன் புறமொதுக்கல் இடம் பெற்றுவந்திருக்கிறது. சுதந்திரத்துக்கு பின்னர் கொண்டு வரப்பட்ட இரு அரசியலமைப்புக்களும் அரசாங்கங்களினால் மாத்திரமே தீர்மானிக்கப்பட்டன. 1972 ஆம், 1978 ஆம் ஆண்டுகளில் புதிய அரசியலமைப்புக்களை எதிரிணி அரசியல் கட்சிகள் எதிர்த்தே வாக்களித்தன. அந்த அரசியலமைப்புக்களை வடிவமைக்கும் செயன்முறைகளில் இருந்து அந்த கட்சிகள் ஒதுக்கப்பட்டதே அதற்கு காரணமாகும். அவை சமர்ப்பித்த யோசனைகள் ஏற்றுக்கொள்ளப்படவில்லை..



நாட்டின் அடிப்படைச் சட்டம் கருத்தொருமிப்பின் அடிப்படையில் ஒருபோதுமே கொண்டு வரப்படவில்லை. அந்த மரபே தொடர்ந்தும் பகைமை அரசியலையும் நிறுவனங்களின் வலுவற்ற தன்மையையும் வடிவமைத்துக் கொண்டிருக்கிறது. தீர்மானங்களை எடுக்கும் செயன்முறைகளில் இருந்து மற்றைய சமூகங்களும் அரசியல் கட்சிகளும் புறமொதுக்கப்பட்டு வந்தமையின் விளைவாக அரசாங்கக் கொள்கை அடிக்கடி மற்றியமைக்கப்படும் நிலை தோன்றியது. கல்வியிலோ அல்லது பொருளாதார ஒழுங்கமைப்பிலோ அல்லது வெளியுறவுக் கொள்கையிலோ ஒரு அரசாங்கம் செய்ததை அடுத்துவந்த அரசாங்கங்கள் மாற்றியமைத்தன.

இந்த காரணியே துரித பொருளாதார வளர்ச்சிக்கு அவசியமான வெளிநாட்டு முதலீடுகளைப் பெறுவதில் இலங்கையின் போதாத செயற்பாட்டுக்கு பிரதான காரணமாகும். கொள்கை உறுதிப்பாடின்மை என்பது வெறுமனே ஒரு பொருளாதாரப் பிரச்சினை அல்ல, அது அதிகாரத்துக்கு குறுகிய நோக்கத்துடன சொந்தம் கொண்டாடியமையின் விளைவான ஒரு அரசியல் பிரச்சினையுமாகும். 2022 ஆம் ஆண்டில் அரசாங்கத்துக்கு எதிராக மக்கள் வீதிகளில் இறங்கிக் கிளர்ச்சி செய்து அதை தூக்கியெறிந்தபோது அவர்கள் முறைமை மாற்றத்தைக் கோரினார்கள்.

அந்தக் கோரிக்கை உயர்மட்டங்களில் தாராளமாக காணப்பட்ட ஊழல் மீதே பிரதானமாக கவனத்தைக் குவித்தது. தற்போதைய அரசாங்கம் செய்வதைப் போன்ற ஊழலுக்கு எதிரான கவனக்குவிப்பு அரசாங்கத்தைப் பொறுத்தவரை, பயனுடைய இரு தாக்கங்களைக் கொண்டிருக்கிறது. அதில் முதலாவது, மக்களின் நல்வாழ்வுக்காக வளங்களை உச்சபட்சமாக பயன்படுத்தக்கூடியதாக வளங்களின் விரயம் குறைந்தபட்சமாக இருப்பதை அரசாங்கம் உறுதிசெய்வதாகும்.

இரண்டாவது பயன் ஊழல் குற்றச் செயல்களின் மீது கவனத்தைக் குவிப்பதன் மூலமாக எதிரணியில் உள்ள பல தலைலர்களை அரசாங்கத்தினால் செயலிழக்கச் செய்யமுடியும் என்பதாகும். ஊழல் குற்றச்சாட்டுக்களின் பேரில் எவ்வளவு கூடுதலாக எதிரணி அரசியல் தலைவர்களை அரசாங்கம் சிறைக்குள் தள்ளுகிறதோ அந்தளவுக்கு குறைவான போட்டியையே அரசாங்கம் எதிர்கொள்ளும். என்றாலும், இந்தப் பயன்கள் சகல தரப்புகளையும் அரவணைக்கும் ஆட்சிமுறையின் ஆழமான தேவையை பதிலீடு செய்துவிட முடியாது.

முக்கிய கவனம் செலுத்த வேண்டிய பிரச்சினையாக ஊழலையே தற்போதைய அரசாங்கம் அடையாளம் கண்டிருக்கின்றது போன்று தெரிகிறது. ஆனால், ஊழலைக் குறைப்பதன் அல்லது ஒழிப்பதன் மூலம் மாத்திரம் துரித பொருளாதார அபிவிருத்திக்கு வழிவகுத்துவிடாது. பொருளாதார வளர்ச்சியின்மைக்கு ஊழல் மாத்திரம் தான் காரணம் அல்ல. புதிய அரசாங்கம் ஒன்று அதிகாரத்துக்கு வருகின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அரசாங்கக் கொள் கைகள் மாற்றியமைக்கப் படாமல் இருப்பதை உறுதி செய்வது துரித பொரு ளாதார வளர்ச்சியில் மிகவும் முக்கியமான ஒரு கார ணியாகும்.

சுயசார்பு மற்றும் துரித பொருளாதார வளர்ச்சிக் கான நிலைமாற்றத்தை இலங்கை செய்ய வேண்டுமானால், இன்று பின்பற்றப்படுகின்ற பொருளாதா ரக் கொள்கைகள் நாளை மாற்றிய மைக்கப்படாமல் இருப்பது அவ சியமாகும். சகல தரப்புகளையும் அரவணைக்கின்ற ஆட்சிமுறையே கொள்கைத் தொடர்ச்சியை உறுதி செய்வதற்கான சிறந்த வழியாகும். எதிரணியில் இருப்பவர்களை புறமொதுக்குவதற்கு பதிலாக, குறிப்பாக பிரதான அரசியல் போக்கில் உள்ள எதிர்க்கட்சிகளை உள்ளடக்கிய செயற்பாடுகளை முன்னெடுப்பது அவசியமாகும். முறைமை மாற்றத்தைப் பொறுத்தவரை, ஊழலைக் கையாளும் விடயத்தில் அரசாங்கத்தின் அணுகுமுறைக்கு நல்ல வரவேற்பு கிடைத்திருக்கிறது. கடந்த காலத்துடன் ஒப்பிடும்போது தற்போது ஊழல் பெருமளவுக்கு குறைந்திருக்கிறது என்ற ஒரு பொதுவான உணர்வு நாட்டில் நிலவுகிறது.

ஆனால், சகல தரப்புகளையும் சகல சமூகங்களையும் அரவணைப்பது தொடர்பில் அரசாங்கம் கூடுதலான பற்றுறுதியை வெளிக்காட்ட வேண்டிய தேவை இருக்கிறது. ஆரம்பத்தில் அமைச்சர்களை தெரிவு செய்ததில் இதை வெளிப்படையாக காணக்கூடியதாக இருந்தது. அமைச்சரவையில் அனேகமாக சகலரும் ஆண்களாகவும் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்களாகவும் இருந்தனர்.'கிளீன் சிறிலங்கா" திட்டத்துக்கான ஜனாதிபதி செயலணி மற்றும் நாட்டை மீளக்கட்டியெழுப்புவதற்கான செயலணி உட்பட பல்வேறு முக்கியமான குழுக்களை அமைத்தபோது நாட்டின் பன்முகத்தன்மையை பிரதிபலிக்கக்கூடிய முறையில் நடந்து கொள்ள அரசாங்கம் தவறிவிட்டது.

இலங்கையைப் போன்ற பல இனங்களையும் பல மதங்களையும் கொண்ட ஒரு நாட்டில் சகல தரப்புக்களையும் சமூகங்களையும் அரவணைப்பது என்று வெறுமனே ஒரு அடையாளபூர்வமான விடயம் அல்ல. பல்வேறு கருத்துக் கோணங்களையும் நோக்குகளையும் கையாள வேண்டியதும் பரஸ்பர புரிந்துணர்வை வளர்க்க வேண்டியதும் அத்தியாவசியமானதாகும். முக்கியமான கொள்கைகளை வகுக்கும் அமைப்புக்களை குறிப்பாக தேசிய மீட்சிக்கான பணிகளுக்கு பொறுப்பான அமைப்புக்களை நியமிக்கும்போது தமிழ், முஸ்லிம் மற்றும் ஏனைய சிறுபான்மைச் சமூகங்களைச் சேர்ந்த உறுப்பினர்களையும் நாட்டின் சனத்தொகையில் 52 சதவீதத்தினராக இருக்கும் பெண்களையும் சேர்த்துக்கொளவது முக்கியமானதாகும்.

அத்தகைய பிரதிநிதித்துவம் இல்லையென்றால், நெருக்கடியினால் பெரிதும் பாதிக்கப்பட்ட அதே சமூகங்களின் குறைபாடுகள் கவனிக்கப்படாமலும் அவர்களது குரலுக்கு மதிப்பளிக்கப்படாமலும் இருக்கின்ற போக்கு தொடரவே செய்யும். பழைய மனக்குறைகளும் பிரச்சினைகளும் புதிய வடிவங்களில் மீண்டும் கிளம்பும். இலங்கையை மீளக்கட்டியெழுப்புவதற்கான செயலணியில் பங்கேற்குமாறு சிவில் சமூகத்துக்கு விடுக்கப்பட்ட அழைப்பு முக்கியமான ஒரு தொடக்கமாகும். அது ஒரு திருப்புமுனையாக மாறுமா இல்லையா என்பது நெருக்குதலின் கீழ் சலுகையைக் காட்டும் செயற்பாடாக அன்றி, சகல சமூகங்களையும் அரவணைப்பதை ஆட்சிமுறையின் ஒரு கோட்பாடாக கடைப்பிடிக்க அரசாஙாகம் தயாராக இருக்கிறதா என்பதிலேயே தங்கியிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளாட்சிச் சபைகளின் அலங்கோல அரசியல்!

பனங்காட்டான்

கடந்த வருடம் மே மாதம் இலங்கையில் இடம்பெற்ற உள்ளாட்சித் தேர்தல்களின் நிகழ்கால குழப்பங்கள் பற்றி எழுத முனைந்த வேளையில், முந்தி வந்த காதை பிந்தி வந்த கொம்பு மறைத்த கதைபோல விடயம் திசை திரும்ப நேர்ந்துள்ளது. இத்திருப்பத்தின் காரணமாக இரண்டு விடயங்களை முதலில் பார்த்துவிட்டு பின்னர் இவ்வாரத்தானதுக்கு வரலாம்.

கடந்த இரண்டு வருடங்களாக காங்கேசன்துறையிலுள்ள தையிட்டி திஸ்ஸ விகாரை தொடர்பான செயற்பாடுகள் அது அமைந்துள்ள காணிகளை பறிகொடுத்தவர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதற்கு முன்னுரிமை கொடுத்து அக்காணிகளுக்கு முன்னால் பௌர்ணமி தினங்களில் (பௌத்தர்கள் இதனை போயா தினம் என்பர்) உரிமைப் போராட்டம் நடத்த ஆரம்பித்தவர்கள் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர்.



இவ்வாறான ஒரு போராட்டம் நடைபெறுவதை தெரியாததுபோல் பாசாங்கு பண்ணிக் கொண்டு தமிழ் மக்களின் தலைமைக் கட்சி இருந்து வருகிறது. ஆனால், இதன் தலைவராக தெரிவான நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் மட்டும் இதில் பங்குபற்றி வந்தார். இதற்காக இவர்மீது கட்சி எப்போது நடவடிக்கை எடுக்குமோ தெரியாது.

அமைதிப் போராட்டம் நடத்தியவர்கள் மீது காவல்துறையினர் ஒரு வாரத்துக்கு முன்னர் தமக்கேயுரித்தான தர்பார் நடத்தினர். இப்போது தாக்கப்பட்டவர்கள் மீது நீதிமன்றத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள நயினாதீவு விகாராதிபதியும், யாழ்ப்பாண நாகவிகாரை விகாராதிபதியும் திடுதிப்பென களத்தில் குதித்துள்ளனர். திஸ்ஸ விகாரை அமைந்திருக்கும் காணி பொதுமக்களுக்கு சொந்தமானது என்று தெரிவித்துள்ளதோடு இதனை ஜனாதிபதிக்கும் அரசாங்கத்துக்கும் தாங்கள் எடுத்துக் கூறியுள்ளதாகவும் அறிவித்துள்ளனர்.

இரண்டு விகாராதிபதிகளும் யாழ்ப்பாணத்தில் நீண்டகாலமாக வாழ்ந்து வருபவர்கள். இவர்களின் கூற்றுகள் சமூகத்தின் ஒருபகுதியினரால் வரவேற்கப்பட்டதாயினும் வேறு சிலரின் சந்தேகத்துக்குள் ளாகியுள்ளது. இதற்குப் பல காரணங்கள் வெளிப்படையாக சொல்லப்பட்டுள்ளன. தையிட்டி திஸ்ஸ விகாராதிபதி ஜின் தோட்டை நந்தாராம தேரர் வடமாகா ணத்துக்கான பிரதான விகாராதிபதியாக அண்மையில் நியமிக்கப்பட்டார். தாங் கள் இருவரும் பதவி இறக்கம் செய்யப்பட் டது போன்ற தாக்கத்தினாலேயே இவர் கள் காணி விடயங்களில் மக்கள் பக்கம் குரல் கொடுத்திருக்கலாமென ஒரு வாதம் உண்டு. எதுவாயினும் நீதியான தீர்வு இறுதியில் கிடைக்குமா என்பதை பொறுத்திருந்து பார்க்க வேண்டும்.

முன்னாள் அமைச்சரும் ஈ.பி.டி.பியின் தலைவருமான டக்ளஸ் தேவானந்தாவின் கைது பரபரப்பாக பேசப்படும் செய்தி. இவரது முப்பதாண்டு கால அரசியல் வாழ்வு எப்போதும் பரபரப்பாகவே இருந்தது. இவர் ஒரு முன்னாள் போராளி என்பதும் இதற்குக் காரணம். ஆனால், 2000ம் ஆண்டு சந்திரிகா அரசிலிருந்து இறுதியாக 2004ல் கோதபாய - ரணில் ஆட்சி வரை அமைச்சராக இருந்தவர் இவர்.

போர்க்காலத்தில் இவருக்கு வழங்கப்பட்ட 19 சுடுகலன்கள் இதுவரை அரசிடம் மீளளிக்கப்படவில்லை என்பது தொடர்பாக இவரால் சரியான விபரங்கள் தெரிவிக்கப்படவில்லை என குற்றவியல் விசாரணை பொலிசார் நீதிமன்றத்தில் தெரிவித்ததையடுத்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். வழமையாக அரசியல்வாதிகளின் விளக்கமறியல் என்பது சிறைச்சாலையிலுள்ள மருத்துவமனையாகவே அமையும். இறுதியாக, ரணில் விக்கிரமசிங்கவும் விளக்கமறியலை மருத்துவமனையிலேயே கழித்தார். இப்போது டக்ளஸ் தேவானந்தாவும் அப்படித்தான். பார்க்கப்போனால் அரசியல்வாதிகள் எல்லோருமே நோயாளிகள்போலத் தெரிகிறது.

> அந்தந்தப் பிரதேச மக்களின் அன்றாட அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றவென நிறுவப்பட்ட உள்ளாட்சிச் சபைகள் இன்று அரசியல் கட்சிகளின் கிளைகளாக மாற்றப்பட்டுள்ளன. இதனால் கொப்புப் பாய்ச்சல்களும் கிளை தாவல்களும் தாராளமாக இடம்பெறுகின்றன. சில கட்சிகளின் தலைமைகள் கொள்கை துறந்து, சேராத இடம் சேர்ந்து தங்கள் முகத்தில் தாமே கரி பூசுகின்றன.

இது ஒருபுறமிருக்க, பிள்ளையான், டக்ளஸ் பாதையில் அடுத்தது அவரா இவரா என்று வேறு சில தமிழ் அரசியல்காரர்களின் பெயர்களை ஊடகங்கள் எழுத ஆரம்பித்துள்ளன. இந்த விடயத்திலும் என்ன நடைபெறுமென்பதை அறிய பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

இந்த வாரத்துக்கு எழுத வந்த விடயம், உள்ளாட்சிச் சபைகளின் இயங்குதளம் அல்லது அவைகளை இயக்கும் பின்னணி பற்றியது. கிராமசபைகள், பட்டினசபை கள், நகரசபைகள், மாநகரசபைகள் என்பவை ஒரு காலத்தில் உள்ளாட்சிச் சபைக ளாக இருந்தன. இவைகளின் பிரதான பணியாக அந்தந்த பகுதி வீதிகள் பராமரிப்பு, குளங்கள் குட்டைகள் துப்பரவு, விவசாய அபிவிருத்தி, தெருக்களின் மின் விளக்குகளை பராமரிப்பது, சோலை வரி அறவிடுதல் மற்றும் சைக்கிள்கள் வண்டில்களுக்கு இலக்கத்தகடுகள் வழங்கி நிதி சேகரிப்பது என்பவை.

முன்னைய காலங்களில் இச்சபைகளின் தேர்தல்களிலும் நிர்வாகத்திலும் பெருமளவில் அரசியல் கட்சிகள் தங்களை அடையாளப்படுத்துவதில்லை. தெற்கில் ஐக்கிய தேசிய கட்சி, சிறீலங்கா சுதந்திர கட்சி மற்றும் இடதுசாரிகளும், தமிழர் பிரதேசங்களில் தமிழரசு, தமிழ்க் காங்கிரஸ், முஸ்லிம் கட்சிகளும் இத்தேர்தல்களில் தேவைப்படும்போது தம்மை ஈடுபடுத்திக் கொள்ளும். வடக்கிலும் கிழக்கிலும் இச்சபைகளின் நிர்வாகம் எந்தக் கட்சியிடம் இருக்கிறது என்பதை வாகனங்களுக்கு வழங்கப்படும் இலக்கத் தகடுகளின் வர்ணங்கள் காட்டிவிடும். மூவர்ணம் எனில் தமிழரசு, நான்கு வர்ணங்கள் எனில் காங்கிரஸ் என்பது அடையாளம்.



இப்போது நிலைமை அப்படியில்லை. அரசியல் கட்சிகள் தேர்தலின்போதே உட்புகுந்து அபேட்சகர் தெரிவிலும், வாக்கு வேட்டையிலும் தம்மை ஈடுபடுத்தும். நகரசபை, பிரதேச சபை, மாநகர சபை ஆகிய மூன்றுமே இப்போது உள்ளவை. கடந்த வருடம் மே மாதம் இடம்பெற்ற இச்சபைகளுக்கான தேர்தல்களின் போது நிகழ்ந்த குரங்குப் பாய்ச்சல்களை விட, சபைகள் உருவான பின்னர் இடம்பெறும் தாவல்கள் வேகமானவை.

339 சபைகளுக்கு இடம்பெற்ற தேர்தல்களில் 49 அரசியல்கட்சிகளும், 14 சுயேட்சைக் குழுக்களுமாக 75,589 பேர் போட்டியிட்டனர். தெற்கில் 151 சபைகளில் அநுர குமரவின் தேசிய மக்கள் சக்தி வெற்றி பெற்றது. தமிழர் தாயகத்தில் தமிழரசு கட்சி 377 உறுப்பினர்களைப் பெற்றது. உறுப்பினர் எண்ணிக்கையைப் பொறுத்தளவில் தமிழரசுக் கட்சிக்கே அதிகம். ஆனால், இதன் வெற்றி சொரியல் காணிகள் போன்றது. எனினும், சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி சில இடங்களில் சேராத இடங்களோடும் சேர்ந்து சபைகளை தமிழரசு கைப்பற்றியது.

இலங்கையின் இரண்டு மாநகர சபைகள் இப்போது கூட்டுச் செயற்பாட்டினால் நெருக்கடியைச் சந்தித்தன. முதலாவது, யாழ்ப்பாணம் மாநகர சபை. டக்ளஸ் தேவானந்தாவை அவரது அலுவலகத்துக்குத் தேடிச் சென்ற தமிழரசு கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானம் ஈ.பி.டி.பி.யின் ஆதரவோடு தமிழரசு கட்சியை ஆட்சியில் ஏற்றி அதன் மேயரையும் கதிரையில் அமர்த்தினார். ஆனால், அதன் முதலாவது பாதீட்டில் வெற்றியைப் பெற முடியவில்லை. இரண்டாவது தடவை பாதீட்டைச் சமர்ப்பித்து [illegible]ால் அதனை வெற்றி கொள்ள முடிந்தது.

கொழும்பு மாநகர சபையின் கதையும் இது போன்றது. அங்குமிங்குமாக பேச்சு நடத்தி ஒருவாறு மாநகர சபையை அநுர குமரவின் ஐக்கிய மக்கள் சக்தி கைப்பற்றியது. ஆனால், கடந்த மாதம் இடம்பெற்ற அதன் பாதீட்டு வாக்கெடுப்பில் தோல்வி கண்டது. எனினும், இரண்டாவது அமர்வில் எதிரணிகளில் இருந்த சிலரை உள்வாங்கியும், வேறு சிலரை அமர்வில் பங்குபற்றாது விலத்தியும் ஒருவாறு பாதீடு நிறைவு கண்டது.

இதுபோன்று தெற்கில் வேறு பல சபைகளில் ஆளுங்கட்சி ஆறு மாதத்துக்குள்ளேயே பாதீட்டை நிறைவேற்ற முடியாது தோல்வி கண்டுள்ளது. இதற்கான ஒரு காரணம் தேர்தலின்போது தனித்தனியாகப் போட்டியிட்ட கட்சிகள் இப்போது கூட்டாகச் சேர்ந்த எதிர்த்து வாக்களிப்பது. எனினும், பின்கதவால் இடம்பெறும் டீல்கள் ஒருவாறு சில சபைகளை தக்க வைக்கின்றன. உள்ளாட்சிச் சபைகளின் பாதீடுகள் தோல்வியடைவது ஒருபோதுமே அரசாங்கத்தைப் பாதிக்காது. ஆட்சி தொடர்ந்தே நடைபெறும்.

ஆனால், தமிழர் தாயகத்து நிலைமை வேறானது. வன்னியில் கரைதுறைப்பற்று சபையின் தமிழரசு கட்சி பிரதிநிதி ஒருவர் பல்டி அடித்ததால் அங்கு பாதீடு தோல்வி அடைந்தது. பருத்தித்துறை நகரசபையில் இடம்பெற்ற கூட்டு - இதனை எந்தவகை கூட்டு என்று சொல்லவே முடியாது. ஆட்சியில் இருக்கும் தமிழ் மக்கள் தேசிய முன்னணியை வீழ்த்த வேண்டுமென்பதற்காக தமிழரசுக் கட்சி இச்சபையிலுள்ள அநுர குமரவின் ஐக்கிய மக்கள் சக்தியுடனும், டக்ளஸ் தேவானந்தாவின் ஈ.பி.டி.பி.யுடனும் இணைந்து பாதீட்டை தோற்கடிக்க முடியாது மண்கவ்வ நேர்ந்துள்ளது.

யாழ்ப்பாண மாநகர சபையில் தமிழரசுக் கட்சியின் மேயரைத் தெரிவதற்காக டக்ளஸின் ஆதரவைப் பெற்ற தமிழரசுக் கட்சி, பருத்தித்துறையில் அநுர குமரவின் கட்சியையும் எந்த கொள்கை அடிப்படையில் இணைத்துக் கொண்டு பாதீட்டைத் தோற்கடிக்க எத்தனித்தது என்பதை அதுதான் விளக்க வேண்டும். இதே அநுர குமரவின் கட்சியினர்தான் கரைதுறைப்பற்றில் தமிழரசுக் கட்சிக்கு தோல்வியை ஏற்படுத்தியது.

முன்னைய காலங்களில் தமிழரசுக் கட்சியின் தலைவர் தந்தை எஸ்.ஜே.வி. செல்வநாயகமோ தமிழ்க் காங்கிரஸ் தலைவர் ஜி.ஜி.பொன்னம்பலமோ அல்லது தெற்கில் ஜே.ஆர்.ஜெயவர்த்தனவோ, சிறிமாவோ பண்டாரநாயக்கவோ இவ்வாறான தேர்தல்களில் ஈடுபட்டதாகவோ தங்கள் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து அறிக்கை விட்டதாகவோ இப்பத்தியாளருக்கு ஞாபகம் இல்லை.

உள்ளாட்சி சபைகளின் பிரதான பணி அந்தப் பிரதேசத்தின் அபிவிருத்தி என்ற காலம் மாறி, இப்போது அரசியல் கட்சிகளின் கிளைகளினது அபிவிருத்தியாக சரணமடைந்துள்ளதால், உள்ளாட்சிச் சபைகளின் அலங்கோல அரசியலையே காண முடிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணக்காய்வாளர் நாயகத்தின் நியமனமும் அதில் கலந்திருக்கும் அரசியலும்!

கந்தையா அருந்தவபாலன்

இலங்கையின் கணக்காய்வாளர் நாயகம் (Auditor General)பதவிக்கு கடந்த ஆண்டின் ஏப்ரல் மாதத்திலிருந்து நிரந்தரமாக எவரும் நியமிக்கப்படாதிருப்பதுடன் கடந்த ஒருமாத காலமாக அப்பதவி தற்காலிகமாகவேனும் ஒருவர் நியமிக்கப்படாது வெற்றிடமாக இருந்து வருகிறது. அரச அமைச்சுக்கள் மற்றும் அதன்கீழ்வரும் நிறுவனங்கள் அனைத்தினதும் நிதிக்கொடுக்கல் வாங்கல்களை பரிசீலனை செய்து நெறிப்படுத்தும் துறையின் தலைமைப்பதவி வெற்றிடமாக இருப்பதையிட்டு எதிர்க்கட்சிகள் மட்டுமன்றி துறைசார் அமைப்புகளும் சமூக அமைப்புக்களும் தமது கவலையையும் கரிசனைகளையும் வெளியிட்டு வருகின்றன. அதிலும் குறிப்பாக டித்வா புயலின் பின்னரான நிவாரண நடவடிக்கைகளில் பெருமளவு உள்நாட்டு வெளிநாட்டு நிதி கையாளப்படும் நேரத்தில் அப்பதவி வெற்றிடமாக இருப்பது பல்வேறு எதிர்மறை விமர்சனங்களுக்கு வழிவகுத்து வருகிறது. குறித்த பதவிக்கு இதுவரை நான்கு பேரின் பெயர்களை (இருவர் தற்காலிகம்) ஜனாதிபதி அரசியலமைப்புப் பேரவைக்கு முன்மொழிந்துள்ள போதும் அவை யாவும் அப்பேரவையால் நிராகரிக்கப்பட்டதனால் இந்நிலைமை இன்றுவரை தொடர்கிறது.

நியமனத்துக்கான பெயரை முன்மொழியும் நிறைவேற்று அதிகாரத்தைக் கொண்டுள்ள ஜனாதிபதிக்கும் அம்முன்மொழிவை ஆராய்ந்து அனுமதி வழங்கும் அரசியலமைப்புப் பேரவைக்கும் இடையிலான ஒத்திசைவின்மை அல்லது இழுபறி நிலையே இப்பிரச்சினை நீடிப்பதற்கான காரணமெனலாம். இந்த இழுபறி நிலைக்குப் பின்னால் இருதரப்புகளிலும் வேறுபட்ட அரசியல் நோக்கங்கள் இருப்பதாக பலதரப்புகளாலும் சுட்டிக்காட்டப்படுகிறது. அதுமட்டுமன்றி அரசாங்கத்தினாலும் அப்பேரவை மீது பல வேறு விமர்சனங்களும் கண்டனங்களும் தெரிவிக்கப்பட்டு வருகின்றன. வழமையாக இவ்வாறான பதவிகளுக்கான நியமனங்கள் குறித்து தென்னிலங்கை அரசியல் கட்சிகளிடையேதான் முட்டிமோதல்கள் இடம்பெறும். ஆனால் வழக்கத்துக்கு மாறாக இம்முறை தமிழ்க் கட்சிகளுக்கிடையிலும் இது தொடர்பான மோதல்கள் இடம்பெற்று வருவதைக் காணமுடிகிறது.

ஒரு நாட்டினது அரச கட்டமைப்பைத் தாங்கிநிற்கும் அதிகாரத்தூண்கள் மூன்றாகும். சட்டவாக்கத்துறை நீதித்துறை மற்றும் நிறைவேற்றுத்துறை என்பனவே அவையாகும். இம்மூன்று துறைகளும் ஒன்றையொன்று மேவாமல் இருக்கவும் ஒன்றுடன் ஒன்று ஒத்திசைந்து செயற்படுவதற்குமென பல ஏற்பாடுகள் அரசியலமைப்பில் காணப்படுகின்றன. இவை கட்டுறுத்தும் சமநிலையும் என்று பொதுவாகக் குறிப்பிடப்படும். குறிப்பாக குறுகிய அரசியல் நோக்கிலான எந்தவொரு தலையீடுகளையும் மட்டுப்படுத்துவதற்கு இவ்வேற்பாடுகள் உதவுகின்றன. இலங்கையின் அரசியலமைப்பிலுள்ள இத்தகைய ஏற்பாடுகளில் ஒன்றுதான் அரசியலமைப்புப் பேரவை. இப்பேரவையே நாட்டிலுள்ள சுதந்திர தேசிய ஆணைக்குழுக்களின் உறுப்பினர்களை நியமிப்பதற்கும், பிரதம நீதிபதி, மேல்நீதிமன்ற நீதிபதிகள், சட்டமா அதிபர், காவல்துறை மாஅதிபர், கணக்காய்வாளர் நாயகம் போன்ற பல அரச உயர் அதிகாரிகளை நியமிப்பதற்குமான அனுமதி வழங்கும் சபையாகும். இப்பேரவையின் அனுமதியின்றி இவ்வாறான பதவிகளுக்கு எவரையும் நியமிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு கிடையாது.

இப்பேரவை பத்து உறுப்பினர்களைக் கொண்டமையும். பாராளுமன்றச் சபாநாயகரைத் தலைவராகக் கொண்ட இச்சபையில் அவருடன் பிரதம மந்திரி, எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோர் பதவிவழி உறுப்பினர்களாவர். இவர்களுடன் பிரதம மந்திரியால் முன்மொழியப்படும் ஆளுங்கட்சியைச் சேர்ந்த இருவரும் எதிர்க்கட்சித்தலைவரால் முன்மொழியப்படும் இருவரும் (இவர்களில் ஒருவர் பிரதான எதிர்க்கட்சியைச் சாராதவர்) பிரதமர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவரின் இணக்கப்பாட்டுடன் நியமிக்கப்படும் மூன்று குடிமக்கள்சார் உறுப்பினர்களும் அடங்குவர். தற்போது இருக்கும் குடிமக்கள் சார்பிலான உறுப்பினர்கள் மூவரும் ரணில் விக்ரமசிங்கவின் காலத்தில் நியமிக்கப்பட்டவர்கள் என்பதுடன் அவர்களின் பதவிக்காலம் இம்மாதம் 18 ஆம் திகதியுடன் வறிதாகும். எதிர்த்தரப்பிலுள்ள உதிரிக்கட்சிகளின் சார்பிலேயே இப்பேரவையில் இப்போது சிறிதரன் சிவஞானம் உறுப்பினராக உள்ளார். இப்பேரவையின் பத்து உறுப்பினர்களில் குறைந்தது ஐந்துபேர் அனுமதியளித்தால் மட்டுமே ஒருவரை இவ்வாறான பதவிகளுக்கு ஜனாதிபதியால் நியமனஞ் செய்யமுடியும்.

நிரந்தரக் கணக்காய்வாளர் நாயகமாகப் பதவிவகித்த டபிள்யு. பி.சி. விக்ரமரத்ன கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் ஓய்வு பெற்றுச் சென்றபின் அப்பதவிக்குப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின பிரதம கணக்காய்வாளராக இருந்த சந்தன என்பவரை ஜனாதிபதி பேரவைக்கு முன்மொழிந்த போது அது நிராகரிக்கப்பட்மையினால் தற்காலிகமாக தர்மபால கம்மன்பில மூன்று மாதங்களுக்கு நியமிக்கப்பட்டு மேலும் மூன்று மாதங்களுக்கு அவருக்கு நீடிப்பு வழங்கப்பட்டு அவர் ஓய்வு பெற்றார். அதன்பின்னர் முன்மொழியப்பட்ட மூத்த உதவி கணக்காய்வாளரான திருமதி ஜெயரத்னவும் இறுதியாக படைத்துறையில் கணக்காய்வாளராகப் பணியாற்றிய ஆர். ஓ. ரணசிங்கவும் பேரவையால் நிராகரிப்பட்டமையால் கடந்த ஒருமாதத்துக்கு மேலாக கணக்காய்வாளர் நாயகம் பதவி வெற்றிடமாகவே இருந்து வருகிறது.



> கடந்த வரவு செலவுத் திட்ட வாக்கெடுப்பின்போது நல்லிணக்கத்தை வெளிப்படுத்துவதற்காக எதிர்த்து வாக்களிக்காமல் விட்டது போல ஒரு நல்லிணக்கத்தைக் காட்டுவதற்காக தான் வாக்களித்தாலும் ரணசிங்க தெரிவு செய்யப்படுவதற்கான வாய்ப்பில்லை என்பதைப் புரிந்துகொண்டு சிறிதரனும் ஆதரவாக வாக்களித்திருக்கலாம் அல்லவா?



அரசியலமைப்புப் பேரவையில் தற்போதுள்ள உறுப்பினர்களில் பிரதான எதிர்க்கட்சி மற்றும் குடிமக்கள்சார் உறுப்பினர்கள் ஐந்து பேருடன் சிறிதரனும் எதிர்க்கட்சிகளின் சார்பாக நியமிக்கப்பட்டிருப்பதால் பெரும்பான்மைப் பலம் எதிர்க்கட்சிகளுக்குச் சார்பானதாகவே உள்ளது. இந்நிலையே இன்றைய இழுபறி நிலைக்கான பிரதான காரணம். பொருத்தமானவர்களின் பெயரை ஜனாதிபதி முன்மொழியவில்லை என்றுகூறி பேரவை தொடர்ந்து நிராகரித்துவரும் அதேவேளை வேண்டுமென்றே பேரவை தனது முன்மொழிவுகளை நிராகரிப்பதாக ஜனாதிபதியும் ஒருவர்க்கொருவர் குற்றஞ்சுமத்தி வருவதைக் காணமுடிகிறது. அதேவேளை ஜனாதிபதியின் முன்மொழிவுகள் தொடர்பாக வேறுதரப்புகளாலும் குறைகாணப்படுவதையும் அவதானிக்க முடிகிறது. ஜனாதிபதி தனக்குச் சார்பான பொருத்தமற்றவர்களின் பெயர்களை முன்மொழிவதாக அவர்களால் சுட்டிக்காட்டப்படுகிறது. ஜனாதிபதியால் இறுதியாக முன்மொழியப்பட்ட படைத்துறையைச் சேர்ந்த ரணசிங்கவும் அவ்வாறான ஒருவராகவே பார்க்கப்படுகிறது. அத்துடன் கணக்காய்வாளர் பணிமனையைச் சேர்ந்தவர்கள் வெளியிலிருந்து இப்பதவிக்கு ஒருவர் முன்மொழியப்படுவதை எதிர்ப்பதுடன் உள்வாரியாகப் பொருத்தமான ஒருவர் நியமிக்கப்படவேண்டும் என வலியுறுத்திவருகின்றனர்.

உண்மையில் இவ்விருதரப்புகளில் யார் கூறுவது உண்மை? ஆழமாகப் பார்த்தால் இரண்டு தரப்பிலும் உண்மை இல்லை என்பது தெரியவரும். அதிகாரப் பிரிவு [illegible] உருவாக்கப்பட்ட அரசியல் பேரவை போன்ற அமைப்புகள் நிறைவேற்றதிகாரத்திலுள்ள ஜனாதிபதிக்கு எப்போதுமே கால்தடம் போட்டது போலத்தான் இருக்கும். இதற்காகவே பேரவையில் தீர்மானிக்கும் வாக்குகளாக உள்ள குடிமக்கள்சார் உறுப்பினர்களை நியமனம் செய்யும் போது தமக்குச் சார்பாகச் செயல்படக்கூடியவர்களை அரசாங்கத்தரப்பு நியமிப்பது வழக்கம். இன்னும் ஒருபடி மேலேசென்று மகிந்த ஜனாதிபதியாக இருந்தபோது 18 ஆவது அரசியலமைப்பு மாற்றத்தின்மூலம் அரசியலமைப்புப் பேரவை என்ற அமைப்பையே அகற்றித் தனக்கு வசதியாகப் பாராளுமன்றப் பேரவையைக் கொண்டுவந்ததைக் காணமுடியும்.

ஆட்சியிலிருப்போர் என்னதான் முற்போக்காகக் கதைத்தாலும்கூட இவ்வாறான அமைப்புகளிலும், உயர் பதவிகளிலும் தமக்கு எப்போதும் ஆதரவளிக்கக் கூடியவர்களையே நியமிப்பது வழக்கம். இதில் நன்மையும் உண்டு. தீமையும் உண்டு. அரசாங்கம் தமக்கு ஆதரவான அதேவேளை பதவிக்குப் பொருத்தமான ஒருவரை முன்மொழிந்தால் பிரச்சினை எழுவதற்கான வாய்ப்புக் குறையும். அப்படியானால் ஜனாதிபதி முன்மொழிந்த நான்கு பேர்களில் ஒருவர்கூடப் பொருத்தமானவராக இல்லையா என்ற கேள்வி இங்கு எழுகின்றது. இவ்விடத்தில்தான் பேரவையிலுள்ள குடிமக்கள்சார்ந்த மூன்று உறுப்பினர்களும் தம்மை நியமித்த ரணிலுக்கு விசுவாசமாக நடந்துகொள்கிறார்களோ என்ற ஐயம் எழுகிறது. அதில் உண்மையும் இருக்கலாம். எனினும் முன்னர் காவல்துறை மாஅதிபர் பதவிக்கு ரணிலால் முன்மொழியப்பட்ட தேசபந்து தென்னக்கோன் இவர்களால் நிராகரிக்கப்பட்டதை இவர்களின் நடுநிலைமைக்கு உதாரணமாகச் சுட்டிக் காட்டப்படுகிறது. ஆனால் அந்நேரத்திலேயே தேசபந்து தென்னக்கோன் தொடர்பான பல மோசமான குற்றச்சாட்டுகள் மக்களிடையே பரவியிருந்ததையும் மறுக்க முடியாது. இம்மூவரும் தற்போதைய அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்டிருந்தால் கணக்காய்வாளர் நாயகம் எப்போதோ நியமனம் பெற்றிருப்பார் என்பதே யதார்த்தம். இது இந்த இழுபறியின் பின்னால் தற்போதுள்ள அரசியலை விளங்க உதவும்.

தெற்கில் இவ்வாறு அரசியல் இழுபறி தொடரும் அதேவேளை வடக்கிலும் இதைவைத்து அரசியல் செய்யப்படுவதை அவதானிக்க முடிகிறது. இதைவைத்து தெற்கில் அரச தரப்புக்கும் எதிர்த்தரப்புக்குமிடையில் இழுபறியென்றால் வடக்கில் தமிழரசுக்கட்சிக்குள்ளேயே இரண்டு தரப்புகளுக்குமிடையே இந்த இழுபறி நடக்கின்றது. இப்பதவிக்கு ஜனாதிபதி இறுதியாக முன்மொழிந்த இராணுவ அதிகாரிக்கு ஆதரவாக அரசாங்கத்தரப்புடன் சேர்ந்து சிறிதரனும் வாக்களித்துவிட்டார் என்பதே அவர் மீதான குற்றச்சாட்டு. கட்சிக்குள் சிறதரனுக்கு எதிராகக் காய்களை நகர்த்தும் தரப்பு வழமைபோலவே இந்தவிடயத்திலும் மற்றவர்களை வைத்து அவருக்கெதிராகக் காய்களை நகர்த்துவதை அவதானிக்க முடிகிறது. இவ்வாறான விடயங்களில் அத்தரப்புக்குச் சார்பான ஊடகம் தனது எஜமான் விசுவாசத்தை தொடர்ந்து வெளிப்படுத்தி வருகிறது. தமிழ் மக்களின் ஒற்றுமையைக் குலைப்பதில் ஒருவர் வல்லவரென்றால் தமிழரசுக்கட்சியை உடைப்பதில் மற்றவர் வல்லவர் என்று தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த பலர் கூறிவருவதை அவதானிக்க முடிகிறது. முன்னர் மாவைக்கெதிராக அறம் பாடிய வாய் அவர் போய்விட்டதால் தற்போது சிறிதரன் மீது பாடிவருகிறது. இப்போது இந்தக்குழுவில் முன்பு மனித உரிமை ஆணைக்குழுவில் இருந்து அரசாங்கத் துக்கு ஆதரவாக அடக்கிவாசித்த ஒருவரும் களத்தில் குதித்திருப்பதையும் காணமுடிகிறது.

அதற்காக சிறிதரன் ஒன்றும் உத்தமமானவர் அல்லர். செய்யக்கூடாததை எல்லாம் அமசடக்காகச் செய்துவிட்டு உண்மை வெளிவரும்போது அது வெறும் பொய்யென்றும், உண்மையென்று நிரூபித்தால் தனது பதவியை உடனேயே இராஜினாமா செய்வேன் என்று மனச்சாட்சியை அடகுவைத்து வீரவசனம் பேசும் ஒருவர்தான். அவர் வடக்கத்தயான் என்ற வார்த்தையில் தொடங்கி மதுபான அனுமதிப் பத்திரம் ஊடாக தற்போது ரணசிங்காவுக்கான ஆதரவில் வந்து இவ்வாறு நிற்கிறார். ஆரம்பத்தில் இவ்விடயத்தை வழமைபோலச் சடையவெளிக்கிட்டாலும் அது அவரால் முடியாமல் போய்விட்டது. இதில் பாவப்பட்டவர்கள் சிறிதரனின் சில நெருங்கிய விசுவாசிகள்தான். அவர்கள் சிறிதரன் கூறுவதை அப்படியே நம்பி விழுங்கிவிட்டு ,சிலவேளை அது நடிப்பாகவும் இருக்கலாம், சமூக ஊடகங்களில் உண்மையைச் சொல்பவர்களுக்கெதிராகப் பொங்கிவிட்டு பின்னர் உண்மை வெளிவந்ததும் ஒன்றும் தெரியாதவர்போல அடங்கிவிடுவார்கள். எல்லாக் கட்சிகளிலும் இவ்வாறான

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்களின் ஆண்டுப் பலன்?



நிலாந்தன்

கடந்த ஆண்டு பிறந்த போதும் தையிட்டி ஒரு விவகாரமாக இருந்தது. கடந்த ஆண்டு முடியும்போதும், புதிய ஆண்டு பிறந்தபோதும் தையிட்டி ஒரு விவகாரமாக இருக்கிறது. ஆண்டு முடிவில் யாழ் மாவட்ட அரச அதிபரும் விகாரை அமைந்திருக்கும் பகுதியில் உள்ள காணி உரிமையாளர்களும் சந்தித்திருக்கிறார்கள். சந்திப்பின் முடிவில் ஒரு காணி உரிமையாளர் ஊடகங்களுக்கு பின்வருமாறு கூறுகிறார் "அரச அதிகாரிகள் காணிகளை நாலு கட்டமாக விடுவிக்கலாம் என்று கூறுகிறார்கள். அது எவ்வளவுக்கு சாத்தியம் என்ற நம்பிக்கை அவர்களுக்கும் இல்லை எங்களுக்கும் இல்லை". நிலப்பறிப்பினால் பாதிக்கப்பட்ட ஒரு தமிழரின் வார்த்தைகள் அவை. அதை இன்னும் ஆழமான பொருளில் சொன்னால் பொறுப்புக்கூறல் தொடர்பாக அரசாங்கத்தின் மீதுள்ள அவநம்பிக்கையை வெளிப்படுத்தும் வார்த்தைகள் அவை. "காணிகளை நான்கு கட்டங்களாக விடுவிப்போம் என்பது மக்களை ஏமாற்றும் செயல். ஒவ்வொரு கட்டத்துக்கும் பல ஆண்டுகள் செல்லும். எனவே, அனைத்துக் காணிகளையும் ஒரே தடவையில் விடுவிக்க வேண்டும்" என்று நயினாதீவு நாகவிகாரையின் அதிபதி கூறியிருப்பதும் அதைத்தான் நிரூபிக்கிறது.


கடந்த ஆண்டு முழுவதிலும் தமிழ்த் தேசிய அரசியலானது பின்வரும்பிடயங்களின் மீது குவிமயப்படுத்தப்பட்டிருந்தது. தையிட்டி, செம்மணி, ஐநா மனித உரிமைகள் கூட்டத்தொடர், உள்ளூராட்சி சபை தேர்தல், கட்சிகளுக்கு இடையிலான கூட்டுக்கள், உள்ளூராட்சி சபைகளை யார் கைப்பற்றுவது என்ற போட்டிகள், தேர்தலுக்குப் பின்னரான கூட்டுக்கள், புதிய உள்ளூராட்சி சபைகள், பிரதமர் மோடியின் விஜயம், மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டங்களில் நடக்கும் கோமாளிக்கூத்துக்கள், திருமலை புத்தர் சிலை, டித்வா புயல், மண்டைதீவில் சர்வதேச விளையாட்டு மைதானம், யாழ் பழைய பூங்காவில் உலக விளையாட்டு அரங்கு, தமிழகத்தை நோக்கிச் சென்ற தமிழ்க் கட்சிகள், கரைத்துறை பிரதேச சபையில் ஏற்பட்ட தோல்வி. என்றிவ்வாறாக பல்வேறு விடயங்களின் மீதும் தமிழ் மக்களின் கவனம் குவிக்கப்பட்டது, அல்லது குவிமையங்கள் அடிக்கடி மாறின.

கடந்த ஆண்டு முழுவதும் தமிழ் மக்களின் கவனக்குவிப்பானது வெவ்வேறு விடயங்களின் மீது தொடர்ச்சியாக மாற்றப்பட்டு வந்திருக்கிறது. கடந்த ஆண்டைத் தொகுத்துப் பார்த்தால் அது தெரியும். ஊடகங்களில் ஒரு விடயம் தலைப்புச் செய்தியாக சூடான செய்தியாக இருக்கும் போது, இன்னொரு விடயம் அதை மேவி மேலெழும். பின்னர் அதையும் தாண்டி வேறொன்று வரும். உதாரணமாக செம்மணி புதைக்குழி ஓர் உணர்ச்சிகரமான விடயம். ஆனால் மழை அதைக் குழப்பியது. தவிர திருகோணமலை புத்தர் சிலை அதைத் தாண்டி எழுந்தது. அதன் பின் யாழ் பழைய பூங்காவில் உள்ளக விளையாட்டு அரங்கு ஒரு விவகாரமாக மேலெழுந்தது.

இவை யாவும் தமிழ் மக்களை கடந்த ஆண்டில் மட்டுமல்ல அதற்கு முன்னரும் பாதித்த இனிமேலும் பாதிக்கப்போகும் விடையங்கள். ஆனால் இந்த விடயங்களை தமிழ் மக்கள் ஒரு மையத்தில் இருந்து அணுகுகிறார்களா? இல்லை. இந்த விடயங்கள் யாவும் ஒன்று மற்றதோடு தொடர்பில்லாதவை அல்ல. 2009க்குப் பின்னரான இன ஒடுக்குமுறையை, ஆக்கிரமிப்பைக் காட்டும் விடியங்கள். இவற்றைச் செய்வது அரசுக் கட்டமைப்பு. அது ஒரு மையத்தில் இருந்து தெளிவான சிங்கள பௌத்த இலக்குகளை முன்வைத்து முடிவெடுக்கின்றது. ஆனால் தமிழ்மக்கள்?



> தமிழரசியல் இவ்வாறு பகிடிக்கு இடமாகியதற்கு எல்லாத் தமிழ்க் கட்சிகளும் பொறுப்பேற்க வேண்டும். கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் கிடைத்த தோல்விகளுக்கும் பின்னடைவுகளுக்கும் எல்லாத் தமிழ்த் தேசியக் கட்சிகளும் பொறுப்புக்கூற வேண்டும்.



தமிழ் மக்களின் கவனக்குவிப்பு ஒரே சீரானதாக, தொடர்ச்சியானதாக, ஒழுங்கமைக்கப்பட்டதாக இல்லை. தமிழ் மக்களின் கவனம் வெவ்வேறு விடயங்களின் மீது திருப்பப்படுகிறது. தமிழ் கட்சிகளும் தமிழ்ச் செயற்பாட்டாளர்களும் அவ்வாறு வெவ்வேறு விடயப் பரப்புகளை நோக்கிப் போராட வேண்டியிருக்கிறது. ஆனால் இவை யாவும் ஒரே ஒடுக்குமுறையின் வெவ்வேறு வடிவங்கள். எனவே இவற்றுக்கு எதிரான போராட்டங்களும் ஒரு மையத்தில் இருந்து வழி நடத்தப்பட வேண்டும். ஆனால் அமைவது இல்லை.

தமிழரசியல் என்பது கடந்த 16 ஆண்டுகளுக்கு மேலாக தொடர்ச்சியற்றதாகவும் ஒழுங்கமைக்கப்படாததாகவும் காணப்படுகிறது. புதிய ஆண்டும் அப்படித்தான் அமையப்போகிறதா? காலத்துக்கு காலம் வெவ்வேறு விவகாரங்களின் மீது தமிழ் மக்களின் கவனமும் ஊடகங்களின் கவனமும் கட்சிகளின் கவனமும் சிவில் அமைப்புகளின் கவனமும் குவிக்கப்படும். ஒரு விடயத்தை மீறி இன்னொரு விடயம் எழும்போது முன்னைய விடயம் மறக்கப்பட்டுவிடும். அல்லது கவனக் குவிப்புக்கு வெளியே போய்விடும்.

எனவே புதிய ஆண்டைத் திட்டமிடுவது என்று சொன்னால், முதலில் செய்ய வேண்டியது பழைய ஆண்டுகளில் ஏன் தமிழரசியலில் திருப்பகரமான மாற்றங்கள் ஏற்படவில்லை? என்பதனை காய்தல் உவத்தல் இன்றி ஆராய்ந்து கண்டுபிடிப்பது. இறந்த காலத்தை சரியாக மதிப்பிட்டால்தான் நிகழ்காலத்தைத் திட்டமிடலாம். அப்படிப்பார்த்தால் தமிழ் மக்களின் அரசியலை கடந்த 16 ஆண்டுகளாக மட்டுமல்ல அதற்கு முன்னரான தசாப்தங்களையும் சேர்த்து கிட்டத்தட்ட ஒரு நூற்றாண்டுக்கு மேலாக பகுத்தும்தொகுத்தும் ஆராய வேண்டும்.

கடந்த ஒரு நூற்றாண்டுக்கு மேலாக தமிழ் மக்கள் ஏன் தங்களுடைய அரசியல் இலக்குகளை வென்றெடுக்க முடியாமல் இருக்கிறார்கள்? என்பதனை தொகுத்து ஆராய வேண்டும். ஆயுதப் போராட்டத்திற்கு முன்னிருந்த மிதவாத அரசியலும் அதாவது அறவழிப் போராட்டம் என்று அவர்கள் கூறிக் கொள்ளும் போராட்டமும் வெற்றி பெறவில்லை. அதன்பின் ஆயுதப் போராட்டமும் வெற்றி பெறவில்லை. கடந்த 16 ஆண்டு கால அரசியலும் வெற்றி பெறவில்லை.

இப்படிப்பட்டதோர் தோல்விகரமான பின்னணியில்தான் மற்றொரு ஆண்டு தமிழ் மக்களைக் கடந்து சென்றிருக்கிறது. ஒரு புதிய ஆண்டு பிறந்திருக்கிறது. பழைய ஆண்டு தமிழ் மக்களைக் கடந்து சென்ற கடைசி வாரத்தில் அர்ஜுனா தமிழ் மக்களைச் சிரிக்க வைத்தார். சலிக்க வைத்தார் வெறுக்க வைத்தார். அவருடைய சில காணொளிகளை வைத்துச் சொன்னால் ஆண்டு முடியும் போது ஓர் "அடல்ட்ஸ் ஒன்லி" ஆண்டாகத்தான் முடிந்தது. அவரே கூறுகிறார், அது அடல்ட்ஸ் ஒன்லி காணொளி என்று. ஆனால் அந்தக் காணொளி வந்த அடுத்தடுத்த நாளில் காரைநகரில் நடந்த ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தின் பின் அந்த அரச செயலகத்தைச் சேர்ந்த ஒரு பகுதி ஊழியர்கள் அர்ஜுனாவோடு நின்று படம் எடுத்துக் கொள்கிறார்கள்.

அப்படியென்றால் அர்ஜுனா தொடர்பாக அவர்களின் கருத்து என்ன?

கடைசியாக நடந்த மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் நடந்த குழப்பங்கள் எல்லாவற்றுக்கும் ஒரு நாடாளுமன்ற உறுப்பினரை மட்டும் குற்றம் சாட்ட முடியாது. அது ஒரு ஒட்டுமொத்தத் தோல்வியின் விளைவு. சம்பந்தப்பட்ட எல்லா தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் அதிலிருந்து கற்றுக்கொள்ள வேண்டும். மக்கள் பிரதிநிதிகள் மக்களுக்கு முன்னுதாரணமாக இருக்கத் தேவையில்லை என்ற ஒரு காலம் பிறந்து விட்டது. முன்னுதாரணங்கள் இல்லாத தமிழ் அரசியல்? செல்பி யுகத்தின் அரசியல் இப்படித்தான் இருக்கப் போகிறதா? உலகப் பேரரசாகிய அமெரிக்காவின் அதிபரும் சிரிப்பூட்டும் ஒருவராகத்தானே காட்சி அளிக்கிறார்?


ஆண்டு முடிந்த போது தமிழ் மக்கள், தாங்கள் தெரிந்தெடுத்த பிரதிநிதிகளைப் பார்த்து சிரித்துக் கொண்டிருந்தார்கள். தாங்களே தேர்ந்தெடுத்துவிட்டு தாங்களே அவர்களைப் பார்த்துச் சிரிப்பதும் சலிப்பதும் வெறுப்பதும் ஒரு சமூகத்தின் முதிர்ச்சியை அல்லது கல்வியறிவை அல்லது பக்குவத்தை அல்லது ஆன்மீகச் செழிப்பை காட்டுமா? ஆழமான பொருளில் சொன்னால் தமிழ் மக்கள் தங்களை தாங்களே பார்த்து சிரிக்கிறார்கள் என்பதுதான் சரி. தன்னைத்தானே பார்த்து சிரிப்பது ஒரு சமூகத்தின் நகைச்சுவை உணர்வு கூடிவிட்டதைக் காட்டுகிறதா? அல்லது அது ஒரு வகை நோயா?

தமிழரசியல் இவ்வாறு பகிடிக்கு இடமாகியதற்கு எல்லாத் தமிழ்க் கட்சிகளும் பொறுப்பேற்க வேண்டும். கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் கிடைத்த தோல்விகளுக்கும் பின்னடைவுகளுக்கும் எல்லாத் தமிழ்த் தேசியக் கட்சிகளும் பொறுப்புக்கூற வேண்டும். அதன் விளைவாகத்தான் கடந்த ஆண்டு முடிந்த போது தமிழ் மக்கள் 'அடல்ட்ஸ் ஒன்லி' அரசியல் காணொளிகளைப் பார்க்க வேண்டி வந்தது. எனவே இறந்த காலத்திலிருந்து கற்றுக் கொள்ளாவிட்டால் புதிய ஆண்டிலும் தமிழ் அரசியல் சிரிப்புக்கிடமானதாகவே அமைந்து விடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்டாலின் தலைமையிலே தமிழக அரசு தடுமாறுகின்றதா?

- நியூசிலாந்து சிற்சபேசன் -



2026ல் சட்டமன்றத்தேர்தல் எதிர்பார்க்கப்படுகின்ற நிலையிலே தமிழக அரசியல் விறுவிறுப்படைகின்றது.

பொதுவாக, மொழி - சாதி - மதம் என்பன அரசியலிலே கணிசமான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியனவாகும். அதற்குத் தமிழகமும் விதிவிலக்கல்ல.

ஹிந்தி எதிர்ப்பு தொடர்பில் தமிழகம் ஒரே புள்ளியில் கூடுகின்றது. ஆனால், சாதி தொடர்பில் அப்படிச் சொல்லிவிட முடியாது. வடதமிழகம், தென் மாவட்டங்கள், டெல்டாபகுதி, கொங்குநாடு என வெவ்வேறு பிரதேசங்களிலும் ஏகப்பட்ட சாதிப் பிரிவுகள் உள்ளன.

மறுவளத்தில், மதம் தொடர்பில் மிதவாதப் பண்புகளையே தமிழகம் கொண்டிருக்கின்றது. இந்துமதம் ஆழமாக வேரூன்றியுள்ளது. ஆனாலும்கூட, இந்து மதத்தை முன்னிறுத்துகின்ற பாரதீய ஜனதாவின் அரசியலைத் தமிழகம் முழுமையாக ஆதரிப்பதில்லை. அதேவேளையில், கடவுள் மறுப்புக் கொள்கை என்னும் கோதாவிலே, இந்துமதத்தைக் கீழ்மை செய்யக்கூடிய ஸ்டாலின் தலைமையிலான ஆட்சியாளரின் செயற்பாடுகளிலே அதிருப்தி அதிகரிக்கின்றது.

இத்தகையதொரு பின்னணியிலேயே, மதுரை மாவட்டம் திருப்பரங்குன்றம் மலையில் தீபம் ஏற்றுவது தொடர்பான சர்ச்சை பூதாகரமாகியிருக்கின்றது.

ஆறுபடை வீடுகளிலே திருப்பரங்குன்றமே முதலாவது படைவீடாகப் போற்றப்படுகின்றது. அங்கே திருக்கார்த்திகைத் தீபத்திருவிழா பத்துநாள் உற்சவமாக நடைபெறுவதாகும்.

திருப்பரங்குன்றத்தில் சுப்பிரமணிய சுவாமி கோவில் அமைந்துள்ள மலை உச்சியின் இடதுபுறத்தில் காசி விஸ்வநாதர் ஆலயமும், மறுபுறத்தில் சிக்கந்தர் தர்காவும் உள்ளன.

திருக்கார்த்திகைத் தீபநாளிலே, மலைப்பிள்ளையார்கோயில் முன்புள்ள தீபத்தூணிலேயே தீபம் ஏற்றப்படுகின்றது.

மலை உச்சியில் கார்த்திகைத் தீபம் ஏற்றப்படுவதில்லை. அது தொடர்பிலான சர்ச்சை நீண்ட வரலாற்றைக் கொண்டதாகும்.

இந்திய விடுதலைக்கு முன்னர் "பிரிவி கவுன்சில்" வரையில் பேசப்பட்டதாகும்.

"சிக்கந்தர் தர்காவிலிருந்து பதினைந்து மீட்டருக்கு அப்பால் எந்தப் பக்கமும் தீபம் ஏற்றலாம்" என்பதே 1996ல் சென்னை உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பாகும். ஆனாலும்கூட, மலை உச்சியில் கார்த்திகைத் தீபம் ஏற்றப்படவில்லை.

2014ல் திருப்பரங்குன்றம் மலையின் உச்சியில் தீபம் ஏற்றுவது தொடர்பாக மேலுமொரு வழக்கு பதிவாகியது. 2017ல் மேல்முறையீடு செய்யப்பட்டது.

2020ல் மலையின் உச்சியிலே தீபம் ஏற்றுவதை காவல்துறை தடுத்துவிட்டது.

2025ல் மீண்டுமொரு வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. அதனுடைய தீர்ப்பு டிசம்பரில் வெளியாகியது. மலை உச்சியில் உள்ள தீபத்தூணில் கார்த்திகைத் தீபம் ஏற்ற வேண்டுமென நீதிபதி ஜி.ஆர். சுவாமிநாதன் உத்தரவிட்டார்.

நீதிமன்ற உத்தரவுப்படி, குறிக்கப்பட்ட நாளில் மலை உச்சியிலுள்ள தீபத்தூணில் தீபம் ஏற்றுவதற்குரிய ஏற்பாடு செய்யப்பட்டது. நெய், காடாத்துணி போன்றவற்றை பிற்பகல் 3.30 மணியளவிலேயே கோயில் பணியாளர்கள் கொண்டு சென்றதாகச் சொல்லப்படுகின்றது.

ஆனாலும்கூட, திருக்கார்த்திகைத் தீபத் திருவிழாவின் ஒன்பதாம் நாளான டிசம்பர் 3ம் திகதி மாலை ஆறுமணியளவில் பால தீபம் ஏற்றப்பட்டது. அதன் பின்பு மலைப் பிள்ளையார்கோயில் முன்புள்ள தீபத்தூணில் மட்டுமே மகா தீபம் ஏற்றப்பட்டிருக்கின்றது. நீதிமன்ற உத்தரவுப்படி மலை உச்சியிலுள்ள தீபத்தூணில் தீபம் ஏற்றப்படவில்லை. அதனைக் கோவில் நிர்வாகமும், காவல் துறையினரும் தடுத்துவிட்டதாகச் சொல்லப்படுகின்றது.

சட்டம் - ஒழுங்கு தொடர்பான மாவட்ட ஆட்சியரின் 144 தடை உத்தரவு, தமிழக அரசின் மேல்முறையீடு போன்ற காரணங்களின் அடிப்படையிலேயே, மலை உச்சியிலுள்ள தீபத்தூணில், தீபம் ஏற்றுவது தடுக்கப்பட்டதாகச் சொல்லப்படுகின்றது.

இத்தகையதொரு சூழலிலேயே, திருப்பரங்குன்றத்தில், பதட்டம் ஏற்பட்டது.

சட்டம் - ஒழுங்கு பிரச்சினையை ஏற்படுத்தும் வகையில், நீதிபதி ஜி.ஆர். சுவாமிநாதன் சர்ச்சைக்குரிய தீர்ப்பை வழங்கியதாக தமிழக அரசு குற்றம் சாட்டியது.

அதுவே, "எங்கப்பன் குதிருக்குள்ள இல்லை" என்ற தோரணையில், நீதிமன்ற உத்தரவு அமுல்படுத்தப்படுவதை யார் தடுத்தார்கள் என்பதைத் துல்லியமாக வெளிப்படுத்தியது.

ஆனால், நீதிமன்ற உத்தரவு நிறைவேற்றப்படவில்லை என்பதற்காக மதுரை மாவட்ட ஆட்சியர், மாநகர காவல் ஆணையர், திருப்பரங்குன்றம் கோயில் செயல் அலுவலர் ஆகியோர் மீது நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கை பாய்ந்திருக்கின்றது.

சட்டத்தை அமுல்படுத்துவது, நீதிமன்ற உத்தரவை செயல்படுத்துவது போன்றவை அரச அதிகாரிகளினுடைய கடமையாகும்.

திருப்பரங்குன்றத்திலே, நீதிமன்ற உத்தரவுகளை அரச அதிகாரிகள் புறக்கணித்தனர். வாய்மொழியாக பிறப்பிக்கப்பட்ட "மேலிட" உத்தரவுகளுக்கே கீழ்ப்படிந்தனர். அதனால், அரசியலமைப்புக் கடமையின் மேன்மை கேள்விக்கு உட்பட்டிருக்கின்றதா என்னும் ஐயம்கூட எழுகின்றது.

தீபம் ஏற்ற அனுமதிக்க வேண்டும் என்று நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்திருந்த வேளையிலேயே, மாவட்ட ஆட்சியரின் தடை உத்தரவும் பிறப்பிக்கப்பட்டது. நீதிமன்ற உத்தரவொன்றை, நிர்வாக உத்தரவு மூலமாக, உதாசீனம் செய்யமுடியுமா என்பதுகூடக் கேள்வியாகின்றது.

டிசம்பர் 4ல், மாவட்ட ஆட்சியரின் தடை உத்தரவை நீதிமன்றம் நீக்கியது. அதன்பின்னரும்கூட, நீதிமன்ற உத்தரவு நிறைவேற்றப்படவில்லை.

கார்த்திகைத் தீப விவகாரத்தில், தர்கா தரப்பிலிருந்து எதிர்ப்பு உருவாகவில்லை. மாறாக, ஆட்சியாளரிடமிருந்தே எதிர்ப்பு உருவாகியது. அதனாலேயே, ஸ்டாலின் தலைமையி லான ஆட்சியாளரின் உள்நோக்கம் கேள்வி க்குட்படுகின்றது.

அனைத்து சாதியினரும் அர்ச்சகராகலாம், கோயில் உண்டியல் மற்றும் சொத்துக்களைக் கையாள்தல், சிதம்பரம் கோயில் போன்ற விடயங்கள், ஸ்டாலின் தலைமையிலான ஆட்சியாளரின் நம்பகத்தன்மையைத் தொடர்ச்சியாகக் கேள்விக்கு உட்படுத்துகின்றன.

அதனால், இந்துக்களிடையே அவநம்பிக்கை வலுப்பெறுகின்றது. ஏமாற்றப்படுவதான உணர்வு உச்சம் தொடுகின்றது. அதனுடைய பிரதிபலிப்பு, நீதிபதி சுவாமிநாதனுடைய தீர்ப்பிலும் தெரிகின்றதோ என்னும் கேள்வி எழுகின்றது.

ஆக, இந்துக்கள் தொடர்பில், ஸ்டாலின் தலைமையிலே, தமிழக அரசு தடுமாறுகின்றமைக்கு "கார்த்திகைத்தீப" விவகாரமும் சாட்சியாகின்றது.

---



# அரசு போய் விடும்! பிளவு போகுமா?

- பழ . கருப்பையா -

திருப்பரங்குன்றத்தில் முருகனின் மலையில் கார்த்திகை தீபம் ஏற்றப்படுவது குறித்து உயர்நீதிமன்ற மதுரை அமர்வு நீதியரசர் சாமிநாதன் அதற்கு இசைவாக ஒரு தீர்ப்புரைத்தார். அவ்வாறு தீர்ப்புரைத்த நீதியரசரை நாடாளுமன்றப் பாதுகாப்பைப் பயன்படுத்திக் கொண்டு, அவர் மதவாதி என்று பலபடப் பழியுரைத்தனர்!

அவரைப் பதவி நீக்கம் செய்ய வேண்டும் என்று நாடாளுமன்றத்தில் திமுக ஒரு விண்ணப்பம் வைத்தது. இதற்கு எதிர்க் கட்சிகளெல்லாம் ஒன்று திரண்டன!

ஒவ்வொரு தீர்ப்புக்கும் ஒவ்வொரு நீதியரசரைப் பதவி நீக்கம் செய்வதென்றால், கடைசியில் நீதிமன்றங்களெல்லாம் கழுதைகள் மேயும் பாழ் நிலமாகிவிடாவா!

அது முருகனின் மலை. அவன் "பரங்குன்றத்து முருகன்" என்றே அழைக்கப்படுகிறான்! அவனைக் குறிஞ்சி நிலக் கடவுள் என்று தொல்காப்பியம் குறிப்பிடுகிறது! சங்க இலக்கியங்கள் அவனைப் பாடுகின்றன! கார்த்திகை தீபம் அவனுக்குரியது.

அன்றைக்கு எல்லா வீடுகளிலும் வீடு முழுவதும் விளக்கேற்றப்படுகிறது. வீடு முழுவதும் விளக்கேற்றிவிட்டு, மலையில் ஏற்றுவதில்லை என்றால் அந்தப் பண்டிகைக்கே பொருளில்லையே!

இது நூறாண்டு காலமாக வழக்கத்தில் இல்லை என்பது ஒரு வாதமாகாது!

முருகன் மலைக் கடவுள் என்பதும், கார்த்திகை தீபம் அவனுக்குரிய விழா என்பதும் ஈராயிரம் ஆண்டு ஒழுக்கலாறுகள்! விட்டுப் போன ஒன்றைப் புதுப்பிப்பது புதிய வழக்கமாக ஆகாது!

எல்லா மதப் பண்டிகைகளும் சடங்குகளின் வழியாகவும் கொண்டாட்டங்களின் வழியாகவுமே தங்களை அடையாளப்படுத்திக் கொள்கின்றன!

ஆண்டு முழுவதும் உழைத்துக் களைத்துச் சண்டையிட்டு வாழும் மனிதர்களுக்கு, இத்த கைய பண்டிகைகள் சமூகம் முழுவதையும் ஒரு மைப்படுத்துவதோடு, அவை ஒரு மாறுதலாகவும் ஆறுதலாகவும் அமைகின்றன!

இறைவன் ஒருவனே என்று எல்லாச் சமயங்களும் உடன்பட்டாலும், அவரவர்களின் வாழ்க்கை முறை வேறுபாட்டால், வழிபடும் முறைக ளும், அவற்றின் வாயில்களான பண்டிகைகளும் வேறுபடுகின்றன.

நம்மிடையே பிறந்து, வளர்ந்து, வாழ்ந்த மகான்களால் தோற்றுவிக்கப்பட்ட சமயங்கள் வரையறை உடையவை! ஒரு சிறு அளவு மாறு பாட்டைக் கூட உடன்படாதவை! ஏனெனில் எந்த மாறுபா டும் அந்தச் சமயங்களைச் சிதைத்துவிடும்!

ஆனால், மண்ணில் இயற்கையாகத் தோன்றிய சமயங்கள் ஏராளமான வேறுபாடுகள் உடையவை! வரையறைகள் இல்லாதவை. ஒவ்வொரு காலப் பழக்கத்தையும் இத்தகைய சமயங்கள் சேர்த்தே சுமக்கும்!

தமிழர்கள் மொழியாலும், இனத்தாலும், வாழ்ந்த எல்லைகளாலும் ஒன்றாகவே அறியப்பட்டிருந்தாலும், அவர்கள் பல வாரியாகப் பிரிந்து கிடந்தனர். தமிழனுக்கான ஒரு பேரரசு கட்டப்படுவதற்கு முன்னோடியாகத் தமிழர்களை இணைப்பதற்கான வரலாற்றுத் தேவையே, பக்தி இயக்கத்தைத் தோற்றுவித்தது என்று ஆய்வாளர்கள் கூறுவர்!

சிவன் முதன்மைப்படுத்தப்பட்டான் முருகன் உள்ளடக்கப்பட்டான். எனினும், தமிழர்களின் பழைய வழக்கங்களான குலதெய்வ வழிபாடுகளும் ஏற்கப்பட்டன! ஒவ்வொரு சிறு கூட்டமும் குலதெய்வ வழிபாட்டில் தனித்து அடையாளப்படுத்திக் கொண்டு, பெருந்தெய்வ வழிபாட்டில் ஒன்றிணைந்தது!

இந்தக் குணம் தமிழர்களின் குணம். இதை உட்கொண்டால்தான் சைவம் நிலைபெற முடியும்! எந்த மக்களிடம் அது நிலைபெற வேண்டுமோ, அந்த மக்களின் அடிப்படைக் குணத்தை அந்தச் சமயம் ஏற்றாக வேண்டும்!

நுணுகி வேறுபடல் பெருகி ஒன்றுபடல்! இதன் வெளிப்பாடே தமிழர் சமய வெளிப்பாடு!

ஓர் உருவம், ஒரு நாமம் ஒன்றுமிலார்க்கு, ஆயிரம் திரு [illegible]

மாணிக்கவாசகர் பரந்துபட்டுப் பாடுவது தமிழனின் அடிப்படைக் குணாம்சத்தை மனத்தினில் கொண்டுதான்! பன்மைத் தன்மை உடையவர்களின் போக்குகளுக்கு ஏற்ப, இசிவு கொடுக்கும் தன்மையோடு சைவம் ஐந்தாம் நூற்றாண்டில் கட்டமைக்கப்பட்டது!

ஒருவனின் அறிவு நிலைக்கு ஏற்றவாறு இறைவனை வழிபட்டுக் கொள்ளலாம்! தெளிவு போதாதவனுக்கு நடராசரைப் போல், தெளிந்த மனித வடிவில் கடவுட் காட்சி ஏற்கப்பட்டது!

தெளிந்த வடிவம் தேவையில்லை ஆயினும், ஓர் அடையாளம் வேண்டும் என்பானுக்கு இலிங்கம் பரிந்துரைக்கப்பட்டது!

எனக்கு எந்தக் குறியும் தேவையில்லை என்பானுக்கு, வெட்ட வெளி பரிந்துரைக்கப்பட்டது!

அருவ நிலை வெட்டவெளி அருஉரு நிலை இலிங்கம் உருநிலை கூத்தன்!

இந்தப் பன்மைத்தன்மை தமிழனின் இயல்பான கூறு என்பதால்தான், வேற்று மதத் தலங்களான நாகூரிலும், வேளாங்கண்ணியிலும், அந்தச் சமயங்களைச் சாராத இந்த மக்கள் வெகுவாகக் கூடுகின்றனர்! எதையும் வேறுபடுத்தி விலக்குவதில்லை!

வெள்ளைக்காரன் கண்டுபிடித்த இந்த ஊரடங்கு உத்தரவை, எந்த ஆளும் நடமாடாத, ஆகவே எந்தக் கலவரமும் ஏற்பட முடியாத ஒரு பகுதியில் பிறப்பிப்பது பேதைமையிலும் பேதைமையான செயல்பாடு அல்லவா!

ஆட்சி அதிகாரத்தை எந்த வகையிலும் மீண்டும் அடைந்துவிடுவது என்னும் கொள்கையுடையவர்கள் எந்த எல்லைக்கும் போவர்! அதிலே இந்த ஊரடங்கு உத்தரவு ஒன்று!

இந்த உத்தரவு நகைப்புக்கு உரியது என்பது வேறு! அதுவும் அந்த நீதியரசர் மீது பதவி விலக்குத் தீர்மானம் கொண்டு வருவது அதைவிட நகைப்புக்குரியது!

பாபர் மசூதி இடிக்கப்பட்டதை உடன்பட்டுத் தீர்ப்புச் சொன்ன ஐந்து நீதியரசர்கள் தீர்ப்புக்காக இந்த "இம்பீச்மெண்ட்" எதிர்க்கட்சிகளால் நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்படவில்லையே... அப்படி உடன்பட்டுத் தீர்ப்புரைத்த நீதியரசர்களில் ஒருவர் இசுலாமியர். அவரை மதவிலக்கம் செய்தார்களா?

நாள்தோறும் பரங்குன்றத்து முருகன் கோயில் மணி ஓசைக்கிடையே செயல்படும் இசுலாமியர்களையும், பள்ளிவாசலில் பாங்கு சொல்வதைக் கேட்டு கண் விழிக்கும் பிற மக்களையும் உள்ளடக்கிக் காலங்காலமாக வாழும் ஓர் ஊரில், அவர்களுக்கிடையே ஒரு பிளவை உண்டாக்கும் அரசின் முயற்சி இழிவானதாகாதா?

"பரங்குன்றத்து முருகனுக்குக் கார்த்திகை தீபம் ஏற்ற வேண்டும் என்று விண்ணப்பித்தவர் ஓர் இந்துத்துவவாதி அல்லவோ" என்பது முசுலிம்களின் வாதமாயின், அவர் முன்னின்ற காரணத்தினால் உண்மை இன்மையாகிவிடுமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோமாலிலாந் அங்கீகாரம் - பாலஸ்தீன ஆக்கிரமிப்பு! தந்திரோபாய இஸ்ரேல் வியூகம்!

ஐங்கரன் விக்கினேஸ்வரா

உலக நாடுகளை திரும்பி பார்க்க வைத்துள்ள இஸ்ரேலின் சோமாலிலாந்து அங்கீகாரத்திற்கு பின்னணியில், அமெரிக்கா மற்றும் இஸ்ரேலின் தந்திரமான வியூகம் இருப்பதாகவும் பார்க்கப்படுகிறது. நீண்டகாலமாக சுதந்திர நாடாக வேண்டி கோரிக்கை விடுத்த சோமாலிலாந்துக்கு இஸ்ரேல் முதன் முதலாக அங்கீகாரம் வழங்கியுள்ளது.

சோமாலிலாந்துக்கு அங்கீகாரம் வழங்கும் வேளையில் இன்னமும் பாலஸ்தீன ஆக்கிரமிப்பை இஸ்ரேல் தொடர்கிறது. முதல் உலகப் போரில் நேச நாடுகள் வெற்றி பெற்றதைத் தொடர்ந்து பாலஸ்தீனப் பகுதியின் நிர்வாகத்தை பிரிட்டனிடம் நேச நாடுகள் அளித்தன. போருக்குப் பின் உலகம் முழுவதிலிருந்தும் யூதர்களை பிரிட்டன் பாலஸ்தீனப் பகுதிகளில் குடியமர்த்தியது. யூதர்கள் தங்களுக்கென்று பலமிக்க இராணுவம் அமைத்து பாலஸ்தீன மண்ணை ஆக்கிரமித்தனர். பிரிட்டன் அதைக் கண்டு கொள்ளவில்லை.

1948 மே 14 அன்று பிரிட்டன் பாலஸ்தீனத்தை விட்டு வெளியேறியவுடன், பலமிக்க ராணுவத்தை கொண்டிருந்த யூதர்கள், அமெரிக்க உதவியுடன், பாலஸ்தீனத்தின் பெரும்பகுதியைக் கைப்பற்றினர். அதன் பின்னர் மிகப் பெரிய அளவில் இனஒழிப்பு நடவடிக்கைகள் இன்னமும் பாலஸ்தீனர்க்கு நடத்தப்பட்டு வருகிறது.

**இஸ்ரேலின் முதல் அங்கீகாரம்**

ஆபிரிக்க கண்டத்தில் உள்ள முக்கியமான நாடுகளில் ஒன்று சோமாலியா. இந்த நாட்டின் ஒரு பகுதியில் இந்திய பெருங்கடல் உள்ளது. இன்னொரு புறம் செங்கடல் உள்ளது. இந்த இரு கடல்களும் கப்பல் போக்குவரத்துக்கு முக்கியமான ஒன்றாகும்.

சோமாலியாவின் ஒரு பகுதியாக இருந்த சோமாலிலாந்து தனி நாடு கோரியது. சோமாலிலாந்து ஏடன் வளைகுடாவில் அமைந்துள்ளது. இதனால் அது முக்கியமான பகுதியாகும்.1991-ல் சோமாலியாவிலிருந்து பிரிந்து தன்னாட்சியுடன் சோமாலிலாந்து செயல்பட்டு வருகிறது. சோமாலிலாந்து மக்கள் தங்களை தனி நாடாக அறிவித்து கொண்டனர்.

சோமாலிலாந்தை இன்னும் எந்த நாடுகளும் அங்கீகரிக்காத நிலையில் இஸ்ரேல் முதல் முறையாக அதனை செய்துள்ளது. இதற்கு சோமாலியா, எத்தியோப்பியா மற்றும் மத்திய கிழக்கு நாடுகள் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளன. சர்ச்சைக்குரிய வகையில் முதல் நாடாக அங்கீகரித்த இஸ்ரேல் அரசின் முடிவை பல அரபு நாடுகள் கடுமையாக எதிர்த்தன.

அறுபது இலட்சம் மக்கள் வசித்து வரும் சோமாலிலாந்து என்ற நாட்டை அங்கீகரிப்பதாக 34 ஆண்டுகளுக்கு பிறகு இஸ்ரேல் முதல் நாடாக அறிவித்துள்ளது.

**ஆக்கிரமிக்கப்பட்ட பாலஸ்தீனம்:**


1947 ஆம் ஆண்டு ஐநா சபை மற்றும் இங்கிலாந்து அமெரிக்கா போன்ற நாடுகளின் திட்டமிட்ட சதியின் மூலம் பாலஸ்தீனம் துண்டாடப்பட்டு யூதர்களிடம் கொடுக்கப்பட்டது. 1967 ஆம் ஆண்டு திட்டமிட்ட பெரும் தாக்குதல் மூலம் பாலஸ்தீனத்தின் பெரும்பான்மை இடங்களை யூதர்கள் ஆக்கிரமித்தனர். தற்போது பெரும்பான்மையான 90 வீதத்திற்குமதிகமான பகுதிகளை யூதர்கள் ஆக்கிரமித்துள்ளனர்.




இந்த பாலஸ்தீனப் பிரச்சினையை நம் காலத்தின் மாபெரும் தார்மீகப் பிரச்சினை என்றார் நெல்சன் மண்டேலா. பாலஸ்தீன மக்களுக்கு இழைக்கப்பட்டிருக்கும் அநீதியை, அவர்களின் துயரத்தை இதைவிடச் சுருக்கமாக அதே நேரத்தில் மனத்தைத் தைக்கும் விதமாக ஒருவர் கூற முடியாது.

இரண்டாம் உலகப்போருக்கு பின் இரண்டு சம்பவங்கள் உலகை உலுக்கிக் கொண்டிருந்தது.இதில் ஒன்றான தென்னாப்பிரிக்க நிறவெறி ஆட்சி நீண்ட நெடிய போராட்டத்திற்குப் பின்னர் 1994இல் முடிவுக்கு வந்தது. ஆனால் 1940களில் தொடங்கிய பாலஸ்தீன மக்களின் துயரம் இன்றளவும் தொடர்கிறது. பலஸ்தீன சுதந்திர போராட்டமும் இன்றுவரை தொடர்ந்து கொண்டுதான் உள்ளது என நெல்சன் மண்டேலாவும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

வரலாற்று ரீதியில் பாலஸ்தீனத்தை பார்த்தால், முதல் உலகப் போரில் நேச நாடுகள் வெற்றி பெற்றதைத் தொடர்ந்து பாலஸ்தீனப் பகுதியின் நிர்வாகத்தை பிரிட்டனிடம் நேச நாடுகள் அளித்தன. போருக்குப் பின் உலகம் முழுவதிலிருந்தும் யூதர்களை பிரிட்டன் பாலஸ்தீனப் பகுதிகளில் குடியமர்த்தியது. யூதர்கள் தங்களுக்கென்று பலமிக்க இராணுவம் அமைத்து பாலஸ்தீனர்களை தாக்கி கைப்பற்றி உள்ளனர்.




**இரண்டு தேசிய இனங்கள் ஒன்றிணைந்த பிறகு பிரிவது எளிதானது அல்ல. பெரும்பாலான நாடுகள் இதை அடைய அழிவுகரமான போரை நடத்துகின்றன. ஆனால் வரலாற்றில் சிங்கப்பூரும் மலேசியாவும் இரத்தமின்றி இதை அடைந்தமை வரலாறே.**




**புதிய வியூகத்தில் இஸ்ரேல்:**

சோமாலிலாந்து அங்கீகாரத்தால் ஆப்பிரிக்காவின் கொம்பு பிராந்தியம் மற்றும் செங்கடல் பிராந்தியத்தில் அமைதி மற்றும் பாதுகாப்பைக் குலைக்கும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இந்த சோமாலிலாந்து செங்கடல்-ஏடன் வளைகுடா பகுதியில் அமைந்துள்ளது. சர்வதேச அளவில் கப்பல் போக்குவரத்துக்கு இந்த வழித்தடம் மிகவும் முக்கியமானதாக உள்ளது. குறிப்பாக ஏமனின் ஹவுதிகள் இஸ்ரேல் கப்பல்களை செங்கடலில் தான் தாக்குகின்றனர். இப்படியான சூழலில் சோமாலிலாந்தை கைக்குள் வைத்து கொண்டால் அங்கிருந்து ராணுவ தாக்குதல்களை எளிதாக நடத்தலாம். அதோடு ஏமனின் ஹவுதிகளுக்கும் உரிய பதிலடி கொடுக்க முடியும் என்று நெதன்யாகு கணக்கு போட்டுள்ளார்.

சோமாலிலாந்துடன் பிரிட்டன், துருக்கி, ஐக்கிய அரபு அமீரகம், டென்மார்க், தைவான் உள்ளிட்ட நாடுகள் தூதரகம் ரீதியிலான உறவை பேணி வந்தாலும் கூட தனி நாடாக அங்கீகரிக்கவில்லை.

சோமாலிலாந் சுதந்திர நாட்டின் கல்வி, சுகாதாரம், விவசாய துறை மேம்பாட்டுக்கு உதவுவதாகவும் பெஞ்சமின் நெதன்யாகு கூறியுள்ளார். இதுதொடர்பாக அவர் சோமாலிலாந்து அதிபர் அப்திர் ரஹ்மான் முகமது அப்துல்லாஹியிடம் பேசியிருந்தார்.

இதையடுத்து இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, வெளியுறவுத்துறை அமைச்சர் கிடியான் ஸார் மற்றும் சோமாலிலாந்து அதிபர் அப்துர் ரஹ்மான் முகமது அப்துல்லாஹி ஆகியோர் பரஸ்பர அங்கீகார ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

இந்த நடவடிக்கை ஆபிரகாம் ஒப்பந்தத்துக்கு இணங்குவதாகவும், இதுபற்றி அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப்புடன் இதை விவாதிப்பதாகவும் நெதன்யாகு தெரிவித்துள்ளார். ஆபிரகாம் ஒப்பந்தம் என்பது யூதம், கிறிஸ்தவம் மற்றும் இஸ்லாம் என மூன்று மதங்களிலும் முக்கிய தீர்க்கதரிசியாக கருதப்படும் ஆபிரகாம் பெயரில் உள்ளடங்கியதையாகும்.

இது கடந்த 2020ம் ஆண்டில் அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் மத்தியஸ்தம் செய்யஇஸ்ரேல், ஐக்கிய அமீரகம், பஹ்ரைன் இடையேயான அமைதியை நிலைநாட்ட மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தமாகும். இந்த ஒப்பந்தம் வழியாக இஸ்ரேல் இஸ்லாமிய நாடுகளுடன் உறவை சுமூகமாக்கும் வகையில் உருவாக்கப்பட்டது. இந்நிலையில் தான் ஆபிரகாம் ஒப்பந்தம் அடிப்படையில் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளதாக இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு அறிவித்துள்ளார்.

**இஸ்ரேல் அங்கீகார பின்னணி:**

சோமாலிலாந்து குடியரசை இஸ்ரேல் அங்கீகரித்த செய்தியை பல அரபு நாடுகளும் தங்களது எதிர்ப்பை தெரிவித்து உள்ளன. இஸ்ரேல் ஏன் இதைச் செய்கிறது என்பதற்கு பல காரணங்கள் இருக்கின்றன.

சோமாலியா இரண்டு மாநிலங்களின் ஒன்றியத்தால் ஆனது. ஒன்று முன்னர் பிரிட்டிஷ் கட்டுப்பாட்டில் இருந்த சோமாலிலாந்து மாநிலம். இது வடக்கில் உள்ளது மற்றும் முதன்மையாக இசாக் குலத்தினர் வசிக்கின்றனர். இரண்டாவது முன்னர் இத்தாலிய கட்டுப்பாட்டில் இருந்த சோமாலிலாந்து பிரதேசம் ஆகும். இசாக் இனச் சமூகத்தினர் வடக்கில் பெரும்பான்மையாக இருந்தனர். ஆனால் ஒன்றியத்திற்குப் பிறகு, அவர்கள் சிறுபான்மையினராக மாறினர். தெற்கில் உள்ள மொகடிவில் உள்ள மத்திய அரசாங்கம் அவர்களை ஒடுக்கியதாகவும், 1981 இல், ஒன்றியத்திலிருந்து பிரிந்து செல்ல சுதந்திரப் போரை அறிவித்ததாகவும் அவர்கள் குற்றம் சாட்டினர்.

சோமாலிலாந்து குடியரசு நிலையானது, செயல்படும் ஜனநாயகம் மற்றும் ஒப்பீட்டளவில் வளமானது என்பது உண்மைதான். இதற்கு நேர்மாறாக சோமாலியா பெரும்பாலும் தோல்வியுற்ற நாடாக உள்ளது. இஸ்லாமிய ஜிஹாதிஸ்ட் குழுவான அல் ஷபாபின் கட்டுப்பாட்டில் பெரிய பகுதிகள் உள்ளன.

இந்த நிலையில் இந்த இரு நாடுகளின் தற்போதைய நிலைமையில் இருந்து பல வேறுபாடான விஷயங்களை கற்றுக் கொள்ளலாம். இரண்டு தேசிய இனங்கள் ஒன்றிணைந்த பிறகு பிரிவது எளிதானது அல்ல. பெரும்பாலான நாடுகள் இதை அடைய அழிவுகரமான போரை நடத்துகின்றன. ஆனால் வரலாற்றில் சிங்கப்பூரும் மலேசியாவும் இரத்தமின்றி இதை அடைந்தன.

இரண்டாவதாக, சட்டப்பூர்வ அங்கீகாரம் செயல்படும் அரசுக்கு வழிவகுக்காது. இதற்கு நேர்மாறாக, ஒரு அரசு அங்கீகரிக்கப்படாததால், அது செயல்பட முடியாது என்று அர்த்தமல்ல. இதனால்தான் சிங்கப்பூர் பாலஸ்தீனத்திற்கு செயல்படும் அரசாங்கம் இருக்கும்போது மட்டுமே நாங்கள் அதை அங்கீகரிப்போம் என்று கூறியுள்ளது.

இஸ்ரேல் சோமாலிலாந்து குடியரசை அங்கீகரிப்பதில் பல முக்கிய காரணங்கள் இருக்கின்றன.




சோமாலிலாந்து குடியரசு ஏடன் வளைகுடாவின் கடற்கரையில் அமைந்துள்ளது. மறுபுறம் ஏமன் நாடும் உள்ளது. குறிப்பாக, ஹவுத்திகள் ஏமனை கட்டுப்படுத்தி வருகிறார்கள். இஸ்ரேலுடன் முரண்படும் ஈரானிய சார்பானவர்களே ஹவுத்திகள் ஆவார்கள். செங்கடல் ஊடாக கப்பல் போக்குவரத்தின் முக்கிய புள்ளியான ஏடன் வளைகுடாவையும் அவர்கள் தடுத்தனர்.

ஆனால் அவர்களுடன் முரண்படும் சோமாலிலாந்தை இஸ்ரேலிய அரசு அங்கீகரித்துள்ளமை, ஹவுத்திகளை ஏமனில் ஒரு வழிக்கு கொண்டுவரவே இந்த அங்கீகார முயற்சி என்று கூறப்படுகிறது.

இந்த விஷயத்தில் தற்போது அமெரிக்கா விலகியே உள்ளது. சோமாலியாவுடன், அமெரிக்காவுக்கு தற்போது மோதல் போக்கு உள்ளது. அதேவேளையில் இஸ்ரேலுடன் நல்ல நட்பு உள்ளது. மேலும் செங்கடல் பகுதியில் அமெரிக்காவின் வர்த்தக கப்பல்களுக்கு ஏமன் ஹவுதிகளால் அச்சுறுத்தல் உள்ளது. இருப்பினும் கூட சோமாலியாவில் இருந்து பிரிந்து செயல்பட்டு வரும் சோமாலிலாந்தை இஸ்ரேல் அங்கீகரித்ததை ட்ரம்ப் ஏற்கவில்லை. சோமாலிலாந்து உட்பட சோமாலியாவின் பிராந்திய ஒருமைப்பாட்டை தாங்கள் விரும்புவதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பெண்களின் பாதுகாப்பு கேள்விக்குறி"

# மதுபானசாலையை மூடக்கோரி நோர்வூட்டில் மக்கள் போராட்டம்



நுவரெலியா, ஜன. 04

ஹற்றன் - பொகவந்தலாவ பிரதான வீதியில் நோர்வூட் வெஞ்சர் தோட்டப் பகுதியில் சுமார் 25 வருடங்களாக இயங்கிவரும் மதுபானசாலையை மூடக்கோரியும் அதற்கான அனுமதிப்பத்திரத்தை இரத்து செய்யுமாறு கோரியும் நேற்றுக் காலை பொதுமக்களால் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

"பெண்களின் பாதுகாப்பு கேள்விக்குறி, சிறுவர்களின் வாழ்வைச் சீர்குலைக்கும் மதுபோதை, பாடசாலை இடைவிலகலுக்குக் காரணமாகும் மதுபானசாலைகள், வெஞ்சரின் எதிர்காலம் மதுபோதையில்" போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறும் கோஷங்களை எழுப்பியவாறும் மக்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த மதுபானசாலை குடியிருப்புப் பகுதியில் இயங்குவதால், அருகிலுள்ள ஆலயத்தில் இடம்பெறும் வழிபாட்டு நிகழ்வுகள் மற்றும் விளையாட்டு மைதானத்தில் நடத்தப்படும் விளையாட்டுப் போட்டிகளுக்கும் இடையூறு ஏற்படுவதாக மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

மேலும், தோட்டப் பகுதியில் இந்த மதுபானசாலை அமைந்துள்ளதால் பலர் மாதாந்த சம்பள அடிப்படையில் கடன் புத்தகத்தில் பதிவு செய்து மதுபானம் அருந்தி வருகின்றனர்.

இதனால், பாடசாலை மாணவர்கள், இளைஞர்கள், யுவதிகள் எனப் பலரும் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்குவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் சுமார் 1,500 குடும்பங்கள் வாழ்ந்து வரும் நிலையில், சமூகச் சீர்கேடுகளுக்கு வித்திடும் இந்த மதுபானசாலையை உடனடியாக மூடுவதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

இதேவேளை, ஆர்ப்பாட்டம் இடம்பெற்ற பகுதியில் பாதுகாப்புக்காக பொலிஸார் குவிக்கப்பட்டனர்.

(எ)

# கடற்றொழிலாளர் கூட்டுறவு கட்டடம் கடலரிப்பால் இடிந்து விழும் நிலையில்

திருகோணமலை, ஜன. 04

கடலரிப்பால் திருகோணமலை - வீரநகர் பகுதியில் உள்ள வீரநகர் அன்னை கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்க கட்டடம் தாழிறங்கும் அபாயத்தில் உள்ளது என்று அப்பகுதி மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

வீரநகர் கடற்பகுதியில் நிலவும் அதிக அலை காரணமாக பெருமளவான கரையோரப் பகுதி கடலினுள் உள்வாங்கப்பட்டுள்ளது. அருகில் உள்ள கட்டடங்களும் ஆபத்தான நிலையில் உள்ளன.


அந்தவகையில் வீடு ஒன்று ஏற்கனவே தாழிறங்கி சேதமடைந்துள்ளது. வீரநகர் அன்னை கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்க கட்டடத்தின் அத்திவாரப்பகுதிகளிலும் வெடிப்பு ஏற்பட்டு குறித்த கட்டடம் தாழிறங்கும் அபாயத்தில் காணப்படுகிறது. குறித்த கட்டடம் மற்றும் சேதமடைந்த வீடுகளை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் வந்து பார்வையிட்டு சென்றுள்ளனர் என்று அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

குறித்த கட்டடமானது சுனாமி பேரழிவுக்கு பின்னர் தன்னார்வ தொண்டு நிறுவனம் ஒன்றால் கட்டப்பட்டு மீனவர்களுடைய உபகரணங்களை பாதுகாப்பதற்காகவும் மீனவர்கள் ஓய்வெடுப்பதற்காகவும் பயன்படுத்தப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

(எ)

கடற்கரையில் படுகொலை செய்யப்பட்ட

# திருகோணமலை மாணவர்களின் 20 ஆவது ஆண்டு நினைவேந்தல்





திருகோணமலை, ஜன. 04

திருகோணமலை கடற்கரையில் வைத்து படுகொலை செய்யப்பட்ட 5 மாணவர்களின் 20 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று முன்தினம் மாலை திருகோணமலை கடற்கரையில் உள்ள காந்தி சிலைக்கு முன்பாக இடம்பெற்றது.

இதன்போது, படுகொலை செய்யப்பட்ட மாணவர்களின் படங்களுக்கு மலர்தூவி, விளக்கேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது. (எ-12)

## வாழ்க்கையின் அர்த்தம்...

(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

செல்கிறார்கள். உணவகங்களில் துணிக் கடைகளில்கூட ஊழியர்களை அதிகமான அலைக்கழிப்புக்கு உள்ளாக்கும் போக்கை காண முடிகிறது. ஊதியம் வாங்குகிறார்கள் இல்லையா... அவர்களே செய்யட்டும்' என்ற அலட்சிய எண்ணம்.

சங்க காலத்தில் மன்னர்களிடையே போர் தொடங்குவதற்கு முன்னர் போரைப் பற்றி அறிவித்து, கொல்லக்கூடாத உயிரினங்களைப் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறு அறிவுறுத்தி போரிலும் அறம் பேணினார்கள் என அறிகிறோம். அப்படிப்பட்ட சிறப்பான மாண்பைப் பெற்றவர்கள் நாம். தமிழ்த் தாத்தா என்று சொல்லப்படும் உ.வே.சா.வின் அதீத பொறுப்புணர்வினால் தான் இன்று நமக்கு பல புத்தகங்கள் கிடைத்திருக்கின்றன.

ஒரு சமயம் தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறையைக் காண அரண்மனைக்குச் சென்ற புலவர் மோசிகீரனார் களைப்பு மிகுதியால் முரசுக் கட்டிலில் கண்ணயர்ந்துவிட பொறுப்புணர்வு மிக்க இரும்பொறை, குற்றமான அச்செயலை செய்த புலவருக்கு தண்டனை வழங்காமல் கவரி வீசினானாம். இச்செயலைக் கண்ட புலவர் நன்றியுணர்வுடன் மன்னனை வியந்து பாமாலை பொழிந்தாராம்.

இத்தனை சிறப்பான பாரம்பரியங்களைக் கொண்ட நாம், இன்று சின்னச் சின்ன விஷயங்களுக்குக்கூட பொறுப்புணர்வு பேணாது ஒருவருடன் ஒருவர் வெட்டி மடிகிறோம்.

இந்த புத்தாண்டில் நாம் முக்கியமாகக் கடைப்பிடிக்க வேண்டியது பொறுப்புணர்வும் நன்றியுணர்வும்தான் என்பது மேலான கருத்தாக முன்வைக்கப்படுகிறது. "அனைத்துக்கும் நான் பொறுப்பு" என்ற மேன்மையான எண்ணத்துடன் வாழும்போது நம் வாழ்வு அர்த்தமுள்ள வாழ்வாக மலரும். தனிமனித ஒழுக்கம் மற்றும் சமுதாயப் பொறுப்புணர்வு இரண்டும் சேர்ந்த நிலையிலேயே மனிதன் சிறப்படைகிறான்.

(தினமணி)

# நடைபாதை வியாபாரிகளை அகற்றும் பணி முன்னெடுப்பு

கண்டி, ஜன. 04

கண்டி மாநகர சபையின் முன்கூட்டியே அறிவிக்கப்பட்ட திட்டத்தின் படி, கண்டி நகரில் அங்கீகரிக்கப்படாத நடைபாதை வியாபாரிகளை அகற்றும் பணி நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை காலை முன்னெடுக்கப்பட்டது.

இந்த பணி மாநகர சபை ஆணையாளர் இந்திகா குமாரி அபேசிங்க, மாநகர சபை அதிகாரிகள் மற்றும் பொலிஸாரின் தலைமையில் முன்னெடுக்கப்பட்டது.

கண்டி நகரில் அங்கீகரிக்கப்படாத நடைபாதை வியாபாரிகள் கடந்த வருடம் ஜூலை மாதம் முதல் அகற்றப்படுவார்கள் என்று கண்டி மாநகர சபை அறிவித்திருந்தது.

கண்டி நகரத்திலும் பேராதனை மற்றும் கட்டுகஸ்தோட்டை பகுதிகளில் இருந்து அகற்றப்பட்ட நடைபாதை வியாபாரிகளுக்கு மாற்று இடமாக போகம்பரை பகுதியில் இடம் வழங்கப்பட்டுள்ளது.

மாற்று இடங்கள் வழங்கப்பட்டிருந்தாலும் அந்த இடங்களில் சன நட்டமாட்டம் குறைவாக இருப்பதால் வியாபாரம் செய்ய முடியவில்லை என வியாபாரிகள் தெரிவித்துள்ளனர். (எ)

# கடலோர வீதியில் விபத்து: வெளிநாட்டு பிரஜை பலி!

கொழும்பு, ஜன. 04

மாத்தறை- வெலிகம கடலோர வீதியில் இடம்பெற்ற விபத்தில் வெளிநாட்டு பிரஜை ஒருவர் உயிரிழந்தார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த விபத்து வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

மாத்தறையிலிருந்து காலி நோக்கிப் பயணித்த ஜீப் வாகனம் ஒன்று வீதியில் பயணித்த வெளிநாட்டு பிரஜை ஒருவர் மீது மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

உயிரிழந்தவர் ஸ்லோவாக்கியா நாட்டைச் சேர்ந்த 42 வயதுடையவர் ஆவார்.

விபத்து தொடர்பில் ஜீப் வாகனத்தின் சாரதி வெலிகம பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வெலிகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (எ)

## கணக்காய்வாளர்...

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

சொல்பவர்களுக்கெதிராகப் பொங்கிவிட்டு பின்னர் உண்மை வெளிவந்ததும் ஒன்றும் தெரியாதவர்போல அடங்கிவிடுவார்கள். எல்லாக் கட்சிகளிலும் இவ்வாறான தனிநபர் துதிபாடும் குருட்டு விசுவாசிகள் நிறையவே இருப்பது அரசியல்வாதிகளுக்குப் பலம்.

இப்பதவிக்கான நியமனம் தொடர்பில் முக்கியமாகக் கவனத்தில் கொள்ளவேண்டியது முன்மொழியப்பட்ட ஆள் அப்பதவிக்குப் பொருத்தமானவரா இல்லையா என்பதாகும். ஆனால் அதற்கு முக்கியமளிக்காது வேறு விடயங்களுக்கு முக்கியமளிப்பதையே இங்கு பார்க்க முடிகிறது. இதில் தெற்கிலும் வடக்கிலும் ஒரே நிலைமைதான். உண்மையில் இராணுவத்துறையின் கணக்காளரான ரணசிங்கா பொதுக்கணக்காய்வுத் தலைமைக்குப் பொருத்தப்பாடு குறைந்தவர் என்பதே உண்மை. தமிழ் மக்களுடன் நேரடியாகத் தொடர்புபடாத விடயங்களில் இராணுவத்தைச் சேரந்தவர்களை நியமிப்பதில் எதிர்ப்புக் காட்ட வேண்டிய அவசியமில்லை என்பதற்கப்பால் அதனைத் தமிழ் உறுப்பினர்களால் தடுக்கவும் முடியாது. தேசிய பொலிஸ் ஆணைக்குழுவுக்கு முன்னாள் இராணுவ அதிகாரியான மேஜர் ஜெனரல் தர்ஷன் ஹெட்டியாராட்சியை அரசியலமைப்புப் பேரவையின் அரச மற்றும் எதிர்த்தரப்பு உறுப்பினர் இணைந்து சென்ற வாரத்தில் தெரிவு செய்திருப்பது இதனை எடுத்துக்காட்டும். எதிர்த்து வாக்களித்துவிட்டோம் என்று திருப்திப்பட மட்டுமே முடியும். சிலவேளைகளில் ஆதரவாகச் செயற்படுவது கூடிய பயனைத் தரக்கூடும். இறுதி யுத்தத்திற்குத் தலைமை தாங்கிய சரத் பொன்சேகாவையே இந்த நாட்டின் ஜனாதிபதியாக்க உழைத்த நாங்கள் கேவலம் ஒரு கணக்காய்வாளர் நாயகமாக இராணுவத்தைச் சேர்ந்த ஒருவர் வருவதை ஆதரிக்க்கூடாதா என்று கேட்பவருக்கு என்ன பதிலைக் கூறப்போகிறோம். கடந்த வரவு செலவுத் திட்ட வாக்கெடுப்பின்போது நல்லிணக்கத்தை வெளிப்படுத்துவதற்காக எதிர்த்து வாக்களிக்காமல் விட்டது போல ஒரு நல்லிணக்கத்தைக் காட்டுவதற்காக தான் வாக்களித்தாலும் ரணசிங்க தெரிவு செய்யப்படுவதற்கான வாய்ப்பில்லை என்பதைப் புரிந்துகொண்டு சிறிதரனும் ஆதரவாக வாக்களித்திருக்கலாம் அல்லவா? என்றும் நியாயப்படுத்த முடியும். மக்களைப்பற்றிய சிந்தனை இல்லாத அரசியல்வாதிகளால் மாறி மாறி உருட்டி அரசியல் செய்யத்தான் முடியும். அதனால் மக்களுக்கு எந்த நன்மையும் விளையப் போவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசமைப்பு...

இதன்பின்னர் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசாங்கம் எல்லைமீள் நிர்ணயம் செய்த பின்னர் தான் மாகாணசபை தேர்தல் என்று கூறுவதை நாம் ஏற்கமுடியாது. தேர்தல் முறை மறுசீரமைப்பு என்பது ஒரு விடயம். ஆனால் மறுசீரமைப்பு செய்யப்படவில்லை என்பதற்காக தேர்தலே நடத்தாமல் இருப்பது ஏற்க முடியாத ஒரு விடயம். அதனை அரசுக்கு சொல்லியிருக்கிறோம்.

அப்படி பார்த்தால் கடந்த இரு பாராளுமன்ற தேர்தல்கள் நடத்தியிருக்க முடியாது. எனவே தேர்தலை உரிய காலத்தில் நடாத்துவது அடிப்படையான விடயம். அரசானது தேர்தலுக்கு முகம் கொடுக்க பயந்துகொண்டு மாகாண சபை தேர்தலை காலவரையின்றி பிற்போட்டுக்கொண்டிருப்பதாக தெரிகின்றது. முடிந்தால் மாகாண சபை தேர்தலை உடனடியாக நடத்துங்கள் என்று பகிரங்கமாக சவால் விடுக்கின்றோம். வடக்கு-கிழக்கில் அரசின் செல்வாக்கு பாரிய அளவு சரிவடைந்துள்ளது. மக்கள் தெளிவடைந்துள்ளனர். அதனை நடத்தினால் மண் கௌவ்வுவீர்கள் என சவாலாக சொல்லுகொள்கிறோம்.

அத்துடன் பயங்கரவாத தடுப்புச்சட்டம் முற்றுமுழுதாக நீக்கப்படவேண்டும். மாற்றீடாக எந்த சட்டமும் தேவையில்லை என்று எங்களை விட தீவிரமாக இருந்தவர்கள் இந்த ஜே.வி.பியினர். கடந்த காலங்களில் மாற்று வரைவுகள் வந்தபோது இவர்கள் அந்த கூட்டங்களுக்கே வரமாட்டார்கள். அதனை நீக்குமாறு நாங்கள் நடத்திய போராட்டங்களில் ஒவ்வொரு மாவட்டங்களில் இருந்தும் அவர்கள் சார்ந்த முக்கியமான ஒருவர் பங்கு கொண்டிருந்தார். எனவே ஆட்சிக்கு வந்தவுடன் இருப்பதைவிட மோசமான ஒரு வரைபு தற்போது வெளிவந்துள்ளது. பயங்கரவாதத்தில் இருந்து அரசை பாதுகாப்பதற்காகவாம் என்று கூறப்படுகின்றது. இது ஒரு நகைப்பிற்குரிய விடயம். அவ்வாறு எனில் மக்களை பாதுகாப்பதற்காக இல்லை. இதனை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது. அதில் உள்ள விடயங்கள் தொடர்பாக கட்சி சில கலந்துரையாடல்களை நடத்தும்.அந்த வரைவை முற்றாக எதிர்க்கிறோம்.

அத்துடன் தேசிய ரீதியில் ஒரு குற்றச்சாட்டு ஒன்று எமது பாராளுமன்றக்குழுத்தலைவர் சிவஞானம் சிறிதரன் மீது முன்வைக்கப்பட்டுள்ளது. அரசியலமைப்பு சபையில் அரசுடன் இணைந்து அனைத்திற்கும் வாக்களித்ததாக ஒரு குற்றச்சாட்டு உள்ளது. விசேடமாக கணக்காளர் நாயகம் நியமனத்தில் ஒரு இராணுவ அதிகாரிக்கு சார்பாக வாக்களித்தார் என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. இழப்பீட்டிற்கான அலுவலகத்திற்கும் இராணுவ அல்லது பாதுகாப்புத் தரப்பின் பின்புலத்தை சேர்ந்த இரண்டு பேருக்கு சிறிதரன் சார்பாக வாக்களித்தமை மட்டுமல்லாமல் அவர்களை தெரிவு செய்கின்ற நேர்முகப் பரீட்சையிலும் தேர்வு செய்துள்ளார் என்ற குற்றச்சாட்டுக்கள் இருந்தன. அதனை அவர் மறுத்திருந்தார். ஆனால் அது உறுதி செய்யப்பட்டுள்ளது.

அந்த இருவரையும் நியமிக்கக்கூடாது என்று கட்சி ஜனாதிபதிக்கு கடிதம் எழுத வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டு எழுதிவைத்திருந்தோம். எனவே அது ஒரு தர்மசங்கடமான நிலைமையை கட்சிக்கு ஏற்படுத்தியுள்ளது. இவர்களை நியமிக்கக்கூடாது என்று கட்சி கடிதம் எழுதியுள்ளது. ஆனால் கட்சியை சேர்ந்தவர் அவர்களை தெரிவு செய்துள்ளார்.

அத்துடன் அதற்கு முன்னரும் கூட இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நியமனம் தொடர்பாக மத்திய குழு கூட்டத்தில் அவரிடம் விளக்கம் கேட்டிருந்தோம். கூடிய புள்ளி எண்ணிக்கையை பெற்றவருக்கு அந்த பதவியை வழங்காமல் இரண்டாவதாக வந்தவருக்கு அரசாங்கம் கொடுத்தபோது அரசுடன் இணைந்து அவர் வாக்களித்ததாக சொல்லப்பட்டது. அதற்கான நியாயப்பாடுகளை கட்சிக் கூட்டத்தில் அவர் சொல்லியிருந்தார்.

மேன்முறையீட்டு நீதிமன்ற தலைவர் பதவி தொடர்பான வாக்கெடுப்பிலும் அப்படி செயற்பட்டதாக சொல்லப்பட்டிருந்தது.

கணக்காளர் நாயகம் விடயத்தில் மூன்று தடவைகள் அவ்வாறு நடந்துள்ளது. இறுதியாகவே அந்த இராணுவ அதிகாரியும், அதற்கு முன்பு ஜனாதிபதி தனது நெருங்கிய நண்பரையும் பின்னர் இரண்டாம் நிலையில் இருக்கும் ஒருவரையும் பரிந்துரை செய்திருந்தார். இருப்பினும் அந்த மூன்றும் நிறைவேறவில்லை.

ஏனெனில் எதிர்கட்சி உறுப்பினர்கள் இருவரும் சிவில் சமூகத்தை சேர்ந்த மூவரும் சேர்ந்து அந்த பிரேரணைகளிற்கு எதிராக வாக்களித்திருந்தனர்.

அவர்களுக்கு சார்பாக சிறிதரனின் வாக்கு உட்பட நான்கு வாக்குகள் கிடைத்தன. எனவே அரசுடன் இணைந்து இந்த வாக்கெடுப்பில் கலந்துகொண்டது தொடர்பான குற்றச்சாட்டு அவருக்கு இருந்தது. ஏற்கனவே இது தொடர்பாக பாராளுமன்றில் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் பிரச்னையை எழுப்பியிருந்தார்.

சிறிதரன் பிரதிநிதித்துவப்படுத்துவது பிரதான எதிர்க்கட்சி தவிர்ந்த மற்றய எதிர்க்கட்சிகளின் பிரதிநிதி. எனவே அப்படியாக இருப்பவர் எல்லா விடயங்களிலும் கண்ணை மூடிக்கொண்டு அரசுக்கு சார்பாக வாக்களிப்பது தொடர்பான குற்றச்சாட்டு எட்டாவது தடவையாக நடந்துள்ளது. எனவே கட்சியையும் சங்கடப்படுத்தாமல் அவரையும் சங்கடத்திற்கு உட்படுத்தாமல் இருப்பதற்காக அரசியலமைப்பு சபையில் இருந்து அவர் இராஜினாமா செய்யவேண்டும் என்று பணிப்புரை வழங்குவதாக தீர்மானம் எடுத்துள்ளோம்-என்றார். (அ)

## தையிட்டியில்...

கட்சிகளின் முக்கியஸ்தர்கள், உள்ளூராட்சிச் சபைகளின் தவிசாளர்கள், உறுப்பினர்கள், மதத் தலைவர்கள், சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் பொது மக்கள் எனப் பெருமளவிலானோர் கலந்துகொண்டு தையிட்டி திஸ்ஸ விகாரைக்கு எதிராகவும், காணிகளை விடுவிக்கக் கோரியும் கோஷம் எழுப்பினர்.

இதையடுத்துப் பொலிஸார் பெருமளவில் பஸ்களில் அழைத்து வரப்பட்டு அந்தப் பகுதியில் குவிக்கப்பட்டனர்.

இதேவேளை, தையிட்டி விகாரையில் நேற்று பௌர்ணமி தினத்தை முன்னிட்டு புதிதாக புத்தர் சிலை ஒன்றை நிறுவும் நோக்குடன் சிகிரியாவில் இருந்து புத்தர் சிலை ஒன்று கொண்டு வரப்பட்டது.

இந்நிலையில், சிகிரியா பகுதியில் இருந்து புத்தர் சிலையுடன் வந்த பௌத்த பிக்கு தலைமையிலான குழுவினரைக் காங்கேசன்துறை பொலிஸார், பொலிஸ் நிலையம் அழைத்துச் சென்று வாக்குமூலங்களைப் பதிவு செய்த பின்னர், அவர்களை தையிட்டிக்குச் செல்ல விடாது, பஸ்ஸில் திருப்பி அனுப்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## இலங்கை...

அதற்கமைய, சார்க் பத்திரிகையாளர் மன்றத்தின் இரண்டாவது மாநாடு, இந்தியாவின் பீஹார் மாநில நாளந்தா திறந்த பல்கலைக்கழகத்தில், இன்று மற்றும் நாளை இடம்பெறவுள்ளது.

மாநாட்டில் வெளிநாடுகளைச் சேர்ந்த பல பிரதிநிதிகள், பத்ம சிறீ விருது பெற்றவர்கள், மூத்த பத்திரிகையாளர்கள், எழுத்தாளர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் பங்கேற்கவுள்ளனர்.

இந்த மாநாட்டில் முதன்மை விருந்தினராக பீஹார் மாநில ஆளுநரும், முன்னாள் சிக்கிம் ஆளுநருமான கங்கா பிரசாத் கலந்து கொள்வதாக, சார்க் பத்திரிகையாளர்கள் மன்ற இந்திய கிளையின் தலைவர் சசி பூஷண் குமார் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக, இலங்கை உள்ளிட்ட நாடுகளில் இடம்பெறும் ஊடக அடக்குமுறைகள் மற்றும் கருத்துச் சுதந்திர மீறல்கள் குறித்தும்சார்க் பத்திரிகையாளர்கள் மன்றம், விரிவாக கலந்துரையாடவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இந்த மாநாட்டில் சர்வதேச கலாசார தூதர் சரிதா பத்து, நேபாளத்தைச் சேர்ந்த சார்க் பத்திரிகையாளர்கள் மன்றத்தின் சர்வதேச தலைவர் ராஜூலாமா, பங்களாதேஷைச் சேர்ந்த சர்வதேச பொதுச் செயலாளர் முகமது அப்துர் ரஹ்மான், தாய்லாந்தைச் சேர்ந்த பி.சி. சந்திரா உள்ளிட்டோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொள்கிறார்கள். (அ)

## குறைந்த...

பொருளாதார வீழ்ச்சியிலிருந்து நாடு இன்னும் முழுமையாக மீளவில்லை. பணவீக்கம் ஓரளவுக்குக் குறைந்திருந்தாலும், அத்தியாவசியப் பொருட்களின் (உணவு, எரிபொருள், மருந்து) விலைகள் சாமானிய மக்கள் எட்ட முடியாத உயரத்தில் உள்ளன.

உலக வங்கியின் தரவுகளின்படி, இலங்கையின் **24.5** வீத மக்கள் வறுமைக்கோட்டின் கீழ் உள்ளனர். நடுத்தர வர்க்கத்தினர் கூட தங்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றப் போராடி வருகின்றனர்.

ஆரோக்கியமற்ற நாடுகளின் பட்டியலில் இலங்கை **158**ஆவது இடத்தில் உள்ளது. மருந்து தட்டுப்பாடு, போதிய ஊட்டச்சத்தின்மை மற்றும் அரசு மருத்துவமனைகளில் நிலவும் உள்கட்டமைப்பு குறைபாடுகள் பெரும் பின்னடைவாகக் கருதப்படுகின்றன.

நாட்டின் பொருளாதாரச் சூழல் காரணமாக மருத்துவர்கள், பொறியாளர்கள் மற்றும் தகவல் தொழில்நுட்ப வல்லுநர்கள் போன்ற திறமைசாலிகள் அதிகளவில் நாட்டை விட்டு வெளியேறுவது, சேவைகளின் தரத்தைக் குறைத்துள்ளது.

முறையான நீண்டகாலக் கொள்கைகள் இல்லாதது மற்றும் ஊழல் போன்ற காரணங்களால் நாட்டின் வளர்ச்சித் திட்டங்கள் மக்களிடம் சரியாகச் சென்றடைவதில்லை.

வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்த இலங்கை செய்ய வேண்டியவை என்ன?

இந்த இக்கட்டான சூழலிலிருந்து மீண்டு வரவும், மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தவும் பின்வரும் நடவடிக்கைகள் அவசியமானவை-

சிறு மற்றும் நடுத்தர வணிகங்களுக்கு அதிக கடனுதவி மற்றும் வரிச் சலுகைகளை வழங்கி உள்நாட்டு உற்பத்தியைப் பெருக்க வேண்டும்.

வறுமையில் வாடும் மக்களுக்கு நேரடி நிதியுதவி மற்றும் முறையான ரேஷன் திட்டங்களை உறுதி செய்ய வேண்டும்

அரசு மருத்துவமனைகளில் அத்தியாவசிய மருந்துகள் தடையின்றி கிடைப்பதை உறுதி செய்வதோடு, நோய் தடுப்பு முறைகளில் அதிக முதலீடு செய்ய வேண்டும்.

நவீன தொழில்நுட்பங்களுக்கு ஏற்ப கல்வி முறையில் மாற்றங்களைக் கொண்டு வந்து, இளைஞர்களுக்கு உள்நாட்டிலேயே அதிக ஊதியத்துடன் கூடிய வேலைவாய்ப்புகளை உருவாக்க வேண்டும்.

அந்நியச் செலாவணியை ஈட்ட மிகச்சிறந்த வழியாக விளங்கும் சுற்றுலாத்துறையை உலகத்தரம் வாய்ந்த முறையில் மேம்படுத்த வேண்டும்.

இலங்கை தற்போது ஒரு சவாலான காலகட்டத்தைக் கடந்து கொண்டிருக்கிறது. தரவரிசையில் பின்னடைவு ஏற்பட்டாலும், முறையான நிர்வாகம் மற்றும் ஊழலற்ற சீர்திருத்தங்கள் மூலம் மீண்டும் ஒரு வளமான நாடாக இலங்கையை மாற்ற முடியும். (அ)

## வடக்கு...

இளையோரை தேவையான திறன்களுடன் தயார்ப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டது.

இந்த கலந்துரையாடலில் மாகாண ஆளுநரின் செயலாளர், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட செயலாளர்கள், பல்கலைக்கழக மற்றும் முதலீட்டுச் சபை நிபுணர்கள் கலந்துகொண்டனர். (அ)

## இராணுவ...

எதிர்ப்புக்கள் கிளம்பிய நிலையில், கடந்த 30ஆம் திகதி தையிட்டி விகாராதிபதி , தமது விகாரைக்குள் எவ்வித புதிய கட்டுமானங்களையும் தான் செய்ய மாட்டேன் என்றும், விசேட பூஜைகளுக்கோ பெரஹரா போன்ற எதற்கும் தான் அனுமதி கொடுக்கவில்லை எனவும் ஊடகங்கள் ஊடாக அறிவித்திருந்தார்.

இந்நிலையில் நேற்று புத்தர் சிலையுடன் பௌத்த பிக்கு ஒருவரின் தலைமையிலான குழு ஒன்று , காங்கேசன்துறை பகுதியில் உள்ள இராணுவத்தினரின் சிற்றுண்டி சாலையில் காத்திருக்கின்றனர் எனக் காங்கேசன்துறை பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் சிற்றுண்டிச்சாலைக்கு விரைந்த பொலிஸார், புத்தர் சிலையை மீட்டதுடன், புத்தர் சிலையை எடுத்து வந்த பௌத்த பிக்கு தலைமையிலான குழுவினரையும் பொலிஸ் நிலையம் அழைத்துச் சென்று மேலதிக விசாரணைகளை முன்னெடுத்தனர். (அ)

## கல்வி...

வன்மையாகக் கண்டிப்பதாக அவர் தெரிவித்தார்.

இது நாட்டின் கலாசாரத்திற்கு முரணானது எனவும், எதிர்கால சந்ததியினரை முழுமையாக அழிக்கும் செயல் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

கல்விக்காக கோடிக்கணக்கான பணம் ஒதுக்கப்பட்ட போதிலும், இன்று அச்சிடப்பட்ட பாடப்புத்தகங்களில் இருந்து சில பக்கங்களை கிழித்துவிட்டு மாணவர்களுக்கு வழங்க வேண்டிய துரதிஷ்டவசமான நிலை ஏற்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதற்குப் பின்னால் உள்ள சதியை வெளிப்படுத்த வேண்டும் எனவும் அவர் கோரினார்.

தாம் முன்னெடுக்கும் உபகரணங்கள் வழங்கும் திட்டங்களை விமர்சிப்பவர்களுக்கு பதிலளித்த அவர், இவை வெறும் விநியோகம் அல்ல, நாட்டின் எதிர்காலத்திற்கான சமூக முதலீடு என தெரிவித்தார். (அ)

## ரணில்...

இருந்து ஒதுங்கினார். பின்னர் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்தார். அக்கட்சி ஊடாகவே தற்போது அரசியல் பயணத்தை தொடர்கின்றன.

இந்நிலையில் ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி ஒன்றிணைவு தொடர்பில் எழுப்பட்ட கேள்விக்கு பதிலளித்த அவர், கூறியவை வருமாறு-

“ரணில் விக்கிரமசிங்கவுடன் சஜித் பிரேமதாஸ இணைந்து செயல்படுவார் என நான் நம்பவில்லை. ஏனெனில் 'ரீம் வேர்க்' என்றால் என்னவென்பது சஜித்துக்கு தெரியாது. அதனால்தான் ஐக்கிய தேசியக் கட்சியுடனான பேச்சுக்குகூட அவர் தனித்து வந்தார்.

ஜனாதிபதி தேர்தலின்போது இணைந்து செயல்பட வேண்டும் என சஜித்திடம் கூறினேன். இதனால்தான் என்னை அமைப்பாளர் பதவியில் இருந்து தூக்கினார்.


ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி என்பன இணைந்தால்கூட டீம் வேர்க்கிற்கு சஜித் இடமளிப்பார் என நான் கருதவில்லை.

ஐக்கிய மக்கள் சக்தில் இருந்து வெளியேறிய நான் மீண்டும் அக்கட்சியில் இணையும் இல்லை.” - என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# வெனிசுலா ஜனாதிபதியை சிறைப்பிடித்தது அமெரிக்கா!



கொழும்பு, ஜன. 04

வெனிசுலா ஜனாதிபதி மதுரோ மற்றும் அவரது மனைவி ஆகியோர் அமெரிக்க படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த தகவலை அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் உறுதிப் படுத்தியுள்ளார்.

" வெனிசுலா நாட்டிற்கும் அதன் ஜனாதிபதி மதுரோவிற்கும் எதிராக அமெரிக்கா பெரிய அளவிலான தாக்குதலை வெற்றிகரமாக நடத்தியது.

வெனிசுலா ஜனாதிபதி மதுரோவும் அவரது மனைவியும் அமெரிக்க இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு நாட்டை விட்டு வெளியேற்றப்பட்டனர். இந்த நடவடிக்கை அமெரிக்க சட்ட அமுலாக்கத்துடன் இணைந்து செய்யப் பட்டது." - எனவும் ட்ரம்ப் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை, வெனிசுலா தலைநகரில் சில இடங்களில் அமெரிக்க படையினர் நேற்று காலை தாக்குதல் நடத்தியுள்ளனர். (அ)

# வருடம் பிறந்தவுடன் மக்கள் மீது மீண்டும் பொருளாதாரச் சுமை!

### ஐக்கிய மக்கள் சக்தி சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜன. 04

இந்த வருட ஆரம்பத்திலேயே நாட்டு மக்களுக்கு மீண்டும் பொருளாதார சுமையை ஏற்படுத்த முயற்சிப்பது நியாயமானதா என பாராளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி கேள்வி எழுப்பியுள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தற்போது அரசாங்கத்தில் உள்ளவர்கள் அன்று அரசாங்கத்தை பொறுப்பேற்கும் முன்னரும், அதிகாரத்தில் இல்லாத போதும், மின்சாரக் கட்டணத்தை குறைப்போம் என்று எதிர்க்கட்சியில் இருந்து கொண்டு சத்தமிட்டார்கள். மக்கள் படும் கஷ்டங்கள் அதிகம் என்றும் கூறினார்கள். மின்சாரக் கட்டணத்தை எவ்வாறு குறைக்கலாம் என்பது பற்றி ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க அப்போது மேடைக்கு மேடை பேசிக்கொண்டிருந்தார். ஆனால் இன்று 4 மாதங்கள் கடந்துவிட்ட நிலையிலும், அவர்கள் கூறிய விடயங்கள் எதுவும் நடக்கவில்லை என்பது மட்டுமல்ல, கூறியதற்கு மாற்றமான விடயங்களே நடக்கின்றன என்பதை நாங்கள் மிகவும் வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க அவர்களே! இந்தத் தீர்மானங்களை எடுப்பது உங்களுக்குத் தெரியாதா? இப்போது மின்சார சபை அதிகாரிகளினால் 11 வீதத்தினால் இந்த விலையை அதிகரிக்க வேண்டும் என்று கேட்கப்படுகின்ற விடயம் நியாயமானதா? இன்று நாட்டின் பெரும்பான்மையான மக்கள் கடந்த பொருளாதார நெருக்கடியினால் பாரிய துன்பத்திற்கு ஆளாகியுள்ளனர். தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளன. பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளது. இவ்வாறான ஒரு நேரத்தில், அவர்கள் செய்ய எத்தனிக்கும் விடயம் பற்றி நாங்கள் கேட்கிறோம். மின்சார சபைக்கு நட்டம் ஏற்படவில்லை, இலாபம் கிடைத்துள்ளது என்று மார்தட்டிய மின்சக்தி அமைச்சர், இந்த வருட ஆரம்பத்திலேயே நாட்டு மக்களுக்கு மீண்டும் பொருளாதார சுமையை ஏற்படுத்த முயற்சிப்பது நியாயமானதா? -என்றார். (அ)

# 2025 இல் 75 பில்லியன் ரூபா பெறுமதியுள்ள போதைப்பொருளை கைப்பற்றிய கடற்படை!

கொழும்பு, ஜன. 04

இலங்கை கடற்படை 2025 ஆம் ஆண்டில் நாடு முழுவதும் கடலோரப் பகுதிகளிலும் கடல் எல்லைகளிலும் மேற்கொண்ட விசேட நடவடிக்கைகளின் போது, சுமார் 75 பில்லியன் ரூபாய் பெறுமதியான போதைப்பொருட்களை கைப்பற்றி, 376 சந்தேக நபர்களை கைது செய்துள்ளது.

இந்த நடவடிக்கைகளில், 1,050 கிலோகிராம் ஹெரோயின், 2,982 கிலோகிராம் ஐஸ் போதைப் பொருள், 5,768 கிலோகிராம் வெளிநாட்டு கஞ்சா, 257 கிலோகிராம் உள்நாட்டு கஞ்சா, 16 இலட்சத்துக்கும் மேற்பட்ட போதை மாத்திரைகள், குஸ் மற்றும் பெருமளவு சட்டவிரோத சிகரெட்டுகள் கைப்பற்றப் பட்டுள்ளன.

மேலும், சட்டவிரோதமாக நாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட 67,200 கிலோகிராம் பீடி இலைகளும் மீட்கப்பட்டுள்ளன.

இந்த நடவடிக்கைகளின் போது பல உள்நாட்டு படகுகள் கைப்பற்றப்பட்டதுடன், சம்பந்தப்பட்ட சந்தேகநபர்கள் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

எதிர்கால தலைமுறைகளை போதைப்பொருள் அச்சுறுத்தலிலிருந்து பாதுகாக்கும் நோக்கில் முன்னெடுக்கப்படும் முழு நாடும் ஒன்றா என்ற தேசிய வேலைத்திட்டத்திற்கு இலங்கை கடற்படை தொடர்ந்தும் முக்கிய பங்களிப்பை வழங்கி வருவதாக தெரிவித்துள்ளது. (அ)

# 3 மில்லியன் சுற்றுலாப் பயணிகளை 2026 இல் இலக்கு வைக்கும் இலங்கை!

கொழும்பு, ஜன. 04

2026 ஆம் ஆண்டில் 3 மில்லியன் சுற்றுலாப் பயணிகளை இலக்காகக் கொண்டிருப்பதாக, இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் புத்திக ஹேவாவசம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

2025 ஆம் ஆண்டில் 2.4 மில்லியன் சுற்றுலாப் பயணிகள் என்ற இலக்கை எட்டியுள்ளோம்.

இந்த ஆண்டில் நாங்கள் 3 மில்லியன் சுற்றுலாப் பயணிகளை அடைய இலக்கு வைத்துள்ளோம்.

மேலும் 5 பில்லியன் டொலர் வருவாயை எட்ட இலக்கு வைத்துள்ளோம். அது ஒரு சவாலான எண்ணிக்கையாக இருக்கலாம்.

ஆரம்பத்தில் 2025 ஆம் ஆண்டில் 3 மில்லியன் சுற்றுலாப் பயணிகளை இலக்காக வைத்த போதும், பின்னர் அது 2.4 மில்லியனாகக் குறைக்கப்பட்டது. 2025 ஆம் ஆண்டில் முதல் வார த்தில் சூறாவளி தாக்கம் இருந்தபோதிலும், டிசம்பர் மாதத்தின் பிற்பகுதியில் வருகை அதிகரித்தது - என்றார். (அ)

# அச்சுறுத்தல், கைதுகள் நடந்தாலும் உரிமைக்கான போராட்டம் தொடரும்

### வேலன் சுவாமி கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஜன. 04

எவ்வளவு தடைகள் வந்தாலும் அச்சுறுத்தல் வந்தாலும் கைதுகள் செய்தாலும் எங்களது உரிமைக்கான போராட்டம் தொடரும் என்று வேலன் சுவாமி தெரிவித்துள்ளார்.

தையிட்டியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட விகாரைக்கு எதிராக நேற்று மக்கள் எழுச்சிப் போராட்டம் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் இதனைத் தெரிவித்தார்.

தையிட்டியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட திஸ்ஸ விகாரைக்கு எதிராக அண்மைக்காலமாக போராட்டம் இடம்பெற்று வருகின்றது. மக்களின் காணிகளை விடுவிக்குமாறும் விகாரையை அகற்றுமாறு கோரி அப்பகுதி மக்களால் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இந்த நிலையில் நேற்றும் மக்கள் எழுச்சிப் போராட்டம் இடம்பெற்றது. (அ)

# தையிட்டி விகாரையை அகற்ற கோரி லண்டனிலும் கண்டன ஆர்ப்பாட்டம்!




லண்டன், ஜன. 04

யாழ்ப்பாணம் தையிட்டியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட விகாரைக்கு எதி ராக தமிழ் மக்க ளால் முன்னெ டுக்கப்படும் போராட்டத்தில் மதகுரு வேலன் சுவாமி உட்பட 5 தமிழர்கள் பொலிஸாரால் காட்டுமிராண்டித் தனமாக தாக்கப்பட்டு கைது செய்யப்பட்டதனை கண்டித்து பிரித்தானியாவில் பாரிய கண்டன ஆர்ப்பாட்டம் நேற்று இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் தையிட்டியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட விகாரைக்கு எதிராக மக்களால் முன்னெடுக்கப்படும் தொடர் போராட்டத்தில் கடந்த டிசெம்பர் 21ஆம் திகதி அன்று மதகுரு வேலன் சுவாமி உட்பட 5 தமிழர்கள் பொலிஸாரால் காட்டுமிராண்டித் தனமாக தாக்கப்பட்டு கைது செய்யப்பட்டதனை கண்டித்தும், தையிட்டியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட விகாரையை அகற்றக் கோரியும் நேற்று சனிக்கிழமை லண்டன் டவுனிங் பகுதியில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் இடம்பெற்றிருந்தது.

தமிழர்கள் ஓரணியில் ஒன்றுபட்டு உரிமைக்காய் குரல் கொடுப்போம் எனும் தொனிப்பொருளோடு ஆரம்பிக்கப்பட்ட குறித்த போராட்டத்தில் நூற்றுக் கணக்கான புலம்பெயர் உறவுகள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# கட்டைக்காட்டுடன் நிறுத்தாமல் கேவில்வரை பஸ் சேவை தேவை

### ரஜீவன் எம்.பி. வலியுறுத்து

யாழ்ப்பா ணம், ஜன. 04

வடமராட்சி கிழக்கில் சேவையில் ஈடுபடும் பேருந்துகளை மக்களின் நலன் கருதி கேவில்வரை செல்லுமாறு வடமராட்சி கிழக்கு பிரதேச ஒருங்கிணைப்பு தலைவரும்,பாராளுமன்ற உறுப்பினருமான ரஜீவன் பணித்துள்ளார் .

கேவில் நித்தியவெட்டை பிரதான வீதி புனரமைப்பிற்கான அடிக்கல்வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்ட போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

ஒரு சில நாட்கள் கேவில் வரை பேருந்துகள் சேவையில் ஈடுபட்டு பின்பு அதை கட்டைக்காட்டுடன் நிறுத்திக் கொள்வதாக ரஜீவன் எம்.பியிடம் கேள்வி எழுப்பப் பட்டது

அவ்வாறு ஒரு சில நாட்கள் கேவில் வரை சேவையில் ஈடுபடுவது தவறு என்றும் உரியவர்கள் உரிய முறையில் மக்களுக்கு சேவை வழங்க வேண்டும் என்றும் குறித்த வீதி புனரமைப்பிற்கு பின் போக்குவரத்து தேவை முழுமையாக பூர்த்தி அடையும் என்றும் ரஜீவன் எம்.பி. தெரிவித்தார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 04.01.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிடெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org